# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 04 வெள்ளிக்கிழமை (20.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 267


# ஐ.நாவுடன் முரண்பாடு இருப்பினும் இணைந்து செயற்படவே விருப்பம்

## அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சொல்கிறார் இப்படி!



கொழும்பு, ஓகஸ்ட் 20

ஐக்கிய நாடுகள் சபையுடன் எமது அரசாங்கத்துக்குச் சில முரண்பாடுகள் உள்ளன. எனினும் அதன் அங்கத்துவ நாடென்ற வகையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அதனுடன் இணைந்து செயற்பட விரும்புகிறோம்.

போருக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்கிய உதவிக்கு எமது நன்றிகள். இப்போது சாதித்த காரியங்களை ஐ.நாவினதும் மனித நேய பணியாளர்களினதும் உதவியின்றி எம்மால் சாதித்திருக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ. (24ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் வவுனியாவைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் நால்வர் கைது

கொழும்பு, ஓக. 20

கண்டி மாவட்டம், அலுவத்துகொடப் பிரதேசத்தில் வவுனியாவைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்களைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கண்டியில் நடைபெற்று வரும் எசல பெரஹராவை பார்ப்பதற்காக இவர்கள் வந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய அடையாளப்படுத்தல் ஆவணங்களைக் கொண்டிருக்காமை காரணமாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்

(24ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இடம்பெயர்ந்தோருக்கு உரிய முறையில் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும்

## இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

வடக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உரிய முறையில் மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவேண்டும்.

- இவ்வாறு இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதி நீல் பூனே தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சர்வதேச மனித நேய தின வைபத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.



அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு வழங்கப்படும். வடக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உரிய முறையில் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் தமிழர்களின் சட்டசேவையில் தாமதம்

கொழும்பு, ஓக. 20

சன் சீ கப்பலில் கனடாவுக்குச் சென்றுள்ள இலங்கை அகதிகளின் காரணமாக அந்த நாட்டின் சட்ட உதவிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய சட்டசேவை அமைப்பு, வருடம் ஒன்றுக்கு 700 பேருக்கு சட்ட உதவிகளை வழங்கி வருகிறது. எனினும் 490 இலங்கை அகதிகள் ஒரேநாளில் கடனா

(24ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும்

## பொன்சேகாவுக்கு ஆதரவாக ஐ.தே.க. குரல் கொடுக்கும்

கொழும்பு, ஓக. 20

சரத் பொன்சேகா எம்.பிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் பட்டங்களைப் பறித்த இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக சர்வதேச மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு விவரங்களைத் தெரிவித்து தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ந்து போராட நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு

(24ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 20

துறைமுகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களின் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நண்பகல் நாடாளுமன்றத்துக்கு வருகை செய்தார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமர வீரவுடன் ஜனாதிபதி சிறிதுநேரம் கலந்து ரையாடினார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# அடுத்த இராணுவ நீதிமன்றத் தீர்ப்பு சிறைத் தண்டனையாம்; ஆரூடம் கூறுகிறார் முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா!



## ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டு விட்டது என்கிறார்

கொழும்பு, ஓக. 20

இரண்டாவது இராணுவ நீதிமன்றில் தமக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆரூடம் தெரிவித்துள்ளார்.

அது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகள் ஏற்கனவே முடிவு எடுத்துள்ளன என்றும் அப்படி ஒரு தீர்ப்பு வந்தாலும் தாம் கவலைப்படப்போவதில்லை என்றும் (24ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மாவின் பாவனை 40 சதவீதத்தால் வீழ்ச்சி

கொழும்பு, ஓக, 20

கோதுமை மா பாவனையால் நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. 2005ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நாட்டில் கோதுமைப் பாவனை 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் கோதுமைப் பாவனையால் ஏற்

(24ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளை பூர்த்தி செய்ய 60 பில்லியன் ரூபா தேவை

## ஆசிய அபிவிருத்தி வங்கி உப தலைவரிடம் இமெல்டா வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். குடாநாட்டின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்திசெய்ய 60 பில்லியன் ரூபா தேவை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் சியாவோ யூ சாவோவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் சியாவோ யூ சாவோ தலைமையிலான குழுவினர், குடாநாட்டின் பொது நூல் நிலையம், கோட்டை என்பவற்றை பார்வையிட்டனர். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடந்த கலந்துரையாடலில் மாவட்ட செயலக உத்தியோத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் பங்குகொண்டனர்.

கலந்துரையாடலின் போதே அரசாங்க அதிபர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

(24ஆம் புக்கம் பார்க்க)

### கொக்குவில் பிரம்படிப் பகுதியில்

## படையினர் பாதுகாப்புடன் நேற்று முழுநாளும் சிங்கள வர்த்தகர்கள் வியாபாரம்

யாழ்ப்பாணம், ஓக. 20

கொக்குவில் பிரம்படி ஸ்ரேசன் றோட் பகுதியில் நேற்று இராணுவப் பாதுகாப்புடன் சிங்கள வர்த்தகர்கள் திடீர் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை தொடக்கம் மாலை வரை 6 இற்கும் மேற்பட்ட கடைகளை அமைத்து மலிவு விலைகளில் பொருள்

(24ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!

நல்லைக் கந்தனின் உற்சவக் காலத் திருக்காட்சிகள் தினமும் உங்கள் உதயனின் வலைத் தளத்திலும்....

www.uthayan.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**JOB Guaranteed "Certified Medical Assistant"**

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள். **[புதிய பிரிவு 12/09/2010].குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே.**

**மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02)** KU

கல்வித்தகமை: G.C.E O/L நான்கு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி.



M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: **Lava Hospitals**
சான்றிதழை இணைந்து வழங்குவோர்: **KNOWLEDGE UNIVERSE®** Malaysian Soft Skills and ICT Development Centre

Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info

# காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக 20

வலி.வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணம் தொடர்பான காலங்கடந்த பதிவுகளை மேற்கொள்வதற்கான முன்னோடி நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை அளவெட்டி மகாஜன சபை மண்டபத்திலும், எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை இளவாலை கிராம அபிவிருத்தி சபைக் கட்டடத்திலும் இடம்பெறவுள்ளன.

இதில் கிராம அலுவலர் பிரிவுகளான அளவெட்டி வடக்கு (ஜே/215), அளவெட்டி மத்தி (ஜே/216), அளவெட்டி கிழக்கு (ஜே/217), கணேஸ்வரம் (ஜே/218), அளவெட்டி தெற்கு (ஜே/219), அளவெட்டி மேற்கு (ஜே/220) ஆகியவற்றுக்குரிய இந்த நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமை அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இளவாலை வடக்கு (ஜே/221), இளவாலை வடமேற்கு (ஜே/222), வித்தகபுரம் (ஜே/223), பன்னாலை (ஜே/224) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 23ஆம் திகதி இளவாலை கிராம அபிவிருத்தி சபை கட்டத்தில் இடம்பெறவுள்ளன.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டமும், தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் இணைந்து இந்த நடமாடும் சேவையினை நடத்தவுள்ளன.

இதுவரையும் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் தமது பிரிவு கிராம சேவையாளருடனேயோ அல்லது தெல்லிப்பளை பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளருடனேயோ தொடர்புகொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (த-14)

## தவறிவிட்டது

ஏ-9 வீதியில் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 18.08.2010 அன்று மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு (இலMG 8364) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0778264731 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டன

மல்லாவியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 18.08.2010 ஆம் திகதி தனியார் பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த போது ஒரு தொகைப் பணமும், சங்கிலியும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0773564245 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

**மீண்டும் யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=
**கால் ருரிஸ்ற் இன்**
392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி/570041) தொ.பே: 071 9315664, 0777569205

**சென்றல் போன் சொப் திறப்புவிழா**

(1) யாழ்ப்பாணத்தில் இன்று திறப்பு விழாக் காணும் **சென்றல் போன் சொப் விற்பனை நிலையம்** தனது வாடிக்கையாளர்களுக்கு இலகுவானதும் கண்ணியமானதுமான சேவையை வழங்கும் நோக்கில் 249, ஸ்ரான்லி வீதி (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தலைமைக் கரியாலயத்திற்கு அருகில்) யாழ்ப்பாணத்தில் உதயமாகிறது.

(2) யாழ்.நகரில் டயலொக் ஆரம்பித்த நாள்முதல் வாடிக்கையாளர்களுக்கு சேவை புரிந்த அனுபவம் மிக்க திருத்துனர்களால் சிறந்த முறையில் கைத்தொலைபேசிகள் திருத்திக் கொடுக்கப்படுவதுடன் லொக் உடைத்தல், சொப்வெயர் ஏற்றுதல், மற்றும் தொலைபேசி உதிரிப்பாகங்களையும் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

★ விற்பனைக்குப் பிந்திய சேவை
★ விற்பனைக்கு பிந்திய உத்தரவாதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நேரம்:- காலை 9.00 - 10.00am இன்று (20.08.2010) வெள்ளிக்கிழமை





சென்றல் போன் சொப்,
249, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களுக்கு: 071 8475326

**தேவை தேவை தேவை**

பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடம் உண்டு

**(1) Casher Hellper (2) Sales Boys/Girls. (3) Accounts Assistant**

இன்று(20.08.2010) தொடக்கம் காலை9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை கீழ்க்கணப்படும் விலாசத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

அன்னை நாகபூட்சிற்றி,
175, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

மேலதிக தொடர்புகளுக்கு:
T.P: 0112391257

# மரண அறிவித்தல்கள்

## வ.சி.ஐயாத்துரை (கண்டியான்)



அல்வாய் தெற்கைச் சேர்ந்த வ.சி. ஐயாத்துரை (கண்டியான்) நேற்று (19.08.2010) வியாழக்கிழமை மாலை5 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மகனும் இராமலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் நா.வசந்தசெல்வி (சுவிஸ்), துரைரத்தினம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான வ.சி.மாணிக்கம் (கண்டியான்), கு.தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரனும் து.செல்வம், சி.நாகரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் மகிழினி, அபிலாஷ், சுவிஸ் வாழ் நிரூஷிதன், தனுஷன், அகல்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2010) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் பிரேமசீமா இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரேமசீமா,
அல்வாய் தெற்கு,
அல்வாய். (சி/570057)

தகவல்:
நாகரத்தினம் வசந்தசெல்வி (மகள்-சுவிஸ்)
தொ.பே: 0041417610186
ஐயாத்துரை நாகரத்தினம் (மகன்)
தொ.பே: 0777536643

## சின்னத்துரை பத்மநாதன்



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பத்மநாதன் (ஓய்வு பெற்ற விவசாயப் போதனாசிரியர்) நேற்று (19.08.2010) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் அருமை மகனும் சோமசுந்தரம்-காலஞ்சென்ற திலவதி தம்பதியரின் மருமகனும் கமலாம்பிகை (சாந்தி) யின் அன்புக் கணவரும் துஷாந்தன் (லண்டன்), ஷாமினி (கொழும்பு), யசோதினி, கம்வுவாகினி (சிறி இராமசந்திரா பல்கலைக்கழகம், இந்தியா) ஆகியோரின் தந்தையும் ஜெயராஜின் (IT Manager Geastner, கொழும்பு) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

197, கந்தர்மடம்,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (102254)

தகவல்:
மனைவி.

# வரலட்சுமி விரதம்

வேரவில், ஓக 20

வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானம் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகப் பெருவிழாவின் பின்னர் இப்பதி வாழ்மக்களின் வழிபா[illegible] சிறப்புற நடைபெற்று வருகின்ற[illegible]

இன்[illegible] வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதமும், காப்பு நூல் வழங்குதல் என்பன நடைபெறவுள்ளன. (ஐ-496)

* * *

யாழ்ப்பாணம், ஓக 20

சாவகச்சேரி அமிர்தபாசணி சமேத சந்திரசேகர வாரிவனநாத சுவாமி சிவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் விசேட பூசை வழிபாடுகள் வரலட்சுமி கொலுவிருந்து விரத நூல்கள் வழங்கல் என்பன நடைபெறவுள்ளன. (ஐ-496)

# யாழ்.ஆரியகுளம் விரைவில் நவீனமாகும்

யாழ்ப்பாணம், ஓக 20

யாழ்.நகரில் தற்போது அசுத்தமடைந்த நிலையில் காணப்படும் ஆரிய குளத்தைச் சுத்தஞ்செய்து அதனையும் அதனை அண்டிய பகுதியையும் செப்பனிட்டு இப்பகுதியை நவீனமயமாக்குவதற்கான நடவடிக்கைகள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

அப்பகுதிக்குச் சென்று சுற்றிலும் ஆராய்ந்துள்ள அமைச்சர் வெகு விரைவில் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ஐ)

# 71 ஆவது ஆண்டு விழா-2010

எமது கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 71 ஆவது ஆண்டு விழா இம்முறை இரண்டு தினங்களாக நினைவு கூரப்படுகிறது. எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 6.30 மணிக்கு திருவிருந்து வழிபாடுடன் ஆரம்பமாகும். இவ்வாண்டு விழா தினங்களில் கடந்த கால ஆச்சிரம வாழ்க்கை வரலாறு, கலந்துரையாடல், மக்கள் மன்றாட்டு, கதாப்பிரசங்கம், மரம்நடுதல், கலைநிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் ஆச்சிரம நண்பர்கள், விசுவாசிகள், தொண்டர்கள் யாவரையும் கலந்து கடவுள் இன்னொரு புதிய ஆண்டை ஆச்சிரம வாழ்வில் தந்தமைக்காக நன்றி செலுத்த அழைக்கின்றோம்.

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்,
சுன்னாகம். (102242)

ஆச்சிரம பணியில்
அருட்சகோதரன்
செ.யேக்கப் லக்சன்

**பெற்றோர்களே!**

முடிந்துவிட்டது என்று ஏமாற்றம் வேண்டாம்.
வந்துவிட்டது தரம்-05.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு இறுதிநேரத்தில் முற்றிலும் எதிர்பார்க்கக் கூடிய 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் 120/=

18.08.2010 உதயனில் வெளியாகிய எமது விளம்பரத்தில் வினாத்தாள் பெற்றுக்கொள்ளும் புத்தகசாலைகளின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

2010ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.
"வெற்றி நிச்சயம்"

கொழும்பு எக்ஸ் பிறஸ் வெளியீடு
(102255) தொ.பே: 0778448763, 021 3216922

**பதவி வெற்றிடங்கள்**

யாழ்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் உணவகத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை. கவர்சிகரமான சம்பளம், அலவன்ஸ், தங்குமிட வசதி என்பன வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் உங்களின் சுய விபரங்களுடன் 20/08/2010 வரும் வெள்ளிக்கிழமை எம்மை நேரில் சந்திக்கவும்.

1. சமையல்காரர்/Cook (ஆண்/பெண்)
   யாழ் உணவுகள் சமைக்கத்தெரிந்தவர்கள் - தகமை : முன் அனுபவம் உள்ளவர்கள்
2. சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
   காய்கறி நறுக்குதல், பாத்திரம் கழுவுபவர்கள், சுத்தப்படுத்துவோர்
3. உதவியாளர்
   பார்சல் கட்டுதல், உணவுபரிமாறுதல்

மேலதிக விபரங்களுக்கு:
No.15 2/1, சிறாம்பியடி ஒழுங்கை (ஆரிய குளச் சந்திக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம், தொலைபேசி : 021-2224550, 0777585913, 0777222422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உயர் கல்வி தனியார் துறைக்கு

நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவும் திட்டம் ஒன்றை உயர்கல்வித்துறை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா கையில் எடுத்துள்ளார். தமது உத்தேச திட்டம் குறித்து அவர் நாடாளுமன்றத்திலும் தகவல் வெளியிட்டிருக்கிறார். அதாவது தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவ வகை செய்யும் சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதில் உயர்கல்வி அமைச்சு இப்போது வேகமாகச் செயற்படுவதாக திஸநாயக்க நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

உலகின் ஏனைய பல நாடுகளில் உள்ளது போன்று தனியார் பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவது குறித்து இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் கொம்பனிகள் சட்டத்தின்கீழ் வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கல்வியை இங்கிருந்து எமது மாணவர்கள் கற்றுப் பட்டம் பெறும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த வகையில் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் பட்டதாரி, டிப்ளோமா, சான்றிதழ் பயிற்சிகளை இங்கிருந்து பயிற்றுவிப்பதற்கு எழுபத்தெட்டு நிறுவனங்களுக்கு உத்தரவுப் பத்திரம் (லைசென்ஸ்) அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த எழுபத்தெட்டு நிறுவனங்களும் உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதன் பயனாக எமது மாணவர்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளாகவும், டிப்ளோமாதாரிகளாகவும் சித்தி பெற்று வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர்.

உயர்கல்வி அமைச்சர் நாடாளுமன்றில் கடந்த புதனன்று வெளியிட்ட தகவலின் பிரகாரம் உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 78 நிறுவனங்களில் 26 மட்டுமே வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டப் பயிற்சிக்கு மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பித்து சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் பரீட்சைகளுக்குத் தயார்ப்படுத்துகின்றன; பரீட்சைக்குத் தோற்ற வழிசெய்கின்றன.

எனினும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள் மூலம் எத்தனை மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். அவ்வாறு தோற்றுவோரில் எத்தனை பேர் சித்தி அடைகிறார்கள் என்ற விவரங்கள் எதுவும் ஒழுங்காகத் திரட்டப்படுவதில்லை. இந்தத் தகவலையும் உயர் கல்வி அமைச்சர் திஸநாயகாவே வெளிப்படுத்தி உள்ளார்.

அது ஒருபுறமிருக்க, இப்போதெல்லாம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கு என்றும், வசதியுள்ள மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கென்றும், அவர்களுக்கு விஸா மற்றும் பயண வசதிகளைச் செய்வதற்கென்றும் பல கல்விசார் நிறுவனங்கள் இயங்குகின்றன.

அந்த நிறுவனங்களும் எமது மாணவர்களை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைத்து அவர்கள் பட்டதாரிகளாகவும், டிப்ளோமாதாரிகளாகவும் பயின்றுகொள்ள வசதி செய்கின்றன. அவற்றில் எத்தனை நிறுவனங்கள் உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டவை என்ற விவரம் அரசினால் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், பல பெற்றோருக்குக் கட்டுபடியாகாத மிகப் பெரும்தொகைப் பணச் செலவில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில்வதற்குப் பதிலாக -

எமது நாட்டிலேயே தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ அமைச்சர் எடுத்திருக்கும் முடிவு வரவேற்கத்தக்கது. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் அந்தந்த நாடுகளின் உயர் கல்வி மேம்பாட்டுக்குப் பெரிதும் பங்காற்றி வருகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த சில வருடங்களில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் நற்பயனாகப் பண வசதி இல்லாத குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் பல்கலைக் கழகக் கல்விவரை பெற்று முன்னேறுவதற்கும், நாட்டின் வளர்ச்சியில் பங்கு கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இலவசக் கல்வியின் சிறந்த பலாபலனை நாடு இப்போது நிறைவுடன் அனுபவிக்கக்கூடியதாக உள்ளது. நாட்டின் அபிவிருத்திக்கும் அதனூடான முன்னேற்றத்துக்கும் இலவசக் கல்வி இப்போதும் பெரும் பங்காற்றி வருவது சிலாகித்துக் கூறப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதற்குச் சமாந்தரமாகத் தனியார் உயர்கல்வியை நாட்டில் உருவாக்குவதனால் சிறந்த பயன்களைப் பெறலாம். உலக நாடுகள் முன்னேறிச் செல்லும் வேகத்துக்கு சராசரி அளவு இடம்பிடித்தேனும் நாம் ஈடுகொடுக்க வேண்டுமெனில், தனியார் உயர் கல்வி இக் கால கட்டத்தில் வேண்டப்படும் ஒன்றாகும்.

தனியார் கல்விச்சாலைகள் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவதற்கு வகை செய்வதும் அவற்றை நெறிப்படுத்துவதும் அரசாங்கத்தின் கடும் கட்டுப்பாடுகளற்ற நட்புறவான ஒரு பின்புலத்தோடு அமையுமானால் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவின் புதிய திட்டம் குறித்து புலம்பவோ அல்லது குழம்பவோ ஏதுமில்லை.

# தனியார் பல்கலைகளை நிறுவ அனுமதிக்கும் புதிய சட்ட மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது

## நாடாளுமன்றில் உயர்கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 20

தனியார்துறை பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கான சட்டங்களை தயாரிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பாக ஐ.தே.கட்சியினர் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்ட பதிலை வழங்கினார்.

அமைச்சர் திசாநாயக்க மேலும் தெரிவிக்கையில்:-

இதுவரைக்கும் நாட்டில் எந்த ஒரு தனியார் பல்கலைக்கழகமும் நிறுவப்படவில்லை. ஆனால் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் பட்டங்களை வழங்குவதற்கென 78 நிறுவனங்கள் பதிவு செய்து கொண்டுள்ளன. இவைகளில் 26 நிறுவனங்கள் மாத்திரதே பாடங்களை நடத்துகின்றன. ஏனையவை பெயருக்காக பெயர்ப் பலகைகளை தொங்க விட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் யாவும் ஒழுங்குக்கு கொண்டுவரப்படும் என்றார் - அமைச்சர்.

வெளிநாட்டில் கல்விக்காகச் செல்லும் மாணவர்கள் தொடர்பான பதிவுகளும் ஒழுங்காக இல்லையென்றார். அதற்கான பொறிமுறை எதுவும் இல்லை. நாங்கள் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு இருக்கிறோம் என்றார். (ப)

### போர் காரணமாக அனுமதி பெறமுடியாத

# 500 இடம்பெயர்ந்த மாணவருக்கு பல்கலைக்கழகங்களில் மீள்பதிவு

கொழும்பு, ஓக. 20

பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்கு விண்ணப்பித்த போதிலும் பல்கலைகழகங்களில் நுழைய முடியாத யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 500 இடம்பெயர்ந்த மாணவர்கள் மீள் பதிவு செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியதைத் தொடர்ந்தே வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இத்தகைய பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படவிருக்கிறது.

இந்த மாணவர்கள் உரிய தகைமைகளைக் கொண்டிருந்த போதிலும் போர் காரணமாக தமது பதிவுகளை மேற்கொள்ளமுடியவில்லை.

குறித்த மாணவர்களின் விண்ணப்பங்களைப் பெற்று பரிசீலித்த பின் தாமதமின்றி பல்கலைக்கழக அனுமதியை அவர்களுக்கு வழங்குமாறு வடக்குக் கிழக்கிலுள்ள பல்கலைக் கழங்களுக்கு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க உத்தரவிட்டுள்ளார். (க)

## கிறிஸ்தவ சேவ ஆச்சிரம 71 ஆவது ஆண்டு விழா

சுன்னாகம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 71 ஆவது ஆண்டு விழா இம்முறை இரண்டு தினங்களாக நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இருதினங்களும் காலை 6.30 மணிக்கு திருவிருந்து வழிபாட்டுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

விழாவில் கடந்தகால ஆச்சிரம வாழ்க்கை வரலாறு, கலந்துயாடல்கள், மக்கள் மன்றாட்டு, கதாப்பிரசங்கம், மரம் நடுதல், கலைநிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-10)

# 'மொபெட்' மோட்டார் சைக்கிள்களுக்கான பதிவுகளை மேற்கொள்ள டிசெ. 31 வரை அவகாசம்

கொழும்பு, ஓக. 20

'மொபெட்' (49 சிசி) ரக மோட்டார் சைக்கிள்களுக்கான பதிவுகளை மேற்கொள்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு அது தொடர்பாக எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் மொபெட் மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக சாரதி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் தலைக் கவசங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாளுக்குநாள் அதிகரிக்கும் வீதி விபத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதன் காரணமாகவே இவ்வித மொபெட் மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக இந்த நிபந்தனைகள் விதிப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தீர்மானம் மேற்கொண்டுள்ளார்.

2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திருத்தச் சட்டத்துக்கு அமைய, மொபெட் மோட்டார் சைக்கிள்களுக்கான பதிவு, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் தலைக்கவசங்கள் அணிதல் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

மேலும் இறக்குமதி ஆவணங்கள் இல்லாத பழைய மொபெட் மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும்போது மேற்படி மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர் மூலம் சத்தியக் கடதாசியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் அதைப் பயன்படுத்துவதை குறித்த பிரதேசத்துக்குரியப் பொறுப்பான கிராம அலுவலரிடமிருந்து உறுதிப்படுத்தும் பத்திரமொன்றையும் உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரான ஜெனரல் டீ.டீ.எல் தர்மப்பிரிய தெரிவித்தார். (எ)

# புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஓக. 20

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்து விட்டன என்று யாழ். மேலதிக கல்விப் பணிப் பாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் தற்போது நடைபெற்று வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்களும் கடந்த புதன் கிழமை எடுத்து வரப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

# சங்குப்பிட்டி பால நிர்மாணம் துரிதம் இரு மாதங்களில் பணிகள் பூர்த்தியாகும்

யாழ்ப்பாணம், ஓக.20

கேரதீவு-சங்குப்பிட்டி பால வேலைகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அளவில் முடிவடையும் என்று வேலைத்திட்ட முகாமையாளர் ஜீ.ஐ.சிறிசேன வடமாகாண ஆளுநரிடம் தெரியப்படுத்தி உள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் கேரதீவுப் பகுதிக்குச் சென்ற ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அங்குஇடம்பெற்று வரும் வேலைகளை பார்வையிட்டார்.

இப்பால வேலைகள் 900 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதன் நீளம் 222 மீற்றர் ஆகும். இப்பால வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 55 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சிய 45 சத வீதமான வேலைகளும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் முடிவடையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைகளில் நாவற்குழியைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-319)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 05 | 21.08.2010 சனிக்கிழமை |
| திதி: | துவாதசி மாலை05.50 வரை |
| நட்சத்திரம் | பூராடம் பி.ப 3.24 வரை |
| சுபநேரம் | 03.05-04.35 வரை |
| ராகுகாலம் | 09.35-10.35 வரை |

### பல்கலைக்கழகங்களில்

# பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்களின் வெற்றிடங்களுக்கு புதியவர்களைச் சேர்க்க ஏற்பாடு

கொழும்பு, ஓக. 20

பல்கலைக்கழங்களில் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களின் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் புதியமாணவர்களைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பதிவுகள் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

2009/ 2010 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழகக் கற்கை நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு அவர்களுக்குரிய பதிவுகள் அந்ததப் பல்லைக்கழகங்களில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் தமது கற்கை நெறிக்குரிய பதிவுகளை மேற்கொள்ளாதவர்களது வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பல்கலைக்கழக அனு மதிக்குத் தகுதிபெற்ற ஏனைய மாண வர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள் ளனர்.

இவர்களுக்கான அறிவுறுத்தல், கடிதம் மூலம் மானியங்கள் ஆணைக்குழுவால் அனுப்பப்பட்டு அவர்களுக்கான பதிவுகள் இன்றுமுதல் ஆரம் பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத்தங்கல் முகாம் கற்றல் வள நிலையத்துக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஓக 20

வடமராட்சி கிழக்கு, குடத்தனை இடைத்தங்கல் முகாமில் அமைக்கப்பட்டுள்ள கற்றல் வள நிலையத்துக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2 லட்சத்து 11 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

அமைச்சரின் யாழ்.செயலகத்தில் வைத்து கற்றல் வள நிலைய நிர்வாகியான உதயபாஸ்கரனிடம் காசோலையை அமைச்சர் நேற்றுக் கையளித்தார்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக இந்தப் பணத்தைக் கொண்டு கணனித் தொகுதியொன்றை கொள்வனவு செய்வதுடன் ஆசிரியர்களுக்கான சம்பளம் மற்றும் மாணவர்களின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு பசும்பால் கொள்வனவுக்குமென இப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

குடத்தனை இடைத்தங்கல் முகாமில் அமையப்பெற்றுள்ள இந்தக் கற்றல் வள நிலைய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே 2லட்சத்து 65 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## உலகப் பெண் சாரணியர் நூற்றாண்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக 20

உலகப் பெண் சாரணியர் அமைப்பின் நூற்றாண்டை ஒட்டிய நிகழ்வுகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பண்டத்தரிப்பு பெண்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளன.

'வடக்கு-தெற்கு நண்பர்கள்' என்ற தொனிப்பொருளில் இரு பிரதேசங்களையும் சேர்ந்த இருநூறு பெண்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பர்.

பதிவுசெய்யப்பட்ட சாரணிய வழிகாட்டுநர்கள், பெண் சாரணியர்கள் ஆகியோரை இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பெண் சாரணிய வடக்கு மாகாண ஆணையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம் கேட்டுள்ளார். (ஒ-ஐ)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
FACULTY OF MEDICINE
Academic Programme

The Introductory Programme for the New Batch of Medical Students (33 rd 2010) will recommence on 23.08.2010.

Registrar
19.08.2010 (C/570049)



### ஆசிரியை தேவை

யாழ்.நாவலர் வீதியிலுள்ள வீட்டுக்கு வருகைதந்து தரம் 9,4 பிள்ளைகளுக்குக் கணிதம், ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியை தேவை.
தொ.பே: 021 222 7442

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 31 வயது, 8 இல் செவ்வாய், 72 கிரகபாவமுடைய பிரபல தனியார் நிறுவனமொன்றில் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் மாதம் 25000/= வருமானம்பெறும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 4058, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

கணக்காளர், சிட்டை எழுதுநர், விற்பனையாளர், காசாளர் முன் அனுபவமுள்ளவர்கள் ஆண், பெண் இருபாலாரும் நேரில் வரவும். **ரோப்பர் ஹவுஸ்,** 300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

QA-XXXX முச்சக்கர வண்டி உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 0772334198
021-300 8986

### வேலையாள்கள்தேவை

பெண்களுக்கான ஆடை விற்பனை நிலையத்தில் பணிபுரிவதற்குப் பெண் பிள்ளைகள் தேவை. நல்லூர், கொக்குவில், திருநெல்வேலி, யாழ்.நகரை அண்டிய பிரதேசங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 305, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 0774425321

### உடன் விற்பனைக்குண்டு

தனியார் நிறுவன முகாமையாளரின் சொந்த பாவனையிலுள்ள HM தொடரிலக்கமுள்ள Toyota Townace CR-41 விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0772205951



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
பொதுப் பட்டமளிப்பு-ஒக்ரோபர் 2010
அறிவித்தல்

மேற்படி விடயம் தொடர்பாக 13.08.2010 அன்று உதயன், தினக்குரல், வலம்புரி, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரத்தில் முதலாவது பந்தியின் இரண்டாவது வசனத்தை கீழ்வருமாறு அமைத்து வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பின்வரும் தேர்வுகளில் 2009, 2010 ஆம் ஆண்டுகளில் சித்தியடைந்து பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 05.09.2010 இற்கு முன்னர் தமது வேண்டுகோளை அறுவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். ஏற்கனவே 2010 மார்ச் 26,27,28 ஆம் திகதிகளில் நடைபெற்ற பட்டமளிப்புக்கு தகுதிபெற்றவர்கள் இப்பட்டமளிப்புக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

பதிவாளர்
19.08.2010 (சி/570048)


## மரண அறிவித்தல்

### செல்லையா இரத்தினம்



மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இரத்தினம் 18.08.2010 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்-பூமணி தம்பதியரின் அருமை மருமகனும் தேவியின் அன்புக் கணவரும் வீரசிங்கம், அமரர் வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரனும் முரளிதரன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பானுரேகா, உதயகுமார் ஆகியோரின் மாமனாரும் அம்சாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம். (102237)

### பெயர் மாற்றம்

இத்தால் சகலரும் அறிய, உடுவில் காளி கோயிலடியைச் சேர்ந்த நடராசா இராசகுமாரி ஆகிய நான் எனது பெயரை **நடராசா பாமினி** என மாற்றம் செய்துள்ளேன். இன்று (20.08.2010) வெள்ளிக் கிழமையில் இருந்து நான் சகல ஆவணங்களிலும் நடராசா பாமினி எனவே கையொப்பம் இடுவேன் என அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(102232) **நடராசா பாமினி.**

## மரண அறிவித்தல்கள்

### சடையர் கார்த்திகேசு



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பெரியரசடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சடையர் கார்த்திகேசு நேற்று (19.08.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் நாகம்மாவின் பாசமிகு தந்தையும் நாகமுத்து தங்கவடிவேலின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மாமனும் குணமணி தம்பிராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), நவரட்ணவேல், புளோரன்ஸ் ஆகியோரின் பேரனும் சிறீதரன், இந்துமதி, ரேனுகா, நந்தரூபன், மேனகா, ரகுல்குமார், சசிதரன், மரீனா, ஜீனோ, கிரேசன் ஆகியோரின் பூட்டனும் ஆகாஷ், அனீஷா, நிவேதா, சுவேதா, அபிராம், அஞ்சலா ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பிராஜா குணமணி
(பேர்த்தி)

பெரியரசடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (102251)

### நமசிவாயம் நாகம்மா



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் இல.422, காங்கேசன்துறை வீதி, வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் நாகம்மா நேற்று (19.08.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-செல்லப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நமசிவாயத்தின் (மயில்வாகனம் - முன்னாள் விடுதி மேற்பார்வையாளர், யா/இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கங்கைவேணியன் மற்றும் வைகுந்தன் (ஸ்ரீ வாலாம்பிகை புத்தகசாலை), திருவேங்கடவல்லி (ரஞ்சி) ஆகியோரின் அன்புத் தாயும் ஸ்ரீஅருளானந்ததேவி (லண்டன்), தமிழ்ச்செல்வி, பரிமளாகாந்தன் (M.S.O,யாழ். தபாலகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புச் சகோதரியும் கோபிகா (மாணவி, யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), கங்கைதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.08.2010) வியாழக்கிழமை பி.ப. 2மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் பி.ப. 4 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வைகுந்தன்
(நாதன்-மகன்).

422, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (102252)


## துயர் பகிர்கின்றோம்



கடந்த ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த ஸ்ரீ குமரன்
ஹெயார்ஸ் உரிமையாளரின் தாயாரான

**பொன்னுச்சாமி பரமேஸ்வரி**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு
ஆழ்ந்த கவலை அடைவதுடன்,
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

TILKO HOLIDAYS JAFFNA CITY HOTEL
NO 70/6, K.K.S. ROAD
(NEAR JAFFNA POST OFFICE)
JAFFNA.
T.P- 021222 5969
(சி/570050)


## மணற்காட்டில் டெங்கு ஒழிப்பு

வடமராட்சி, ஓக 20

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் நாளை மறுதினம் 22ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

மணற்காடு கிராம மக்களும், அப் பகுதி இராணுவத்தினரும் இணைந்து இச்சிரமதானப் பணியினை குடத்தனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோவன் [illegible] [illegible]வார்கள்.

(த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நவ மங்கை நிவாசம்" பெண்கள் நிலையம் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் விருந்தினர்களான லண்டன் நியூஹோம் மாநகர சபையின் மேயர் போல் சத்யநேசன், யாழ். பிராந்திய படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க,யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன், உளவியல் நிபுணர் டாக்டர் எஸ்.சிவயோகன் ஆகியோர் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் இரண்டாவது படத்திலும், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், நிலையத்தின் ஸ்தாபகர் செல்வி சுவர்ணா நவரத்தினம் ஆகியோர் இணைந்து நிலையத்தை திறந்து வைப்பதனை மூன்றாவது படத்திலும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் மண்டப நினைவுக் கல்வெட்டைத் திரை நீக்கம் செய்வதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: குமரசிறி,நேசன்)

# வரட்சியான காலநிலை காரணமாக கிணறுகளில் நீர்மட்டம் குறைவு

## பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதில் சிரமம்

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் வரட்சியான காலநிலை காரணமாக பல பிரதேசங்களில் உள்ள விவசாயக் கிணறுகளில் தண்ணீரின் மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

கிணறுகளில் தண்ணீர் மட்டம் திடீரெனக் குறைவடைந்துள்ளமையால் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாகக் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்துள்ளமையால் விவசாயிகள் தமது விளைபயிர்களுக்கு காலையும், மாலையும் நீர் பாய்ச்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சிலர் தமது கிணறுகளில் உள்ள குழாய் வசதியைச் சீர்செய்து தண்ணீரை அதிகரிப்பதிலும் ஈடுபட்டுள்ளமையைக் காண முடிகின்றது. (த-26)

## ரம்ழான் சிந்தனை

இரவில் இருள் கவ்வத் தொடங்கும் போது எண்ணற்ற அடியார்கள் இறைவன் முன்பணிவுடன் நிற்கின்றார்கள். அவனோடு உரையாடுகின்றார்கள். அவனின் இறை வசனங்களைக் காதார,மனதாரக் கேட்கிறார்கள். அவனது திருவால், சுவையால் இதயம் குளிர்கின்றார்கள். அவர்களுடைய இதயங்கள் கண்ணாடி விளக்குகள் போல் ஜொலிக்கின்றன.

# சர்வதேசக் கூட்டுறவுத் தினவிழா இன்று வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 88 ஆவது சர்வதேசக் கூட்டுறவு தின விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

சபையின் தலைவர் இ.இராஜராம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, இலங்கைத் தேசியக் கூட்டுறவு சபையின் தலைவர் பந்து ரணவக்க, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ்.அருள்ராஜ், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் ஆகியோர் இந்த விழாவில் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.(த-26)

# அம்பன் அ.மி.த.கவில் நூலகம் திறந்து வைப்பு

பருத்தித்துறை,ஓக.20

இலங்கை பெண்கள் சாரணிய அமைப்பின் அனுசரணையுடன் அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்ட நூலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் பொ. சிவராசா தலைமையில் திறப்பு விழா வைபவம் எதிர் வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 3மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக இலங்கை பெண்கள் சாரணிய அமைப்பின் ஆணையாளர் செல்வி கந்தி பெர்ண்ணாடோ,வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா ,மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் எம்.சிறிஸ்கந்தகுமார், மருதங்கேணி கோட்ட கல்வி அலுவலர் கே.பொன்னையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (த-190)




# மிருசுவில் வடக்கு அ.த.கவில் கணனி அறை 23 ஆம் திகதி திறப்பு

தென்மராட்சி,ஓக.20

மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 1.1 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கணனிக் கூடம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தின் லண்டன் கிளையினரால் இக்கட்டடம் நிர்மாணிக்கப் பட்டது.

வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக லண்டன் கிளையின் உதவிச் செயலாளர் திருமதி சிவமலர் சிவனருள்செல்வனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க. சண்முகலிங்கம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் ஆகியோரும் கலந்து கொள்வர். (த-207)

# விசேட தேவையுடைய சிறார்களுக்கு நிதியுதவி வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,ஓக.20

தென்மராட்சிப் பிரதேசத்தில் விசேட தேவையுடைய சிறார்களுக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் 'யுனிசெவ்' நிறுவனத்தினரின் அனுசரணையுடன் நிதி உதவியினை வழங்கவுள்ளனர்.

மாற்று ஆற்றலுடைய பிள்ளைகள், மாற்று ஆற்றலுடைய குடும்பத் தலைவருடைய பிள்ளைகள், அதிக பிள்ளைகளைக் கொண்ட மிக வறிய குடும்பத்தின் பிள்ளைகள் ஆகியோருக்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுயதொழில் குடும்பத்துக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றுதல், பாவனையில் உள்ள உபகரணங்களை திருத்தி அமைத்தல் மாற்று வலுவுள்ளோரின் தேவையான வசதிகளை விரிவுபடுத்தல், அவசர நிமித்தம் மாற்று வலுவுடையோர் சென்று வருவதற்கான போக்குவரத்துச் செலவும் என்பவற்றுக்காகவே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த உதவிகள் தேவையுடைய மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் பிரதேசச் செயலகத்திற்கு நேரில் வந்து சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (எ-207)

# வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்க சமுர்த்தி வங்கிச் சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.20

மக்கள் மத்தியில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் ஆயிரத்து 500 ரூபாவை வைப்பிலிடும் பயனாளிகளுக்கு 3ஆயிரம் ரூபா பெறுமதியான மரக்கறி விதைகள் வழங்கப்படவிருக்கின்றன.

இதற்கான ஒழுங்குகளைச் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

சமுர்த்தித் திட்டத்தில் இணைந்து கொண்ட மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்குடன் சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள இத்திட்டத்தினால் பயனாளிகள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே நேரம் மேலதிக வருமானத்தையும் ஈட்ட முடியும். ஆயிரத்து 500 ரூபாவுடன் மேலதிகமாக 750 ரூபா சேர்த்து வங்கியில் வைப்பிலிடுபவர்களுக்கு மா,பலா, தோடை போன்ற பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கப்படவிருகின்றன. (த-115)

# விளையாட்டு விழா

கோப்பாய்,ஓக.20

நீர்வேலி வடக்கு மகளிர் பகவான் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பகவான் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் பா. சசிக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.தயாபரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் கி.குணநாதன், நீர்வேலி ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளர் க.சிவலிங்கம், அச்சுவேலி மக்கள் வங்கி உத்தியோத்தர் த.சுகந்தன், யாழ். சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ரூ.ஆனந்தவேல்,சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பாளர் நவநீதம் ஜெகதீசன், நீர் வேலி கிராமிய வங்கி ஓய்வுபெற்ற முகாமையாளர் ச.க.முருகையா ஆகியோர் கலந்துகொள்வர். (த-72)

# புங்குடுதீவுக்கான மின்னிணைப்பு பணிகள் முடிவடையும் நிலையில்

யாழ்ப்பாணம்,ஓக.20

புங்குடுதீவு பகுதிக்குக் கேபிள் மூலமான மின் இணைப்புப் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

காரைநகரில் இருந்து இதற்கென கடல் மார்க்கமாக மின்... பணிகள் துரித... வருகின்றன.

பெரும்பாலும் இந்த மாத இறுதியில் இந்த மின்சார இணைப்புப் பணிகள் நிறைவடையலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் புங்குடுதீவுப் பிரதேசத்திலும் புதிதாக மின்கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்புப் பணிகள் முழுவீச்சில் ... வருகின்றன என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த-26)

# தங்க நாணயம் கண்டெடுப்பு

நவாலி,ஓக.20

மானிப்பாய் வீதி கட்டுடையில் பெறுமதிமிக்க தங்க நாணயமொன்று சில தினங்களுக்கு முன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தரொருவரால் கண்டெடுக்கப் பட்டு பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டி இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி அ.எழிலரசி கேட்டுள்ளார். (த-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

வெற்றிபெற சோதி வாழ்த்து

தொடர் 11

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010



**வளவாளர்கள்:**
மாணவர் சமூகத்தின் பாராட்டுக்குரிய எமது தேசிய ஆசிரியர்கள் திரு.ஜி.கஜன், திரு.கே.சுதர்ஷன்





வினாத்தாள் I | 45 நிமிடங்கள்

சுட்டெண் | புள்ளிகள்


### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.


* 1ஆம், 2ஆம் வினாக்களில் முதலில் தரப்படும் உருவுக்குப் பொருத்தமான உருவை ஏனைய உருக்களில் இருந்து தெரிவுசெய்க.

01.

1) 2) 3)

02.

1) 2) 3)

* 3ஆம், 4ஆம் வினாக்களில் ஒரு பொருளினை உயரத்தில் இருந்து நேராகப் பார்க்கும் போது அது தோன்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருளைப் பக்கத்தில் இருந்து பார்க்கும்போது அது தோன்றும் விதத்தினைக் காட்டும் உருவினைத் தெரிவுசெய்க.

03.

1) 2) 3)

04.

1) 2) 3)

05. கீழே காணப்படுவன ஒரு பானையின் உடைந்த பகுதிகளாகும். அவற்றின் எப் பகுதிகளைச் சேர்த்தால் முழுப்பானை உருவாகும் என்பதைத் தெரிவுசெய்க.

A B C D E


1) A,D,B 2) A,C,D 3) A,B,C

* 6 ஆம், 7 ஆம் வினாக்களில் கவிதைகளில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.


06. கடலில் பொங்கும் திரையைப்பார்.
காற்றில் சிதறும் .............. பார்.
அலைகள் மோதும் கரையைப்பார்.
அவைகள் தடவும் தரையைப்பார்.
1) மீனைப் 2) நுரையைப் 3) உப்பைப்


07. தேன் போல் இனியன சொல்ல வேண்டும்.
தென்னை போல் நன்றி காட்ட வேண்டும்.
மான் போல் ............... உணர வேண்டும்.
மாடு போல என்றும் உழைக்க வேண்டும்.
1) அழகு 2) வேகம் 3) மானம்

* 8 ஆம், 9 ஆம் வினாக்களில் காணப்படும் மரபுத் தொடர்களுக்குப் பொருத்தமான கருத்தினைத் தெரிவுசெய்க.

08. இரண்டுங்கெட்டான் எனும் மரபுத் தொடரின் கருத்து.
1) வறுமையில் வாடுதல் 2) நன்மை தீமை அறியாதவன்
3) வரவு-செலவு அறியாதவன்

09. பூசி மெழுகுதல் என்ற மரபுத் தொடரின் கருத்து.
1) தந்திரமாகப் பேசுதல் 2) குற்றத்தை மறைத்தல்
3) காத்திருந்து ஏமாற்றுதல்

10. கீழே உள்ள கனவுருவடிவான பெட்டியை ஆக்கத் தேவையான உருவைத் தெரிவுசெய்க.

1) 2) 3)

11. இங்குள்ள உருவை C பக்கத்தில் இருந்து பார்க்கும் போது எவ்வாறு தெரியும் என்பதைத் தெரிவுசெய்க.


1) 2) 3)

* 12 ஆம், 13 ஆம் வினாக்களில் இரு நிகழ்ச்சிகளின் ஐந்து சந்தர்ப்பங்களுக்குரிய உருக்கள் ஒழுங்குவரிசை மாற்றப்பட்டு A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ளன. அவ்வுருவங்களில் காணப்படும் நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்குவரிசை இடம் பெறும் விடையைத் தெரிவுசெய்க.

12. A B C D E

1) D,B,A,C,E 2) C,A,E,B,D 3) B,D,E,A,C


13. A B C D E

1) E,A,C,D,B 2) B,C,D,A,E 3) A,E,B,D,C


14. கரடி உறுமும் என்பதுபோல் எருமை ..............................
1) முக்காரமிடும் 2) எக்காளமிடும் 3) கத்தும்

15. நெல் நாற்றுப் போல் மூங்கில் ..............................
1) குட்டி 2) பிள்ளை 3) கன்று

* 16ஆம், 17ஆம் வினாக்களில் ? அடையாளம் இடப்பட்ட இடைவெளியில் வர வேண்டிய உருவைத் தெரிவுசெய்க.


16.


1) 2) 3)


17.


1) 2) 3)

* 18 ஆம், 19 ஆம் வினாக்களில் இடைவெளியில் வரவேண்டிய இலக்கங்களைத் தெரிவுசெய்க.

18.


1) 22
2) 24
3) 26

19.


1) 61
2) 68
3) 71

* கீழே தரப்படும் தரவைப் பயன்படுத்தி அதன் கீழ் தரப்படும் வினாக்களின் விடைகளைத் தெரிவுசெய்க.


● + ▲ = 28
▲ - ● = 4
◆ + ● = 25


20. இதில் மிகவும் பெறுமதி கூடிய உரு எது?
1) ● 2) ▲ 3) ◆

21. இதில் மிகவும் பெறுமதி குறைந்த உரு எது?
1) ▲ 2) ◆ 3) ●

22. உருக்களின் பெறுமதிக்கு ஏற்ப ஏறுவரிசையில் அமைந்த கூட்டம் எது
1) ●◆▲ 2) ●▲◆ 3) ◆▲●

* 23 ஆம், 24 ஆம் வினாக்களில் உருவில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.

23)

1) 2) 3)

24)

1) 2) 3)


* 25 ஆம், 26 ஆம் வினாக்களில் பழமொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவுசெய்க.

25. காகந்திட்டி மாடு சாகாது
1) நற்புகழ் மங்குவதில்லை.
2) ஒற்றுமையே பலம்.
3) பழிக்குப் பயப்படாதே.


26. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
1) திறமையில் நம்பிக்கை.
2) விடாமுயற்சி பலன்தரும்.
3) சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது.

27. இக்கடிகாரம் முற்பகல் நேரத்தைக் காட்டுகின்றது. இந்நேரத்தை டிஜிட்டல் நேரத்தில் தருக.
1) 12:30 மணித்தியாலங்கள்.
2) 00:30 மணித்தியாலம்.
3) 6:10 மணித்தியாலங்கள்.



28.

இம் முப்பரிமாண உருவில் உள்ள முகங்களின் எண்ணிக்கை.
1) 2 2) 0 3) 3

29. கிருசிகாவிற்கு ஆறு வயதாக இருந்தபோது இலங்கை சுதந்திரமடைந்து பொன் விழாவைக் கொண்டாடியது. இலங்கை சுகந்திரமடைந்து அமுத விழாக் கொண்டாடும்போது கிருசிகாவின் வயது யாது?
1) 16 வயது 2) 81 வயது 3) 36 வயது

30. கீழே உள்ள உரு சுறா, உணவு, கடலுணவு போன்ற விவரங்களைக் காட்டுகின்றது. இதில் கடலுணவைக் குறிக்கும் எழுத்து எது?


1) A
2) B
3) C

31. கீழே உள்ள உரு ஆபிரிக்கா, ஆசியா, இந்தியா ஆகியவற்றைக் காட்டுகின்றது. இதில் ஆபிரிக்காவைக் காட்டும் ஆங்கில எழுத்து எது?


1) P
2) Q
3) R

32. நளாயினியினது, யருசிகாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை முப்பத்திரண்டு வருடங்களாகும். இன்னும் இரண்டு வருடங்களில் இருவரதும் வயதுகளின் கூட்டுத் தொகை முப்பத்தாறு வருடங்களாகும். இரண்டு வருடங்களிற்கு முன்பு நளாயினியின் வயது யாது?
1) 28 வருடங்களாகும் 2) 30 வருடங்களாகும்
3) 26 வருடங்களாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் மிதமிஞ்சிய பசுப்பாலை சேமித்துப் பாதுகாக்க நவீன இயந்திரம் அவசியம்

## நாமல் ராஜபக்ஷ குழுவினரிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஒக.20

மிதமிஞ்சிய பசுப்பாலை சேமித்துப் பாதுகாத்து வைப்பதற்கான நவீன இயந்திரத்தைப் பெற்றுத்தருமாறு அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நாமல் ராஜபக்ஷ குழுவினரிடம் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் தினமும் 10 ஆயிரம் லீற்றர் வரையான பால் 3 திணைக்களங்கள் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்றது. யாழ்ப்பாணம் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைகள் ஊடாக தினமும் 4 ஆயிரம் லீற்றர் வரையான பாலை கொள்வனவு செய்கின்றது. கால் நடை கூட்டுறவுச் சங்கங்கள் 7 கிளைகளினூடாகவும் தினமும் 3 ஆயிரம் லீற்றர் வரையான பாலை கொள்வனவு செய்கின்றன. மேலும் உள்ளூரில் இடம்பெறுகின்ற விற்பனை மூலம் 3 ஆயிரம் லீற்றர் பால் கொள்வனவாகி விற்கப்படுகின்றது. இது சராசரியான நடவடிக்கையே.

மழை காலங்களில் அதாவது ஒக்ரோபர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையிலான காலப் பகுதியில் பால் உற்பத்தியானது ஏனைய காலங்களில் உள்ளதை விட 15 முதல் 20 வீதம் வரை அதிகரிக்கின்றது. இதன் போது மேலதிக பாலை யோக்கட்டாகவோ அல்லது ஐஸ்ஸாகவோ அல்லது தயிராகவோ அல்லது வேறு எவ்வகையிலேனும் மாற்றி விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. ஏனைய காலங்களில் உற்பத்தி குறைவாகவே உள்ள நாள்களில் இவ்வாறான மாற்று உற்பத்திக்கான கேள்விகள் அதிகரித்துள்ளன. எனவே மிதமிஞ்சிய பாலைப் பாலாகவே சேமிக்கக் கூடிய வசதியான இயந்திரம் தேவை.

சில இடங்களில் மேலதிகமாகப் பால் எஞ்சுகின்றது. இன்னும் சில இடங்களில் பால் போதாமல் இருக்கின்றது. இவ்விரண்டு பிரதேசத்துக்குமான தொடர்பாடல் வலையமைப்புகளும் இல்லாமல் இருக்கின்றன. இவ்வாறான பிரதேசங்கள் தமக்கிடையே ஓர் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொண்டால் மிதமிஞ்சும் பாலின் அளவைக் குறைக்க முடியும்.

தற்போது பெரும்பாலான வங்கிகள் மாடுகள் வாங்குவதற்கு இலகு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் பெருமளவான கடன்களை வழங்கி வருகின்றன. மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் மக்களுக்கு மாடுகளை வழங்கி வருகின்றன. இதனால் தற்போது யாழ்ப்பாணத்தில் பால் உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளது.

மிதமிஞ்சிய பாலைப் பாலாகவே பேணும் இயந்திரத்தின் பெறுமதி அண்ணளவாக இலங்கை ரூபாவில் 1 பில்லியன் ஆகும். இதனை யாழ். மாவட்டத்துக்கு என்று தனித்துக் கொள்வனவு செய்யாமல் வடமாகாணத்துக்கெனப் பொதுவாக கிளிநொச்சியில் ஒன்றை அமைத்துத்தந்தால் இலகுவாக இருக்கும் என்று திருமதி பி.அமிர்தலிங்கம், நாமல்ராஜ பக்ஷ தலைமையிலான குழுவினரிடம் சுட்டிக் காட்டினார்.

இதற்குத் தென்னிலங்கையில் உள்ள பால் கம்பனிகளைக் கொண்டு இங்கு மிஞ்சும் பாலைக் கொள்வனவு செய்ய தான் எற்பாடு செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறினார்.

இதற்குப் பதிலளித்த வடமாகாண கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பிரதித்தலைவர் தென்னிலங்கைப் பால் கம்பனிகள் 1 லீற்றர் பாலை 25 ரூபா முதல் 30 ரூபாவுக்கே கேட்கின்றனர். ஆனால் இங்கு ஒரு லீற்றர் பாலுக்கான உற்பத்திச் செலவு 40 ரூபா முதல் 45 ரூபா வரை உள்ளது. எனவே அந்த நிறுவனங்கள் கேட்கும் விலைக்குப் பாலை எமது மக்களால் வழங்க முடியாது என்று தெரிவித்தார்.

இதனையடுத்து அந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்து தருவது தொடர்பாக தான் ஆலோசனை நடத்தி பதில் தெரிவிப்பதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (த-319)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.20

2010 ஆம் ஆண்டுக்கான நான்காவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை பி.ப 3 மணிக்கு யாழ். பிராந்திய செயலக மாநாட்டு மண்டபத்தில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும்.

இதில் சகல திணைக்களங்களின் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-204)




## ஆங்கில எழுத்து முகாம்

பருத்தித்துறை,ஒக.20

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் இடை நிலைக் கல்வி மாணவர்களுக்கான ஆங்கில எழுத்து முகாம் நடத்தப்பட வுள்ளது.

இந்த ஆங்கில எழுத்து முகாம் எதிர் வரும் 26 ஆம் திகதி வியாழன் புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. பாடசாலைகளில் தரம் 7, தரம் 8 வகுப்புகளில் கல்வி கற்கும் 12 மாணவர்களையும் பொறுப்பான ஆசிரியர் ஒருவரையும் அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (த-190)

# யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு கோழி வளர்ப்புக்கு 8 லட்சம் ரூபா

நாவற்குழி,ஒக.20

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு கோழி வளர்ப்புத் திட்டத்திற்கு ரூபா 8 லட்சம் நிதி வட மாகாண திட்டமிடல் அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இந்த நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய உதவியை வழங்கியிருந்தது.

விழிப்புலனற்றோர் சங்கம் தனது உறுப்பினர்களின் நலன்புரித்திட்டங்களுக்கு உதவுவதற்குரிய நிதி பலத்தை உருவாக்கும் முயற்சிக்கு இந்த நிதி உதவுமெனக் கூறப்படுகின்றது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் பல்வேறு தேவைகளுக்கும் நிதியை வழங்கி வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் உதவி வருவது குறிப்பிடத்தக்கது. (த-121)



யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் புதிய கட்டடத்திற்கு மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா வினால் எல்.சி.டி தொலைக் காட்சிப் பெட்டி வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா விடம் கையளிக்கப் பட்ட போது எடுக்கப்பட்ட படம். அருகில் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், உதவிப் பொதுமுகாமையாளர் என்.நாகேஸ்வரன் மற்றும் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரிகளான டாக்டர் பி.டிலக்சி, டாக்டர் கே.விஜயதாசன் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

### பரமேஸ்வரா - நாச்சிமார்கோயில் வீதிக்கு

# சேர்.பொன். இராமநாதர் பெயரை சூட்டுமாறு மேயரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.20

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் இருந்து நாச்சிமார் கோயிலுக்குச் செல்லும் வீதிக்கு சேர்.பொன்.இராமநாதர் வீதி எனப் பெயர் சூட்ட வேண்டும்.

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை மேற் கண்டவாறு கேட்டுள்ளது.

கிளையின் தலைவரும் சட்டத்தரணியுமான கனகநமநாதன் யாழ்.மேயருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு,

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியிலிருந்து கலட்டி ஊடாக நாச்சிமார் கோயில் வரையிலான வீதிக்குத் தற்போது ' இராமநாதன் வீதி' யென தங்களின் சபையினால் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறே வீதிப் பெயர்ப் பலகையிலும் எழுதப்பட்டுள்ளது.

இராமநாதன் என்ற பெயர் யாரைக் குறிக்கின்றது என்பதை தற்போதைய சந்ததியினருக்குத் தெரிந்திருக்காத நிலைமை காணப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பல வெளி மாவட்ட மாணவர்களுக்கு தாங்கள் கல்வி கற்கும் பல்கலைக்கழகம் அமைந்திருப்பது 1974 க்கு முன்னர் பரமேஸ்வராக் கல்லூரி யென்று ஒரு கல்லூரியாக இருந்ததென்பதும் அங்கு முதன்மைக் கட்டடமாக உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் அழகிய தொடர் மாடிக் கட்டடம் சேர்.பொன்.இராமநாதர் என்ற ஒரு வள்ளலாரின் கொடையென்பதும் தெரிந்திருக்க நியாயமில்லை.

அத்தகைய பெருந்தகைக்கு அவரின் சேவை கருதி விழா எடுக்கப்படும் இத் தருணத்தில் குறித்த வீதியின் பெயரை சேர்.பொன்.இராமநாதர் வீதியென்று பெயர் மாற்றம் செய்யப்படுவது ஒரு அவசியத் தேவையென உணரப்படுகின்றது. 'இராமநாதன் வீதியை' சேர்.பொன். இராமநாதர் வீதியெனப் பெயர் மாற்றம் செய்யத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

அத்துடன் முன்னர் காலத்தில் 'தபால் பெட்டி ஒழுங்கை'என அழைக்கப்பட்டு வந்த பரமேஸ்வராக் கல்லூரிக்குப் பின் புறமாக அமைந்திருந்த வீதிக்கு தற்போது பரமேஸ்வரா வீதியென பெயர் சூட்டப் பட்டுள்ளது. இது அந்தவீதி பரமேஸ்வரா கல்லூரிக்குப் போகும்; போய் வந்த வீதியென ஒரு பிழையான கருத்தைக் கொடுப்பதாக அமைகின்றது.

ஆகவே அதனை 'பரமேஸ்வராக் கல்லூரி பின் வீதி' எனப் பெயர் மாற்றம் செய்வதால் சரியான அர்த்தத்தைக் கொடுப்பதாக இருக்கும். அதனால் இந்தப் பெயர் மாற்றத்தையும் செய்து தரும்படி பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ் - கிளை கேட்டுக்கொள்கின்றது- என்றுள்ளது. (ஐ)

# கோப்பாய் பகுதிக்குப் புதிதாக 50 கேபிள் தொலைபேசிகள்

யாழ்ப்பாணம்,ஒக.20

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் கோப்பாய் பிரதேசத்திற்குக் கேபிள் தொலைபேசி இணைப்பு வழங்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது. இதுவரை 50 இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பகுதியில் இதற்கென அமைக்கப்பட்ட பரிவர்த்தனை அலகு ஊடாக இந்த இணைப்பு வசதிகள் வழங் கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் - பருத்தித்துறை வீதியில் இதுவரை ஐம்பது கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இணைப்புக்களை வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை கோப்பாய் சந்தியில் இருந்து உரும்பிராய் வீதிக்கும் இந்தக் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென நிலத்தடிக் கேபிள் இணைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (த-26)

## சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

நவாலி,ஒக.20

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெறும்.

விவசாயக் குழுக் கூட்டம் ஒரு மணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பி.ப. 2 மணிக்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (த-100)




சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத்தில் அமைந்துள்ள அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் அம்பாள் தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

பிரயாணப்பை ஒன்று உடுப்புகள், படங்களுடன் கண்டி வீதி, கைதடிப்பகுதியில் பஸ்ஸில் பயணிக்கும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0770418083

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள 88 Sri xxxx தொடரிலக்கமுடைய Honda CD 200 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776374345

## தொழிற்பயிற்சிகள்

**★ Mobile phone Repairing**

Basic Electronic, Circuit Reading, Flashing, Use of software
Tools, Phone Repairing, Unlocking, Downloading
Phone Circuit

***Duration: 3 months***

**★ Television Repairing**

Radio, Television, Satellite Receiver, CD, DVD Player
Amplifier, Video Deck, Ups

***Duration: 10 months***

**★ Air-Conditioning**

Refrigerator, Splite AC, Vehicle AC, Cool Room
Window AC, Package AC

***Duration: 6 months***

சகல பயிற்சிகளுக்கும் எமது நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற work Shop இல் முழுநேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்:- 24.08.2010, 28.08.2010

விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

இல. 45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன் வீதி), யாழ்ப்பாணம். T.P. 0718561654

கிளை: NEW ASIAN CENTER, 56/15, Stanley Road. (சம்பத் வங்கியருகே), யாழ்ப்பாணம். T.P. 0779254078

(சி/570038)


## நாய்களுக்கு கருத்தடை

தென்மராட்சி, ஒக. 20

தென்மராட்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இராமாவில் நலன்புரி நிலையம், படைமுகாம்கள், சந்தைகள், வைத்தியசாலை போன்ற இடங்களில் அலையும் கட்டாக்காலி நாய்களை சுகாதாரத் திணைக்களஊழியர்கள்பிடித்து கருத்தடை சிகிச்சை மேற்கொண்டுவருகின்றனர்.

இதுவரை நானூறுக்குமேற்பட்ட நாய்களுக்குசத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-207)


## பாடசாலைக் கல்வியை அண்மையில் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ் குடாநாட்டில் நடாத்தும் ஆரம்ப வங்கியியல் மற்றும் வணிகத்துறைச் சான்றிதழுக்கான கற்கை நெறி

**அனுமதிக்கான தகமைகள் -**
- 22 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்
- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 5சிறப்புச் சித்திகளுடனும் கணிதபாடம், ஆங்கிலமொழி அல்லது வர்த்தகமும் கணக்கியலும் பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்
- க.பொ.த. உயர்தரத்தில் ஒரே அமர்வில் ஒருபாடத்தில் சிறப்புச்சித்தியும், இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும்பெற்றிருத்தல் வேண்டும்

**பாடநெறியில் உள்ளடக்கப்படும் பாடங்கள் -**
- வியாபாரமும் வங்கியியலும்
- கணக்கியல்
- பொருளியல்
- முகாமைத்துவமும் கட்டமைப்புகளும்

**பாடநெறி கற்பிக்கப்படும் மொழி -** ஆங்கிலம்

**காலம் -** 60 மணித்தியாலங்கள்

**இடம் -** HNB சுன்னாக வாடிக்கையாளர் நிலையம்

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பிப்பதற்கும் *http://www.hnb.net* என்னும் இணையத்தளத்தில் "Careers at HNB" பகுதியினை பார்க்கவும். அனைத்து விண்ணப்பங்களும் மேற்குறிப்பிட்ட இணையத்தளத்தினூடாக 31.08.2010 முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1973, விசாகம், 8 இல் செவ்வாய், பாவம் 34, U.K.P.R. உள்ள மணமகனுக்கு ஆங்கில அறிவுள்ள ஏற்ற மணமகள் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். ஏற்கப்படாத குறிப்புகள் இரு மாதங்களுக்குள் திருப்பி அனுப்பப்படும்.

தொடர்பு: விளம்பர இல. 4059, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## திருமண அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆவணி மாதம் 6 ஆம் நாள் (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை உத்தராட நட்சத்திரமும் திரயோதசி திதியும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று மு.ப. 10 மணி முதல்12 மணிவரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

அமரர் குமாரசாமி - அமரர் சின்னத்தங்கம்
அமரர் பொன்னுத்துரை - அமரர் அழகரெத்தினம்
ஆகியோரின் பேரனும்
திரு.இரத்தினகோபால் - திருமதி வனமலர்தேவி
அவர்களின் ஏக புத்திரன்
திருநிறைச் செல்வன்
**விஷ்ணுராஜ்**



அமரர் தங்கவேலாயுதம் - அமரர் இராசரெத்தினம்
அமரர் சுப்பிரமணியம் - அமரர் முத்துலட்சுமி
ஆகியோரின் பேர்த்தியும்
திரு.பாலச்சந்திரன் திருமதி மங்களேஸ்வரி
அவர்களின் புத்திரி
திருநிறைச் செல்வி
**அர்ச்சனா**

ஆகிய இருவருக்கும் வல்வை நெடியகாட்டு பிள்ளையார், வல்வை முத்துமாரி அம்மன், வல்வை வைத்தீஸ்வரர், செல்வச்சந்நிதி முருகன் துணைகொண்டு திருமணம் செய்வதற்கு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் சென்னை, மைலாப்பூர் சவேரா ஹோட்டலில் நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திரு.திருமதி. இரத்தினகோபால் [தங்கராசா]
திரு.திருமதி.சுபேந்திரன் ஸ்ரீலக்ஷ்மி.
திரு.திருமதி ராஜசீலன் ஸ்ரீபிரியா
கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறை.
தற்போதைய முகவரி: 31 கல்யாணி தெரு,
லெட்சுமணப் பெருமாள் நகர், கொட்டிவாக்கம்
சென்னை- 600 041.
தொ.பே: 00919094881355

திரு.திருமதி பாலச்சந்திரன்
திரு.திருமதி ஜெகரூபன் அபர்ணா
திரு.திருமதி யாதவன் நீரஜா
மயிலியதனை, வல்வெட்டித்துறை.
தற்போதைய முகவரி: 106 ஜெனலிஸ் காலனி,
திருவள்ளுவர் நகர் (EB Office) திருவான்மியூர்
சென்னை 600 041,
தொ.பே: 00919500185034

(இரு வீட்டார் அழைப்பு)

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 48
திகதி - 18.08.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: **D** அதிர்ஷ்ட இலக்கம்: **07** வெற்றி இலக்கம்: **6 3 9 5 1**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | இலக்கம் | | | | | | தொகை | | வென்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D | 07 | 6 | 3 | 9 | 5 | 1 | ரூ. | 15,672,809.00 | - |
| 1 பரிசு | | 07 | 6 | 3 | 9 | 5 | 1 | ரூ. | 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | | | 6 | 3 | 9 | 5 | 1 | ரூ. | 100,000.00 | 02 |
| 3 பரிசு | | | | 3 | 9 | 5 | 1 | ரூ. | 10,000.00 | 24 |
| 4 பரிசு | | | | | 9 | 5 | 1 | ரூ. | 1,000.00 | 258 |
| 5 பரிசு | | | | | | 5 | 1 | ரூ. | 50.00 | 2568 |
| 6 பரிசு | | | | | | | 1 | ரூ. | 20.00 | 24717 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | இலக்கம் | | | | | | தொகை | | வென்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 6 | 3 | 9 | 5 | | ரூ. | 1,000.00 | 28 |
| 8 பரிசு | | | 6 | 3 | 9 | | | ரூ. | 100.00 | 264 |
| 9 பரிசு | | | 6 | 3 | | | | ரூ. | 50.00 | 2598 |
| 10 பரிசு | D | | | | | | | ரூ. | 20.00 | 10188 |
| 11 பரிசு | D | 07 | | | | | | ரூ. | 100.00 | 1218 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,830,600.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.1 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 15,672,809.00

## நான்கு ஆண்டு நினைவில் எங்கள் மனிதமகான்



*அன்னை மடியில்*
*26.06.1938*

*இறைவன் அடியில்*
*20.08.2006*

**அமரர் சின்னத்தம்பி சிவமகாராஜா**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர், இயக்குநர், நமது ஈழநாடு)

சேவைக்கென்றே பிறந்து எம் மக்களுடன் வாழ்ந்த எங்கள் மகாராஜாவே.
யாழ்.நிலத்தில் ''மனிதமகான்'' என்ற பெயரெடுத்து மறைந்து விட்டாய்
எத்தனையோ பூகம்பங்கள் கலக்கிடவும் அஞ்சாமல் சேவைசெய்து
மரணத்தை வென்ற மாவீரன் என புகழ் பெற்றாய்
வலி. வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்கு குரல் கொடுத்து மக்கள்
தலைவனாக மதிக்கப்பட்டாய்
இருபத்தைந்து தலைமைப் பதவிகளை வகித்த ஆயிரத்தில் நீ யொருவன்
''தலைவர்'' என அழைக்கப்பெற்றாய்
தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்து நாடாளுமன்றில்
கூட்டுறவுக்காக குரல் கொடுத்த பெருமை பெற்றாய்
தெல்லிப்பழைக் கூட்டுறவுக்கழக நெஞ்சங்களில் என்றும் மறவாத
இடம்பெறும் பேறு பெற்றாய்
சளைக்காது களைக்காது கடமையின் வீரனாய் கருணையின் நிழலாய்
மக்களுக்காய் தோள் கொடுத்த உத்தமனே
சட்டென நீங்கள் சரிந்திட்ட வேளையில் மக்கள் பட்டதுயர்
கொஞ்சமல்ல பரிதவித்து பார்த்து அழுதோம்
ஆண்டு நான்குகள் ஆனாலும் ஆறாதையா எம் துயரம் எங்கு சென்றாய்
மீண்டும் வருவாயையா எம் துயர் துடைக்க என ஏங்கி நிற்கின்றோம்
நாம் இங்கு.

*கோணப்புலம்,*
*மல்லாகம்.* (102197) **குடும்பத்தினர்.**



வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான தடகளப் போட்டியில் சம்பியன் வென்ற வீராங்கனைகளுக்கு ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி வெற்றிக்கிண்ணங்களை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

11 வயதுப்பிரிவில் சம்பியன் வென்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வீராங்கனை அருளானந்தம் அபினயா, 13 வயதுப் பிரிவில் சம்பியன் வென்ற இளவாலை புனித கன்னியர்மடம் மகா வித்தியாலய வீராங்கனை செபமாலைநாயகம் மேரிநிலக்ஷனா, 15 வயதுப்பிரிவில் சம்பியன் வென்ற சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மகேந்திரன் ஜோய்காருண்யா ஆகியோரைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# குடாநாட்டு இளைஞர், யுவதிகள் எதிர்காலத்தில் தேசிய மட்டப் போட்டிகளில் பிரகாசிப்பர்

## 52 ஆவது படைத்தளபதி அனுர சுகசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

விளையாட்டு என்பது இன, மொழி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. ஒவ்வொரு இளைஞர், யுவதியும் தமது திறமைகளை வெளிக்கொணர இவ்வாறான போட்டிகள் பெரிதும் உதவுகின்றன. போர்ச் சூழல்களில் கடந்த காலங்களில் பிரதேச இளைஞர், யுவதிகள் தமது திறமைகளை வெளிக் கொணர முடியாமல் போயுள்ளது. எதிர்காலத்தில் குடாநாட்டு இளைஞர்,யுவதிகள் சிறந்த வீர, வீராங்கனைகளாகத் திகழ்ந்து தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றிப் பிரகாசிக்கும் வாய்ப்புக்கள் நிறைய உள்ளன.

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் 522 ஆவது படையணியினரால் நடத்திய கரப்பந்தாட்டப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட 52ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிக்கேடியர் டபிள்யூ ஏ.ரி அனுர சுகசிங்க தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

52 ஆவது படையணியின் முன்னாள் கட்டளைத் தளபதியின் பணிப்பின் பேரில் பிரதேச இளைஞர், யுவதிகளிடையே பல்வேறு விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டதாகக் கேள்வியுற்று மகிழ்வுற்றேன். போட்டிகளில் கலந்து கொள்வோரின் சிந்தனை முழுவதும் விளையாட்டிலேயே உள்ளதால் கடந்த கலப் பாதிப்புக்கள் அனைத்தும் மறந்து போக வாய்ப்புக்கள் உள்ளன.

இன்றைய போட்டிகளில் கலந்து கொண்ட இளைஞர்,யுவதிகள் அனைவரும் திறமையுடனும்மகிழ்வுடனும்பங்குபற்றியமை எமக்கு மகிழ்வைத் தருகின்றன.

போட்டிகளில் கலந்து கொண்டவர்களை ஊக்குவிக்கும் வகையில்செயற்பட்ட பொதுமக்களுக்கு எமது படையின்சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சுற்றுப் போட்டியினை சிறப்பாக நடத்திய 522 படையணியைச் சேர்ந்த அனைவரையும் பாராட்டுகின்றேன்- என்றார்.(த-207)




# சென். பற்றிக்ஸ் அணி கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,ஓக.20

அகில இலங்கைப் பாடசாலையின் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 17,15வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றில் பங்கு கொள்வதற்காக சென். பற்றிக்ஸ் கல்லூரி நேற்று வியாழக்கிழமை கொழும்பு சென்றுள்ளது.

சனிக்கிழமை நடைபெறவுள்ள 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் கம்பஹா தரணகம மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள 15 வயதுப்பிரிவினருக்கான ஆட்டத்தில் மாத்தளை அம்பலாங்கொட வீர-கெப்பிற்றிக்கொல மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

## அனுராதபுரம் லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை மோதும்

யாழ்ப்பாணம்,ஓக.20

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் சிரேஷ்ட லீக் அணிகளுக்கு இடையிலான லீக் சுற்றுப் போட்டித் தொடரின் 2 ஆவது சுற்றின் ஆட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை மாலை 4 மணி மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் அனுராதபுரம் லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை லீக் அணி மோதவுள் ளது.

முன்னர் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பருத்தித்துறை லீக் அணி 6:0 என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு லீக் அணியை வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-23)

## உயரம் பாய்தலில் மயூரன் 2ஆம் இடம்



பருத்தித்துறை,ஓக.20

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட மெய் வன்மைப் போட்டியில் 17 வயதுப் பிரிவு ஆண் களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவன் ரண வீர மயூரன் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். (த-190)

## றோட்டறிக் கழகம் நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்.நகர மத்தி றோட்டறிக் கழகம் கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம், சதுரங்கம், பெண்களுக்கான கிரிக்கெட் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும் கழகங்கள் யாழ்ப்பாணம் 175, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ரமணன் ஸ்போட்ஸில் விண்ணப்பப் படிவங்களைப்பெற்று விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

போட்டி நிரல் தெரிவு 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (எ-236)

# 400 மீற்றர் தடைதாண்டலில் யாழ்.வீரர் சோபன் புதிய சாதனை



யாழ்ப்பாணம்,ஓக.20

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் யாழ். மாவட்டவீரன் ச.சோபன் மாகாண மட்டத்தில் புதிய சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தை 57 நிமிடங்கள் 9 செக்கன்களில் ஓடி இவர் சாதனை படைத்துள்ளார்.

இவரின் இந்த சாதனை வடமாகாணப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (த-23)

# மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்

வலி.வடக்கு , ஓக. 20

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 21 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

### 400 மீற்றர் தடை தாண்டல்

ஜே.சங்கீதா- (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), பி.இராஜ சோபனா -(யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்), நா.ஜெனனி- (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), யோ.செ. டியூலக்சனா ( மன்னார் சென்.சேவியர் பெண்கள் கல்லூரி).

### உயரம் பாய்தல்

செ.கீர்த்திகா ( தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி), ச.மேரிஜெனிற்ரா ( மன்னார் சென்.சேவியர் பெண்கள் கல்லூரி), கே.ரஜித்தா ( முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி), க. யசோதா- ( கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயம்).

### நீளம் பாய்தல்

எஸ். கலைவாணி ( வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), ச.ரேகலா (மன்னார் சென். சேவியர் பெண்கள் கல்லூரி), யூ.விஜிதா (ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி), ஜெ. துஷ்யந்தி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை).

### முப்பாய்ச்சல்

செ.கீர்த்திகா (தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி), எஸ்.கலைவாணி (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

### கோலூன்றிப் பாய்தல்

சி.நிஷாந்தி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

### குண்டு போடுதல்

எஸ். ஜனுகா ( மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), எஸ். சுபாஜினி -(வவுனியா கல்மடு மகா வித்தியாலயம்), கு.கௌசிகா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜெ.ஜெனித்தா ( நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி).

### தட்டெறிதல்

செ.கீர்த்திகா- ( தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரி),எஸ். ஜனுகா ( மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), சி.ஸ்ரீசக்தி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி),ஈ.சிவனேஸ்வரி (மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம்).

### ஈட்டியெறிதல்

எஸ். [illegible]தேவி ( வவுனியா புதுக் குளம் மகா வித்தியாலயம்), து.கவிதா (கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயம்),யே.சோபிகா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே. கஜந்தினி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி).

### 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை,மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி.

### 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை,மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி,வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி,மன்னார் சென்சேவியர் மகளிர் கல்லூரி.

(தொடரும்)

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இசைக்கலைஞர் ஆர்.வதனவாசனின் 'இசையோடு' என்னும் கிற்றார் வாத்திய இசை வெளியீட்டு விழா நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை முதல் படத்திலும், நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.தெய்வேந்திரன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த மூன்று படங்களிலும் காணலாம். *(படங்கள்: நந்தன்)*

# 'சன் சீ' கப்பல் தமிழர்களுக்கு உதவும்படி கனேடிய தமிழ்ச் சமூகம் கோரிக்கை

வன்கூவர், ஓக. 20

சன் சீ கப்பலில் கனடாவுக்கு வந்திறங்கியுள்ள தமிழ் மக்களுக்கு உதவும்படி உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களிடம் கனேடியத் தமிழ் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. விசாரணையின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டபின் இவர்களுக்கான தங்குமிடம், சட்ட உதவி மற்றும் ஏனைய வசதிகளைச் செய்து கொடுக்க கனேடிய தமிழ் சமூகம் தயாராகி வருகிறது.

இதேவேளை, தமிழ் அகதிகள் விசாரணை செய்யப்படும்போது அதை அவதானிக்க கனேடிய ஊடகங்களுக்கு நிபந்தனையுடன் நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார். ஊடகங்களில் அகதி அந்தஸ்துக் கோருவோரின் பெயர், விவரங்களை வெளியிடக்கூடாது என ஊடகங்களுக்கு நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

சில கனேடிய ஊடகங்கள் கப்பலில் விடுதலைப்புலி உறுப்பினர்களும் வந்திறங்கியுள்ளனர் என செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கை அரசு தமிழ் மக்கள் அனைவரையுமே புலிகளாகக் கருதுகிறது என்றும், எனவே ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்றும் கனேடிய தமிழ்ச் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சன் சீ கப்பலில் மூன்று மாத காலமாகப் பயணித்து கனடா வந்துள்ள தமிழ் மக்களைக் கனடாவிலேயே தங்க வைக்கும் செயற்பாடுகளுக்குத் தனது வளங்களைப் பயன்படுத்தப் போவதாக நாடுகடந்த தமிழீழ அரசின்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி நவரத்தினம் (சிவராசா)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், இமையாணன், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் 18.08.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம்-கதிராசி தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும் சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட இரதீஸ்வரன் (தீபன்), இரதிகரன் (பூவன்), இரதிராஜன் (ராஜன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவிற்சலாந்தை வதிவிடமாகக்கொண்ட சுகந்தினி, விஜிதா, சிவதர்ஷனி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிஷாந்தன், லவோஷன், சயந்தன், விபிஷேக், லக்ஷன், ஹம்சாயினி, ஜாமினி, கபிஷனா, ரஷ்மியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குணரட்ணம், திரவியம், பாக்கியம், ரதிமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம், தர்மலிங்கம், சிவபாக்கியம் மற்றும் நல்லையா, ஞானேஸ்வரி (கண்டு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2010) வெள்ளிக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன், உடுப்பிட்டி.*
*0772390400*
*0779989029*
*0777780925*

தகவல்:
**மகன்மார்,**
**பேரமகன்மார்.**
(102227)

## திருமதி பெரியநாயகி தர்மலிங்கம்



மண்டைதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது சுவிஸில் வசித்தவருமாகிய திருமதி பெரியநாயகி தர்மலிங்கம் 16.08.2010 திங்கட்கிழமை சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் (ஓய்வுபெற்ற விதானையார்) அருமைத் துணைவியும் வதனியின் (பொறியியலாளர்) அன்புத் தாயும் றவநேசனின் (தொழில்நுட்ப அலுவலர்) அன்பு மாமியும் றமீனா, வக்சாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு புதல்வியும் சங்கரத்தையைச் சேர்ந்த கந்தையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, கார்த்திகேசு, சோதிலிங்கம், திருநாவுக்கரசு, சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, பொன்பாக்கியம், பத்மநாதன் மற்றும் இராஜலட்சுமி, யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2010) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வெளிநாட்டில் வசிக்கும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்: மருமக்கள்*
சோதி சுந்தரலிங்கம்
(கிராம அலுவலர் J/104),
சோ.இலட்சுமிகாந்தன் (ஆசிரியர்).

*2/2, நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.* *(102230)*

## கும்பாபிஷேகம்

வடமராட்சி
ஓக. 20

வடமராட்சி கிழக்குகுடத்தனை காளிவயல் வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.03 மணி தொடக்கம் 7.41 மணிவரையிலான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நாராயணி
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.





இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு...!
சர்வதேச இணைய வானொலி வாரணம் FM இன்
ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சிநெறி
யாழ்ப்பாணத்தில் விசேட பிரிவு ஆரம்பம்!
தமிழில் சிறந்த உச்சரிப்பு பேச்சாற்றல், இசைத்துறை, எழுத்துதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்

ஒலிபரப்பாளர், இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறியில் இணைவதற்கு...

1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் விசேடசித்தியுடன் கூடிய உயர்தரத்துக்கான பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

இவற்றுடன் கூடிய சுயவிபரக்கோவையை 30.08.2010 க்கு முன் எமது யாழ். அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்.

:: இப்பயிற்சிநெறியில் இணைவோருக்கு ::

- சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்.
- ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர், களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
- இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
- பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.
- A/L பெறுபேறு வரும்போது உங்கள் கையில் ஓர் சிறப்பு டிப்ளோமா சான்றிதழ்!

இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியை தபால் மூலம் கற்பதாயின் விண்ணப்பத்தின் இடது மேல் மூலையில் "தபால் மூல இதழியல்" என குறிப்பிடவும்.

வாரணம் FM
www.varanamfm.com
No.58, Joseph Dias Mawatha, Modara, Colombo-15. T.P No: 0112521281 E-mail: varanamfm@yahoo.com
Jaffna Office: Managing Director, No.20, Kannathiddy Road, Jaffna.



Chini Tours
முதல் முறையாக
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா ஊடாக திருகோணமலை வரையிலான T.V பார்க்கும் வசதியுடன்கூடிய அரைச் சொகுசு பஸ் சேவை.
Point Pedro - Jaffna - Vavuniya - Trincomalee




AANGELA,
NO.493/4, N.C ROAD,
THIRUKKADALOOR,
TRINCOMALEE.
Tel: 0752422977, 0779088468

ATHIKAA
NO.734, HOSPITAL ROAD,
JAFFNA
Tel : 021 3207455


# மக்கள் வங்கி அறிவித்தல்

*மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.09.2009 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | | |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய் - 837 | | |
| 3 | காங்கேசன்துறை - 031 | | |
| 4 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | | |
| 5 | யாழ்.பிரதான வீதி - 104 | | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய் - 865 | | |
| 7 | நெல்லியடி - 106 | | |
| 8 | அச்சுவேலி - 107 | | |
| 9 | சங்கானை - 108 | 10.10.2010 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 10 | சுன்னாகம் - 109 | | |
| 11 | சாவகச்சேரி - 110 | | |
| 12 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 13 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | | |
| 14 | சேவை நிலையம், திருநெல்வேலி - 855 | | |
| 15 | யாழ்.கன்னாதிட்டி - 284 | | |
| 16 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |
| 17 | பருத்தித்துறை - 285 | | |

*அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.*

**பிராந்திய முகாமையாளர்**
*மக்கள் வங்கி பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*
(இ/569096)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மத்திய மாகாணத்தில் இடமாற்றம் வழங்கப்படவில்லை

## இலங்கை ஆசிரிய சேவை சங்கம் கடும் கண்டனம்

கொழும்பு, ஓக. 20

கிழக்கு மாகாணத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு மத்திய மாகாணத்துக்கு இடமாற்றம் வழங்கப்படாமைக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வரும் சுமார் 200 ஆசிரியர்களுக்கு மத்திய மாகாணத்துக்கு இடமாற்றம் வழங்கு வதில்லை எனக் கிழக்கு மற்றும் மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள் எடுத் திருக்கும் முடிவுக்கு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு இடமாற்றம் வழங்காவிட்டால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அச்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ளி)

# கல்வி மேம்பாடுகள் குறித்து ஆராய குழுவொன்று கிண்ணியாவில் நியமிப்பு

திருகோணமலை, ஓக. 20

கிண்ணியா கல்வி வலயத்தின் கல்வி மேம்பாடுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் எச்.எம்.எம்.பாயிஸ் இக்குழுவை நியமித்துள்ளார்.

இக்குழுவில் கல்வி வலய அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் மூன்று தலைப்புகளில் கிண்ணியா கல்வி வலயத்தின் கல்வி மேம்பாடுகள் குறித்து ஆய்வு செய்யவுள்ளனர்.

பாடசாலையின் கல்வி அபிவிருத்தி, முகாமைத்துவம், ஒழுக்கம் ஆகிய தலைப்புகளில் இந்த ஆய்வுகள் இடம்பெறவுள்ளன.

கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள 57 பாடசாலைகளுக்கும் இக்குழுவினர் விஜயம் செய்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் 15 கல்வி வலயங்கள் உள்ளன. இக்கல்வி வலயங்களில் கிண்ணியா கல்வி வலயம் ஆரம்பக் கல்விப் பிரிவில் 15ஆவது இடத்திலும், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் 10ஆவது இடத்திலும், கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் கல்வி வலயங்களில் இறுதி இடத்திலும் இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

இதற்கான காரணங்களைக் கண்டறிவதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# மதீனா நகர் கிராம மக்கள் சுத்தமான குடிதண்ணீரின்றி அவதி

திருகோமலை, ஓக. 20


கிண்ணியா நகரசபைக்குட்பட்ட மதீனா நகர் கிராம மக்கள் சுத்தமான குடிதண்ணீரின்றி பல்வேறு சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இக்கிராம மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு நீண்டதூரம் செல்ல வேண்டிய சிரமத்துக்குள்ளாகின்றனர். இங்குள்ள கிணறுகளிலுள்ள தண்ணீர் உவர்த்தன்மை கொண்டது. அதனால் அதைப் பாவிக்கமுடியாதுள்ளது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ளி)




# கிண்ணியாவில் யானை நஞ்சு வைத்துக் கொலை

## கடத்தல்காரரின் சதி வேலை



திருகோணமலை, ஓக.20

திருகோணமலை - கிண்ணியா மணிராசன் குளம் பகுதியில் கடத்தல் காரர்கள் நேற்று முன்தினம் காட்டு யானைகளுக்கு நஞ்சு வைத்துக் கொலை செய்துள்ளனர்.

இதனை கிண்ணியா பிரதேசத்துக்குப் பொறுப்பான மிருக வைத்தியர் உறுதிசெய்துள்ளார்.

யானைகளின் உடல் உறுப்புகளைக் கடத்தும் கடத்தல்காரர்களே இக்கொடூரச் செயலைச் செய்திருக்கலாம் எனக் கிண்ணியா பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேக நபர்களைக் கைது செய்யும் நோக் கில் விசேட பொலிஸ் குழுவொன்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது. (ளி)

# காரைதீவு மயானப் பாலம் நவீனவடிவில் நிர்மாணிப்பு

மட்டக்களப்பு, ஓக. 20

காரைதீவு இந்து மயானத்திற்குச் செல்லும் வீதியிலுள்ள மயானப்பாலம் நவீன வடிவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் ந.ஜீவராசா தொடர்ச்சியாக விடுத்த வேண்டுகோளின் பேரில் இப்பாலத்தை நிர்மாணிக்க ஐ.நாவின் 'யுனொய்ஸ்' அமையம் இணக்கம் தெரிவித்துள்ளது. அவ்விடத்திலுள்ள சிறு பாலத்தில் வாகனங்கள் செல்லமுடியாது. இதனால் மயானத்திற்குச் செல்வோர் வாகனங்களை நிறுத்திவிட்டு நடந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள்.

இதைவிட நிந்தவூரிலிருந்து நேரடியாக சாய்ந்தமருது செல்வோர் இவ்வீதியைப் பயன்படுத்துவதுண்டு. எனவே இவ்வீதியும் புனரமைக்கப்படவேண்டிய தேவையுள்ளது.

மேற்படி மயானப்பாலம் நவீன வடிவில் நிர்மாணிக்கப்படவிருப்பது குறித்து 'யுனொய்ஸ்' அமையத்திற்கு பிரதேசசபைத் தவிசாளர் ஜீவராசா மிக்க மகிழ்ச்சியுடன் நன்றி கூறியுள்ளார். காரைதீவுச் சமூகமும் இவ்வமையத்திற்கு நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# நெருக்கடி நிலையை சந்திக்கும் மலையகப் பாடசாலைகள்

## இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 20

இலங்கையின் தோட்டப்புறப் பாடசாலைகள் மிகவும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன. விசேடமாக, தோட்டப் பகுதிகளில் வருடாந்தம் பாடசாலைகளை விட்டு விலகும் மாணவர்களின் எண்ணிக்கை 20சதவீதம் என்ற அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.

ஆரம்பப் பாடசாலையான முதலாம் ஆண்டுமுதல் 5 வகுப்பு வரையுள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை 8.4 சதவீதமாகக் காணப்படுகின்றது என புதிய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

'ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நேஷனல்' நிறுவனம் தோட்டப்புறங்களில் மேற்கொண்ட புதிய ஆய்வின் மூலம் இந்த தகவல்கள் தெரியவந்துள்ளன. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களின் சதவீதம் தோட்டப்புறங்களில் 20 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இந்த எண்ணிக்கை 5 சதவீதமாகவே காணப்படுகிறது.

அத்துடன், ஆரம்பப் பாடசாலைகளில் இருந்து விலகும் மாணவர்களின் சதவீதம் தோட்டப்புறங்களில் 8.4 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இந்த எண்ணிக்கை 1.4 வீதமாகக் காணப்படுகின்றது.

இதைத் தவிர, தோட்டப்புறங்களில் சாதாரண தரப் பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 7 சதவீதம் என்ற குறைந்த எண்ணிக்கையில் உள்ளது.

அதேவேளை, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு சத வீதமாகக் காணப்படுகின்றது. தோட்டப்புற பாடசாலைகளில் போதிய வசதிகள் காணப்படவில்லை. அத்துடன், தோட்டங்களில் இயங்கும் பாடசாலைகள் பலவற்றில் உயர்தர வகுப்புகள் இல்லை எனவும் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

# மாட்டுத் தலைகள் கடத்தல்: பண்டாரவளையில் ஐவர் கைது

சட்டவிரோதமான முறையில் பதினெட்டு மாட்டுத்தலைகளை லொறியில் கொண்டு சென்ற ஐவரை பண்டாரவளை பொலிஸார் கைது செய்துள்ளனர். வெள்ள வாயாவிலிருந்து ஜா-எலைக்குச் சென்ற லொறியை பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து சோதனையிட்ட போதே இவர்கள் அனுமதிப் பத்திரமின்றி, சட்டவிரோதமான முறையில் மாட்டுத் தலைகளை கொண்டுசெல்வது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் பதுளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனவும், பொலிஸார் தொடர்ந்தும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)

# தொழில் நுட்பக் கல்லூரியை மலையகத்தில் நிறுவ ஏற்பாடு

கொழும்பு, ஓக. 20

மலையகப் பெருந்தோட்ட இளைஞர்களின் மேம்பாட்டுக்காகத் தொழில் நுட்பக் கல்லூரியொன்றை நிறுவுவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை எற்கனவே பெற்றுக்கொண்டுள்ளார் எனவும், நுவரெலியா மாவட்டத்தில் இதை நிறுவுவது குறித்து தொழிற் பயிற்சி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனவும் அவர் கூறினார்.

மலையகப் பெருந்தோட்ட இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், ''எதிர் காலத்தில் மலையகத்தில் 90 வீதமானவர்கள் கல்வியறிவில் சிறந்து விளங்குவார்கள். அத்துடன் சர்வதேசமெங்கும் பல்துறைகளிலும் சிறந்த நிபுணர்களாக திகழ்வர்'' என்றார். (ளி)

## தீவிபத்தால் பாதிக்கப்பட்ட

# றொக்லண்ட் தோட்டமக்கள் தொடர்ந்தும் பாடசாலையில்

நுவரெலியா, ஓக. 20

உடபுசல்லாவை றொக்லண்ட் தோட்டத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ள 15 குடும்பங்களைச்சேர்ந்த 78 பேர் சூரியகஹ பத்தன சிங்களப் பாடசாலையில் தொடர்ந்தும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களுக்கான உடுதுணிகள் மற்றும் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் நுவரெலியா மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி.குமாரஸ்ரீ தெரிவித்தார்.

அத்துடன் மின்சார ஒழுக்கின் காரணமாகப் பாதிப்படைந்துள்ள உடபுசல்லாவை றொக்லண்ட் தோட்டத்தொழிலாளர்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்குத் தோட்ட நிருவாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென உரிய தரப்பினரின் கவனத்திற்கு தாம் கொண்டு வந்துள்ளார் என்றும் நுவரெலியா மாவட்டச்செயலாளர் டி.பி.ஜி .குமாரஸ்ரீ மேலும் தெரிவித்தார்.

உடப்புசலாவ- டெல்மார், றொக்லண்ட் டிவிஷனில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.10 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் இந்தத் தோட்டத்திலுள்ள முதலாம் இலக்க லயன் குடியிருப்பு முற்றாக எரிந்து நாசமாகியதில் 15 வீடுகள் பாதிப்படைந்தன.

இந்த வீடுகளிலிருந்த அனைத்து உடைமைகளும் தீக்கிரையாகின. எனினும் எவருக்கும் காயங்களோ உயிர் சேதமோ ஏற்படவில்லை. பொதுமக்களும் நுவரெலியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயைக்கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள் சூரியகஹ பத்தன சிங்களப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தோட்ட நிருவாகம் சில உடனடி உதவிகளை வழங்கியது. (ளி)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் கடிதம் எழுதும் பண்பாடு

மொழியை, எழுத்தைக் கற்றுக் கொண்ட மனிதனின் மன உணர்வின் வடிகால்களில் ஒன்றாகக் 'கடிதம்' என்பதும் உள்ளது.

**தகவல் தொழில்நுட்பத்தின் இராட்சத வளர்ச்சியும் அவை மிக மலிவு விலையில் மனிதருக்குக் கிடைத்ததும், கூடவே சேர்ந்து கொண்ட அவசர வாழ்க்கையும் கடிதம் எழுதுதல் என்ற பண்பாட்டில் இருந்து எம்மைத் தூர வைத்துவிட்டது.**

விலகிப்போகும் பண்பாடு ஒன்றை எழுத்தில் ஆவணமாக்கி மறையாமல் இருக்க இங்கு பதிவுகளை மேற்கொண்டுள்ளேன்.

கடிதம் என்பது தமிழ் சொல்லா? இல்லை உருது மொழிச்சொல் என்கின்றனர் தமிழ் தெரிந்தோர்.

மடல், முடங்கல், திருமுகம் போன்றவை தான் தூய தமிழ் சொற்கள் என்கின்றனர். காகிதத் தாளில் பேனாவால் கடிதம் எழுதி 'என்வெலப்' எனக் கூறும் கடித உறையில் இட்டுப் பெறுமதிக்கேற்ப முத்திரை ஒட்டி தபால் பெட்டியினுள் இடும் முறையைப் பிரித்தானியர் தான் உலகிற்கு அறிமுகம் செய்ததாக வரலாறு கூறுகின்றது. அப்படியானால் தமிழர்களாகிய எம்மிடம் கடிதம் எழுதும் முறையோ, பண்பாடோ இருக்கவில்லையா?

இருந்திருக்கிறது. பண்டைய மன்னர் காலத்தில் புறாக்களின் கால்களில் செய்தியைக் கட்டி விட்டுத் தகவல் அனுப்பினர்.

அரசர்கள் சேவகன் மூலமாகவோ, படைவீரன் அல்லது ஒற்றன் மூலமாகவோ தகவல் அனுப்பினர். மன்னராட்சி தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட ஐரோப்பியரான அந்நியராட்சி வந்தது.

**பிரித்தானியர் எமக்குக் கற்பித்து விட்டுப்போன பண்பாட்டு அம்சங்களில் ஒன்றுதான் இன்றைய கடித முறை.** கற்பித்துவிட்டுப் போனதும் எம்மை விட்டுக் கைவிட்டுப் போகும் கட்டத்தில் உள்ளது.

அப்படியானால் இன்று யாரும் கடிதம் எழுதுவதில்லையா?

எழுதுகிறார்கள்தான். வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், பிற நிறுவனங்கள் வாடிக்கையாளருக்கும், தேவையானோருக்கும் உத்தியோகபூர்வ கடிதங்களை அனுப்புகின்றன. அவையும் கணனியால் வடிவமைக்கப்பட்ட கடிதங்கள்தான். அரசதுறை நிறுவனங்களும் கணனித் தயாரிப்புக் கடிதங்களையே அனுப்புகின்றன. பெட்டிசம் போடுதல், மொட்டைக் கடிதம் எனக் கூறப்படுகின்ற வகைக் கடிதங்கள் எழுதப்பட்டு அரச துறைக்கோ, ஆள்களுக்கோ அனுப்பப்படும் நிகழ்வுகள் இன்னமும் தொடர்கின்றன. மொட்டைக் கடிதம் எழுதுவதில் பெயர்போன சில கிராமத்தவர்களும் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். பெயர்களுக்கு முன்னால் 'பெட்டிசம்' என அடைமொழியை இட்டு அழைக்கப்படும் மனிதர்களும் எம்மிடையே உள்ளனர். இந்தக் கடிதங்கள் நன்மை, தீமை இரண்டையும் தருகின்றன.

எமது நாட்டில் சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் உள்ளோரில் அனுமதி கிடைத்த சிலர் தமது மன உணர்வுகளை உறவுகளுக்குத் தெரியப்படுத்தக் கடிதம் எழுதி அனுப்புகின்றனர். இக்கடித முறையும் எம்மிடையே கொடிய யுத்தத்தின் நிழலாக இன்னமும் உயிர்வாழ்கின்றது. இது ஓர் வேதனையான கடித முறை தான்.

விடலைப்பருவம் படலை தட்டிப் பார்க்கும் பருவ வயதினர் 'ரீன்ஏஜ்' என்பார்களே. அவர்களும் கடிதம் எழுதும் முறையைச் சிறியளவிலாவது கடைப்பிடிக்கின்றனர். தமது விருப்பங்களை எழுத்தில் வடித்து நேரடியாகவோ, மூன்றாம் தரப்பு அனுசரணையாளர்கள் (தூது) ஊடாகவோ சேர்ப்பிக்கின்றனர்.

இது சற்றுச் சுவையான கடிதப் பரிமாற்றம்தான். ஆனாலும் பெரும்பாலான 'ரீன்ஏஜ்' பருவத்தினர் கைத்தொலைபேசிகளில் எஸ்.எம்.எஸ் போடுதல், படங்களைத் தகவலாக அனுப்புதல், ஈமெயில் அனுப்புதல் என மாறிவிட்டனர்.


சரி கடிதம் என்னும் பண்பாட்டைப் பின்நோக்கிப் பார்ப்போம்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில்தான் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். கல்வியில் சிறந்து விளங்கிய எம்மவர்கள் நாட்டின் நாலா பாகங்களிலும் உயர், நடுத்தர பதவிகளை வகித்தனர்.

மலேசியாவிற்கும், சிங்கப்பூருக்கும் ஏராளம் பேர் உத்தியோகம் பார்க்கச் சென்றனர்.

அங்கிருந்து 'மணி ஓடர்' என்னும் காசுக்கட்டளை மூலமாக இங்கிருக்கும் தமது உறவுகளுக்கும் மாதாந்தச் சம்பளத்தை அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்பும்போது மணி ஓடருடன் சேர்ந்து கடிதம் ஒன்றுமிருக்கும்.

இதில் தமது உறவுகளின் சுக துக்கங்கள், தமது சுகதுக்கங்கள் எழுதப்பட்டிருக்கும். நாட்டின் நாலாபாகங்களிலும் வெளிநாடுகளிலும் இருப்போர் கடிதங்கள் மூலமாகவே உறவாடினர். கடிதத்தைச் சுமந்து வரும் தபால்காரன் வரவை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பார்கள். வருகின்ற



சைக்கிள்காரர் எல்லோரும் தபால் காரராக தெரியும் உணர்வு வரும். கடிதத்தில் முகம் பார்ப்பார்கள். உணர்வுகளால் எழுத்துக்களுடன் கதைப்பார்கள். அடுத்த கடிதம் வரும் வரையில் இந்தக் கடிதத்தை அடிக்கடி எடுத்து வாசிப்பார்கள். ஆழமான உறவு ஒன்று எழுத்துக்களின் மீது இருந்தது.

இப்போது தொலைபேசியில் கதைப்பதால் அது காற்றுடன் காற்றாகக் கரைந்து போய்விடுகிறது. கடிதம் சடப்பொருளாயினும் இரத்தமும் சதையும் உயிருமுள்ள மனிதர்களுக்கு அது உயிர்ப் பொருளாகவே அப்போது தெரிந்தது.

ஒரு முறை நாடாளுமன்றத்தில் **அமைச்சர் என்.எம்.பெரேரா "யாழ்ப்பாணத்தவரின் பொருளாதாரம் மணி ஓடர் பொருளாதாரம் தான். மலேசியா, சிங்கப்பூர் சம்பளங்களும் பென்சன்களும், தென்பகுதியிலிருந்து போகும் உத்தியோகச் சம்பளங்களின் மணி ஓடரும்தான் அவர்களின் உயிர் நாடி" என்று கூறியதாக மூத்தோர்கள் நினைவு கூருகின்றனர்.**

மணி ஓடர் பொருளாதாரம் 1977 ஆம் ஆண்டைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றதாலும்,1980ஐத் தொடர்ந்து மேற்கு ஐரோப்பிய , வடஅமெரிக்க, ஓசானிக் நாடுகளுக்குச் சென்றதாலும் "ட்றாவ்ற்" எனப்படும் வங்கி வரைபுப் பொருளாதாரமாகவும் மாறியது.

அப்போது விமானம் ஏறிவரும் வங்கி வரைபுடன் (ட்றாவ்ற் ) உடன் தமது உறவுகளுக்கு கடிதம் அனுப்பினர். தமது சுக துக்கங்களைப் பகிர தனியாகவும் கடிதம் அனுப்பினார்கள். இப்போது இருப்பதைப் போல தொலை பேசி வசதிகள் அப்போது இல்லை.

மொழி தெரியாத, மனிதர்களைப் புரியாத உடலுக்கு பழக்கமில்லாத சுவாத்தியமுள்ள இடத்திலிருந்து கடிதங்களை எழுதி அனுப்புவதில் புலம்பெயர் உறவுகள் அக்கறை செலுத்தினர்.

அவர்களும் இங்குள்ளோரும் கடிதத்தில் முகம் தேடினர். காகிதத்துடன் பேசினர். ஆனந்தக்கண்ணீர் பொழிந்தனர். இடையிடையே தொலைபேசியிலும் கதைத்தனர்.

கடிதங்களைக் காவி வருவதற்கு காங்கேசன்துறைக்கும் கொழும்புக்குமிடையே ஒரு புகையிரத சேவை 1990 ஜூன் மாதம் வரையில் நடைபெற்றது.

இச்சேவையிலீடுபடும் புகை வண்டியை மெயில் ரெயின் என அழைப்பார்கள்.

மாலை 6 மணி 5 நிமிடத்திற்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பை நோக்கி ஒன்றும், அதே நேரம் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி ஒன்றுமாக மெயில் ரெயின்கள் பயணத்தைத் தொடங்கும். இச்சேவையில் பயணிகளும் ஏறிப் பயணம் செய்வார்கள்.

காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் மெயில் ரெயின் அன்றைய தினம் சேர்ந்த தபால்களை வழிகளில் உள்ள புகையிரத நிலையங்களில் சேகரித்துக் கொண்டே கொழும்பை நோக்கிப் பயணிக்கும்.

அதேபோல கொழும்புக் கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணிக்கும் புகையிரதமும் தபால்களைச் சேகரித்தவாறு வடக்கு நோக்கிப் பயணிக்கும். இதிலும் பயணிகள் ஏறமுடியும்.

இந்த மெயில் ரெயினில் பிரயாண தபால் நிலையம் ஒன்று படு சுறுசுறுப்பாக இரவு முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கும்.

ரயில் ஓட ஓட கிடைத்த தபால்கள் தரம் பிரிக்கப்படும். அந்தந்தத் தபால் நிலையங்களுக்குரியவை தனியான தபால் பைகளில் இடப்பட்டுக் கட்டப்படும். அநுராதபுரத்தில் இரு ரயில்களும் சந்திக்கும். கொழும்பிலிருந்து வரும் தபால் ரயிலுக்கு காங்கேசன்துறை முதல் அநுராதபுரம் வரையிலான தபால்கள் ஒப்படைக்கப்படும். அதேபோல கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரையிலான தென்பகுதி பிரதேச தபால் நிலையங்களின் தபால்கள் பைகளில் கட்டப்பட்டு அங்கிருந்து வரும். மெயில் ரெயிலுக்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக் கோட்டை நோக்கிப் பயணிக்கும் மெயில் ரெயின் அநுராதபுரத்திற்கு அப்பாலுள்ள புகையிரத நிலையங்கள் ஒவ்வொன்றிலும் அந்தந்த பிரதேசங்களுக்குரிய தபால் பைகளை ஒப்படைத்தவாறு செல்லும்.

அதேபோல வடக்கு நோக்கிப் பயணிக்கும் மெயில் ரெயினும் அநுராதபுரத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடைப்பட்ட பிரதேசங்களில் வரும் தபாலகங்களின் பைகளை அண்மித்த நிலையங்களில் ஒப்படைத்துச் செல்லும்.

இத்துரித சேவையால் அன்றைய தினம் மாலை 4மணி வரையில் சேர்ந்த தபால்கள் பெரும்பாலும் அடுத்த நாள் காலையில் உரிய இடங்களுக்குச் சென்றடைந்தது.

கடிதப் பாவனையில் மிகப் பெரும ளவில் தங்கியிருந்த பொதுமக்களும் , நிறுவனங்களும் இதனால் மிகப் பெரும் நன்மை அடைந்தனர்.

**இப்போதும் மெயில் ரெயின் வவுனியா தாண்டிக்குளத்திற்கும் கொழும்புக் கோட்டைக்குமிடையே பயணித்துக் கொண்டிருக்கிறது.**

**எப்போது காங்கேசன்துறை வருமென நீங்கள் கேட்பது என் காதில் விழுகின்றது.**

**காலம்தான் விடையைக் கூற வேண்டும்.**

கடிதம் நீதிமன்றங்களில் சான்றுப் பொருளாக சமர்ப்பிக்கப்படும் வழக்கம் இன்னமும் தொடர்கிறது.

சினிமாவிலும் கடிதம் மிகப் பெரும் கருப்பொருளாக நீண்ட காலமாக இருந்து வருகிறது.

40 வருடங்களுக்கு முன்பு வந்த "தபால்காரன் தங்கை" எனும் ஜெய்சங்கர் நடித்த படத்தில் ஒருவர் மனதை ஒருவர் அறிய உதவும் சேவை இது... எனும் பாடல் வருகிறது. கடிதம் கொடுக்கும் தபால்காரனின் கதையாக படமும்,பாடலும் வருகின்றது.

ஆசையில் ஓர் கடிதம் எனும் படம் அண்மைக்காலத்தில் வந்தது. கடிதம் என்பதை வைத்தே ஏராளம் சினிமாப் பாடல்கள் வந்துள்ளது.

நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள் என யாவற்றிலும் கடிதம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்துள்ளது.

கடிதம் எழுதும் வழக்கம் அருகி விட்டாலும் பாடசாலை மாணவர்களுக்கு 3 ஆம் வகுப்பு முதல் ஜி.சி.ஈ சாதாரண தரம் வரை கடிதம் எழுதுதல் தமிழ்ப் பாடத்தில் உள்ளது. பரீட்சைக்குரிய வினாவாகவும் உள்ளது. கடிதம் எழுதும் வகைகள், நுட்பங்கள் மாணவர்களுக்கு ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

பத்திரிகைகளில் பேனா நண்பர் பகுதி என முன்பு வந்தது. இப்போதும் சில பத்திரிகைகளில் வருகின்றன. இதன் ஊடாகக் கடிதம் எழுதி நண்பர்கள் ஆனோர் பலர். திருமணம் செய்து கொண்ட சிலரும் உள்ளனர்.

பேனா நண்பர் பகுதி இப்போது 'பேஸ்புக்', இணைய நண்பர்கள் என மாறிவிட்டது.

உலகின் பெரிய பதவி வகித்தவர்கள் எழுதிய கடிதங்கள் பிற்காலத்தில் பெரிய தொகைக்கு ஏலம் போயுள்ளன. தலைவர்களின் கடிதங்கள் நூதனசாலைகளில் காட்சிப் படுத்தப்படுகின்றன. அவை நூல்களாகவோ , இலக்கியங்களாகவோ உயிர்வாழ்கின்றன.

இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் சிறையிலிருந்த ஜவஹர்லால் நேரு தமது மகள் இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்கள் உலகப்புகழ்பெற்ற கடித இலக்கியங்களில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது.

**தமது நட்பின், காதலின், சாதனையில், துக்கத்தின் அடையாளக் கடிதங்களை ஞாபகத்திற்கு வைத்திருக்கும் வழக்கம் சிலரிடம் தொடருகின்றது.**

கடிதங்கள் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வரும் காலங்களில் அவற்றின் முத்திரையைச் சேகரித்து வைத்திருக்கும் மாணவர்களிடையேயும் வளந்தோரிடமும் இருந்தது.

இது அறிவை வளர்க்கும் சிறந்த பொழுதுபோக்காக இருந்தது.

பாடசாலைகளில் முத்திரை சேகரிக்கும் கழகங்களும் முன்பு சிறப்பாக இயங்கியுள்ளன.

**- வே.தபேந்திரன் -**

கடிதம் எழுதும் பழக்கம் சரிந்து விட்டதால் அப்பழக்கமும் அருகிவிட்டது. முத்திரைகளின் மாதிரிகளை அச்சிட்டு விற்கும் நடைமுறை தோன்றிவிட்டது.

கடிதம் எழுதுதலைப் பற்றிப் பெரியவர் ஒருவர் கூறும் போது **"கழுத்தைக் கொடுத்தாலும் எழுத்தைக் கொடுக்கக் கூடாது"** என்றார். எழுத்தில் எழுதும் போது உணர்வுகளைக் கண்டபடி கொட்டாது நிதானமாக இருக்க வேண்டும் என்பதையே அப்படிக் கூறினார். கண்டபடி கடிதங்களை எழுதி பரம்பரைப் பகை கொண்டாடும் குடும்பங்களும் உள்ளன.

1990 ஜூன் மாதம் மீண்டும் தொடங்கிய யுத்தம் காரணமாக மெயில் ரெயின் வருவது ஒரேயடியாக நின்றுவிட்டது.


மின்சாரம், தொலைத்தொடர்பு வசதிகள், தரைவழிப் போக்குவரத்து யாவும் ஒரேயடியாக நின்று போனது. தகவல் தொழில்நுட்பத்திலிருந்து விலகி இருண்ட யுகத்திற்குள் போனோம். சிறிது காலத்திற்குப் பின்பு யாழ்ப்பாணம் வந்த சரக்குக் கப்பல்களில் தபால் பைகள் வரத் தொடங்கின.

குமண,லில்லி லில்லி, லங்கா முடித, சஜிந்தா, அட்லான்ரிக் றீபர்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோயில்



ஆலயம் என்பது ஆன்மா இறைவனில் லயிக்கின்ற இடமாகும். ஆலயம் மனித உடலமைப்பைப் போன்றது.'' காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக.....'' என்று திருநாவுக்கரசு நாயனாரும் '' உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்'' என திருமூலநாயனாரும் பாடினர். ஆகம விதிப்படி அமைக்கப்படும் ஆலயமானது மனிதன் தரையிலே நேராகப் படுத்திருப்பதைப் போன்ற அமைப்பில் காணப்படும்.

அவ்வகையில் 150 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சக்தி வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான சாவகச்சேரி, சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயமும் மகிமைமிக்கதாக விளங்குகின்றது.

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் வாழ்ந்த ஆறுமுகம் சிவனடியார் என்பவர் சிறந்த புராணபடன விற்பன்னராகத் திகழ்ந்தார். அந்தக் காலத்தில் புராண படனம் என்பது ஒருவர் பாட மற்றவர் அதன் பொருளை உரைக்கும் முறை. அந்த வகையில் புராணம் படிப்பதில் வல்லவரான சிவனடியார் சங்கத்தானையில் உள்ள முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி, திருவெம்பாவைவிரத காலங்களில் கந்தபுராணம், திருவாதவூர் அடிகள் புராணம் ஆகியவற்றைப் பாடுவார். இந்த விரத காலங்களில் ஆலயத்திற்கு வருவோர் புராண படனத்தைச் செவியுற்றுச் செல்வது வழமை.

தான்பெற்ற கலையை தனது குலத்திற்குப் புகட்ட வேண்டுமென்ற நல்நோக்கத்துடன் முருகன் கோயில் தர்மகர்த்தாவிடம் புராணப் புத்தகத்தை இரவலாகக் கேட்டார். அப்போதிருந்த சமூக முறைமைகளால் புத்தகங்களைக் கொடுக்க தர்மகர்த்தா மறுத்துவிட்டார்.

இதனால் வேதனையடைந்த சிவனடியார் தமது குலக் கடவுளான சக்தியிடம் தமது கவலையைத் தினமும் ஒப்புவித்தார். ஒருநாள் இவர் வாழ்வில் கனவுருவில் ஓர் அதிசயம் நடந்தது.

அழகான ஓர் மங்கை ஒரு மாம்பழத்தை கையில் கொடுத்து இது போன்ற மாம்பழம் ஓரிடத்தில் உள்ளது. அந்த இடத்தில் தனக்கோர் ஆலயம் அமைக்குமாறு கட்டளை இட்டதோடு கிடைக்கும் மாம்பழத்தை அனைவரும் சுவைத்து மகிழுமாறு கூறினாள்.

அதிகாலையில் எழுந்ததும் தனது சமூகத்தினரை அழைத்து தனது கனவில் வந்ததைக் கூறி மாம்பழத்தினைத் தேடுமாறு கூறினார். அனைவரும் அந்தப் பகுதியில் உள்ள மாமரங்களின் கீழே மாங்கனியைத் தேடி எங்கேயும் மாம்பழத்தைக் காணவில்லை. இறுதியாக அங்குள்ள புளியமரத்துக்கு அருகில் உள்ள கல் ஒன்றின் மீது கனவில் சக்தி வழங்கியதைப் போன்ற மாம்பழம் இருப்பதைக் கண்டு எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினர்.

சக்தியின் கருணையை வியந்து மெய்சிலிர்த்து மகிழ்ந்தனர். உடனேஅந்த இடத்தைச் சுத்திகரித்து விநாயகனை வேண்டி தேங்காய் உடைத்து அம்மனை நினைத்துக் கற்பூரம் ஏற்றினர். அம்மன் கனவிற் கேட்டதற்கிணங்க கண்டெடுத்த மாங்கனியுடன் ஏனைய பழங்களுடன் சேர்த்து பஞ்சாமிர்தம் செய்து அம்மனுக்குப் படைத்துப் பிரசாதமாக அடியார்கள் எல்லோருக்கும் மருந்து வழங்கினார் சிவனடியார்.

இச்சம்பவம் 1864 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் திருவோண நட்சத்திரத்தில் நடந்ததாகச் சான்றுகள் கூறுகின்றன.

மாங்கனி கண்டெடுத்த இடத்தில் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆலயத்தை நிறுவினர். ஆலயம் அமைக்கவிருந்த இடத்திற்கு அருகில் மிகப் பழைய கிணறு ஒன்று இருந்தது. அந்தக் கிணறே தற்போது ஆலயத்தின் திருமஞ்சனக் கிணறாக உள்ளது.

மாங்கனி காணப்பட்ட இடம் சிவனடியாரின் காணி என்பதால் அந்த இரண்டரைப் பரப்புக் காணியினை ஆலயத்திற்கே அவர் தர்மசாசனம் செய்தார். இதனையடுத்து இதற்கு அருகில் உள்ள ஒன்றேமுக்கால் பரப்புக் காணியை தம்பாப்பிள்ளை சின்னத்தம்பி என்பவரும் நாலேகால் பரப்புக்காணியை பாசையூரைச் சேர்ந்த அவுராம்பிள்ளை சவுரி சிமியோனின் மனைவி தங்கம் என்பவரும் ஆலயத்திற்கு தர்மசாசனம் செய்தனர். (தொடரும்)

# சாவகச்சேரி ஸ்ரீபழநி ஆண்டவர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம்



நகர்ப் பகுதியில் உள்ளவர்களுக்கு பணப்புழக்கம் அடிக்கடி தேவையான தொன்றாகும். கிடைக்கும் பணத்தை சேமித்து பின்னர் தேவைக்கேற்ப கடனாகப் பெற்று வருவது அநேகமாக அனைத்து இடங்களிலும் காணமுடிகிறது.

அவ்வாறான ஒரு நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு 18 வருடங்களில் பல லட்சம் ரூபாவினை சுழற்சி முறையில் கடனாக வழங்கியதுடன் பல்வேறு நலத் திட்டங்களையும் அங்கத்தவர்களுக்கு வழங்கிவரும் சாவகச்சேரி, டச்சு வீதி, ஸ்ரீ பழநி ஆண்டவர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கத்தினைப் பற்றி இவ்வாரம் பார்ப்போம்.

தென்மராட்சிப் பகுதியில் இயங்கும் சிக்கன கடன் வழங்கு சங்கங்களின் செயற்பாடுகளால் சங்கங்களின் அங்கத்தவர்கள் அடையும் நன்மைகள் பற்றி அறிந்து கொண்ட மகாலிங்கம் விவேகானந்தன் என்பவர் டச்சு வீதிப் பகுதியில் உள்ள சிலருடன் கலந்தாலோசித்ததன் பயனாக அப்போது குறித்த பகுதியின் கிராம அலுவலராக இருந்த வை.இராசரத்தினம் தலைமையில் டச்சு வீதி, பழநி ஆண்டவர் ஆலய முன்றலில் அங்குரார்ப்பணக் கூட்டம் 1992.10.20 ஆம் திகதி நடைபெற்று இந்தச் சங்கம் உதயமானது.

சங்கத்தின் முதலாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட இ. இராஜகுலசிங்கத்தின் தலைமையில் 25 உறுப்பினர்களுடன் இச்சங்கம் இயங்கத் தொடங்கியது.

ஆரம்பத்தில் ஒவ்வொரு அங்கத்தவரிடமிருந்தும் தலா 20 ரூபா வீதம் சேமமாக அறவிடப்பட்டது. சங்கம் உதயமாகி ஒரு வருடத்தின் பின்னர் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் கடனாக வழங்கி 10 தவணைகளில் கடன் தொகை வட்டியுடன் அறவிடப்பட்டது.

அங்கத்தவர்களுக்குக் கடன் வழங்குவதோடு மட்டும் நின்று விடாமல் பல்வேறு நலத் திட்டங்களும் சங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் அங்கத்தவரின் பிள்ளைகள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றால் ஊக்குவிப்பு பரிசு வருடா வருடம் வழங்கப்பட்டன. காலப்போக்கில் அங்கத்தவர்களின் பிள்ளைகள் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை அதி உயர் சித்தி பெற்றாலோ உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்றாலோ அவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான ஊக்குவிப்புப் பரிசு வழங்கப்பட்டது.

டச்சு வீதி, பழநி ஆண்டவர் ஆலயத்திற்கு அருகில் அலுவலகம் அமைத்து சங்கத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் சங்கத்தின் அனைத்துக் கூட்டங்களும் பழநி ஆலய முன்றலிலேயே நடத்தப்படுகின்றன.

இந்தச் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பிரதான காரணம் கூட்டங்களுக்கு வரும் பொதுமக்களின் நேரந்தவறாமையாகும். கூட்டம் நடைபெறுவதற்கான அறிவித்தலில் குறிப்பிடப்படும் நேரத்திற்கு முன்னரே அனைத்து அங்கத்தவர்களும் சமூகமளித்திருப்பர். குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும். சங்கத்தில் தலைமைப் பதவி வகித்த இ.இராசகுலசிங்கம், சி.இரவீந்திரநாதன், க.இரத்தினசோதி, எம்.பீ.சண்முகநாதன், திருமதி உ.சண்முகநாதன் ஆகியோர் இந்த நடைமுறையினைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவது பாராட்டத்தக்கது.

கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் வருகை தரும் அங்கத்தவர்களுக்கு வருடாந்தக் கூட்டத்தில் பெறுமதிமிக்க ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்குவதும் நேரந் தவறாமைக்கு காரணமாக அமையலாம்.

25 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் அங்கத்தவர் தொகையினை கட்டுப்படுத்தியிருப்பதால் ஒழுங்காக செயற்படும் 45 பேரையே தற்போது அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. இது சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக உள்ளது. தற்போது ஒவ்வொரு அங்கத்தவரும் கட்டாய சேமமாக மாதாந்தம் 200 ரூபாவைச் செலுத்தி வருகின்றனர்.

சேமத்தின் அதிகரிப்பும் கடன் தொகையை அதிகரிக்க உதவியது. ஆரம்பத்தில் 2ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்ட கடன் தொகை தற்போது 50 ஆயிரம் ரூபாவாக உயர்ந்துள்ளது.

இந்தக் கடன் தொகை இன்னும் இரண்டு வருடங்களில் ஒரு லட்சம் ரூபாவாக அதிகரிக்கலாமென சங்க நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக் காலத்தில் சங்க அங்கத்தவர்களுக்கு சுயதொழில் உதவியாகத் தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இரண்டு வருட கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 18 அங்கத்தவர்களுக்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 69 சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்ற போதிலும் பொல்கொல்லவில் உள்ள தேசிய கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான செயல்திறன் போட்டியில் இவ்வருடம் இந்தச் சங்கமும் பங்குபற்றியுள்ளமை சங்கத்தின் சிறந்த தொழிற்பாட்டுக்கு நல்லதொரு உதாரணமாக அமைந்துள்ளது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீ பழநி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் சிறந்த செயற்றிறனுக்கான பரிசிலை தட்டிக் கொள்ள எமது வாழ்த்துக்கள்.

தொகுப்பு: ஐயந்தன்

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். பெரிய மனிதர்கள் சிலரை பார்க்க சென்று அவர்கள் இல்லாமல் போகலாம். கொடுக்கல் வாங்கல்களில் சுமூகமான நிலைமை காணப்படும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். மறதியால் அவதியுண்டு.

### இடபம்



வெளியூர் பயணங்கள் செல்லும் போது, உறவினர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். அனுகூல செய்தி கேட்கலாம்.

### மிதுனம்



எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். நண்பர்களுடன் சேர்ந்து புதிய திட்டம் ஒன்றை செயற்படுத்துவீர்கள். முன்னர் உதவியில்லை என கைவிரித்தவர்கள் இப்போது தேடி வந்து உதவி செய்யலாம். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள்.

### கடகம்



உடன் பிறப்புக்கள் வழியில் மனதிற்கு சந்தோஷம் தரும் செய்தியை கேட்கலாம். நண்பர்களுக்காக தாராளமாக செலவு செய்வீர்கள். உணவு விடயங்களில் எச்சரிக்கை அவசியம். பல நாள்களாக பார்க்காமல் இருந்த நண்பர் ஒருவரை தேடிச் சென்று சந்திப்பீர்கள். சோர்வு, சோம்பல், உடல் உபாதைகளைச் சந்திக்கலாம்.

### சிங்கம்



ஒரு வகையில் ஏற்பட்ட இழப்பு ஒன்றை மற்றொரு வகையில் ஈடுகட்டுவீர்கள். யாரிடமும் கோபம், வேகத்தை காட்ட வேண்டாம். தொழிலில் புதிய மாற்றங்களைச் சந்திக்கலாம். நண்பர் ஒருவர் உங்களை உதாசீனம் செய்யும் வகையில் நடந்து கொள்ளலாம். திட்டமிட்ட சில வேலைகளில் திடீரென மாற்றம் செய்யலாம். புதியவர் நட்பு கிட்டும்.

### கன்னி



சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும். உடல் நலம் உற்சாகம் தெம்பு தரும். அரசியல்வாதிகள் திடீர் பயணங்கள் செல்லலாம். எதிர்பாராத வகையில் சில நல்ல காரியங்கள் நடக்கலாம். சொத்து வாங்கல், கொடுக்கல் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம்.

### துலாம்



தொழில் ரீதியான, குடும்ப ரீதியான பிரச்சினைகளால் மண்டை குடைச்சல்களுக்கு ஆளாகலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என கவலைப்படலாம். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். சிலர் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வீர்கள்.

### விருச்சிகம்



பக்குவமாகப் பேசி எந்த விடயத்தையும் சாதிப்பீர்கள். நாடி வந்த சிலருக்கு பிறரிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவுவீர்கள். விருந்தினர்களால் வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். பல நாள்களாக நீங்கள் முயற்சித்தும் கிடைக்காத ஒன்று இன்று உங்களை தேடி வரலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும்.

### தனுசு



எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்ய வேண்டும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்ற மறப்பதன் மூலம் அதிருப்திக்கு ஆளாகலாம். சொத்துக்கள் மூலம் ஆதாயம் கிடைக்கலாம். உங்களுக்கு எதிராக ஒருவர் செய்யும் சூழ்ச்சியை தந்திரமாக செயற்பட்டு முறியடிப்பீர்கள்.

### மகரம்



நண்பர்கள் உதவியுடன் நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். நீங்கள் பார்க்க நினைத்த உறவினர் ஒருவர் உங்களின் வீடு தேடி வரலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி பெறுவர். பிள்ளைகள் செயற்பாட்டால் பெருமைப்படுவீர்கள்.

### கும்பம்



செவி குளிரும் செய்திகளைக் கேட்கலாம். சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். பல நாள்களாக மன உளைச்சலை கொடுத்துக் கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரலாம். எதிலும் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் உடன் பணிபுரியும் பெண்களின் உதவியை பெறலாம்.

### மீனம்



எதேச்சையாக நடக்கும் சில விடயங்கள் உங்களுக்கு உற்சாகம் தருவதாக அமையலாம். எந்த வேலையையும் மிகுந்த அக்கறையோடு செய்வீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். தேக ஆரோக்கியத்திற்காக சில செலவுகளைச் செய்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

## அருகி வரும்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற பெயர்களைக் கொண்ட பல கப்பல்கள் தபால்களைச் சுமந்து வந்தன.

பெரும்பாலும் இரண்டு மூன்று மாத்திற்கொரு முறை தான் தபால்கள் கப்பலில் வரும்.

மிக மிக ஆவலுடன் கடிதங்கள்ளைப் பார்த்துக் காத்திருப்போம்.

வெளியூர்களில் பிந்திப் போட்ட கடிதம் முந்தி இங்கே கிடைக்கும்; முந்திய கடிதம் அதன்பின் கிடைக்கும்.

விசித்திரங்கள் உள்ள கடிதப் பரிமாற்றத்தை யாவரும் ஏற்றதாகத்தான் வேண்டும்.

1990 ஜூன் முதல் 1991 ஒக்ரோபர் வரை யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு சங்குப்பிட்டி ஊடாகவும் 1991 நவம்பர் முதல் 1993 மே வரையில் கொம்படி ஊரியான் பாதை ஊடாகவும் 1993 ஜூன் முதல் 1996 மே வரையில் கிளாலி ஊடாகவும் எமது வெளியிடப் பயணங்கள் நிகழ்ந்தன. அப்போது செல்லும் பயணிகளிடம் கடிதம் கொடுத்து விடும் வழக்கம் இருந்தது.

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை நோக்கி 'ஐரிஷ் மோனா' எனும் கப்பலும் பலத்த கட்டுப்பாடுகளுடன் பயணிகளுடன் பயணம் செய்த போதும் கடிதங்கள் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

இக்காலத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் அவசர தேவைகளுக்கு உடனடி தகவல் பரிமாற்றத்திற்கு உதவினர். இதனால் பெரும் நன்மைகள் கிடைத்தனது.

இக்காலத்தில் புலம்பெயர் நாடுகளில் இருக்கும் உறவுகளுடன் தொலைபேசியில் கதைத்துப் பணம் வாங்க வவுனியா, கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்லும் வழக்கம் இருந்தது.

1996 மே மாதத்துடன் யாழ். குடாநாடு அரசாங்கத்தின் முழுமையான கட்டுப்பாட்டினுள் வந்ததும் கடிதங்கள் விமானம் மூலமாகவும், கப்பல்கள் மூலமாகவும் செல்லத் தொடங்கின, உள்வரத்தொடங்கின.

தொலைபேசியின் வரவு பல இடங்களிலும் நிகழ கடிதம் எழுதும் பழக்கத்தில் சடுதியான வீழ்ச்சி காணப்பட்டது.

2003ஆம் ஆண்டில் கைத்தொலைபேசிகள், இணைய, மின்னஞ்சல் வசதிகள் வரத் தொடங்க கடிதங்களின் தோற்றம் கிட்டத்தட்ட அடிபட்டு போனது.

புலம்பெயர் உறவுகளும் புகைப்படங்களை மின்னஞ்சல் மூலம் அனுப்புவது அதிகரிக்க கடிதங்கள் வருவது குறைந்தே போனது.

வாழ்ந்த வாழ்க்கை சுவடுகளின் மீது மீண்டும் நடந்து பார்ப்பது சுக அனுபவம்தான். ★

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு அதிரடி மலிவு விற்பனையில்...
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தளபாடங்கள், சகல மாபிள் வகைகள், சோபா செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கால்மிதிபேசன்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
போக்குவரத்து வசதி இலவசம்.
ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0215672061, 077 7578277.

## இருபதாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
27.07.1934



ஆண்டவன் அடியில்
20.08.1990

**மனுவல் டோமினிக்** (வாஸ்)

ஜயா என்று அழைத்தோம் பல்லாண்டு
ஐயாவை இழந்தோம் இருபதாண்டு
ஐயா எப்போதும் எம் மனத்தோடு
நிச்சயம் இருப்பார் மன்றாடு

(102115)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை (சுவிசர்லாந்து).

இல.41, ஒடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

VISA - வீசா
Consultancy Service
UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,
Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas
Call : 0776 209 887
SIC, 734, Hospital Road, Jaffna.

## 7 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



செல்வி
மங்கையர்க்கரசி பொன்னம்பலம்
(மங்கை)

மலர்வு: குப்பிளானில்
23.08.1978

உதிர்வு: லண்டனில்
20.08.2003

அன்பின் திருவுருவாய்
அறிவுச் சுடர் விளக்காய்
பாசத்தைப்பொழிந்த
இனிய இளைய மகளே!
வசந்த காலத்தில் மின்னலென
மலர்ந்த மங்கையே!
மறக்காது அம்மா உன் நினைவு

உன் நினைவில் வாழும்:
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார்.

பொன்மணி வாசா, குப்பிளான் தெற்கு.
தொ.பே: 0778526152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கள் கொண்டாடும் வரலக்ஷ்மி விரதம்

உலகமெல்லாம் இயங்க அடிப்படைச் சக்தியாக விளங்கும் பரம்பொருளைத் தாயாகவும் தந்தையாகவும் வடிவம்கொடுத்து வணங்கும் மரபு நமது சைவசமயத்தில் இருந்து வருகின்றது.

சக்தியை மட்டும் பிரதானமாகப் போற்றி வழிபடும் வழிபாட்டில் வரலக்ஷ்மி விரதமும் பிரதானமானதாகும்.

இவ்விரதமானது பவிஷ்யோத்தர புராணத்திலே சிறப்பித்துக் கூறப்படுகின்றது. ஆவணிமாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமையிலே இது அனுஷ்டிக்கப்பட வேண்டியது.




இந்தவிரதம் மிகவும் மகிமை வாய்ந்த விரதமாகும்.இதன் பெருமை பற்றிய வரலாறு பின்வருமாறு கூறுகின்றது.

திருக்கைலாய மலையிலே வீற்றிருக்கின்ற பார்வதியும் பரமேஸ்வரனும் பக்தர்களுக்காக அருள்புரியக் காத்திருந்த வேளையில் தேவி சிவனைப் பார்த்து 'சுவாமி பூவுலகில் சகல செல்வ போகங்கள் ,சௌபாக்கியங்களையும், புத்திர சம்பத்தையும், சகல விதமான ஐஸ்வர்யங்களையும் தரக்கூடிய விரதம் எது என விநயத்துடன் கேட்டாள்.

உமாதேவியாருக்கு இவ்விரதத்தின் மகிமைபற்றிக் கூற ஆரம்பித்தார் சிவபெருமான்.

முன்பு குண்டினம் என்ற ஊரிலே சாருமதி என்ற சுமங்கலிப் பெண் இருந்தாள். அவள் நல்ல தெய்வபக்தியும் தூய்மையும் ஆசார அனுஷ்டானமும் கொண்டிருந்ததுடன் கணவனைத் தெய்வமாகவும் வழிபட்டு வந்தாள்.

## அதன் பெருமையும் பெறுபேறும்

ஒருநாள் அவள் கனவிலே வரலக்ஷ்மி தேவி தோன்றி இந்த விரதத்தை உபதேசித்து மறைந்தாள். அவள் சகல பெண்களையும் அழைத்து இப்புதுமை பற்றிக் கூறினாள்.

சகல சௌபாக்கியங்களையும் தரக்கூடிய விரதம் பற்றிக் கூறும்படி கேட்டார்கள்.

நன்கு தூய்மையாக்கி மாவிலை தோரணங்களினால் அலங்கரித்த மண்டபத்தின் நடுவே ஒருமேடை அமைக்க வேண்டும். அந்த மேடையில் நெல், அரிசி முதலியவற்றைப் பரப்பி தாமரைக் கோலத்தை அதன் மேல் இட்டு கும்பத்தை வைக்க வேண்டும். வரலக்ஷ்மி விரத பூஜைக்கு பச்சரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைக்க வேண்டும். முடியுடன் கூடிய தேங்காய், ஐந்து அல்லது ஏழு மாவிலையும் வைக்க வேண்டும்.

நன்கு தூய்மையான கழிநூலிலே மஞ்சளைப் பூசி ஒன்பது இழை கொண்டதாக முடிச்சுக்கள் போட்டுக் கும்பம் மீது வைத்து பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

பின்னர் ஒன்பது நாமங்களினால் நூலில் உள்ள ஒன்பது முடிச்சுக்களையும் தியானத்துடன் பூஜித்து விரதகாரர் தமது வலது கையில் கட்டிக்கொள்ள வேண்டும்.

விசேஷ நைவேத்தியமாக நெய்ச்சாதம் படைக்கப்படுகின்றது. முக்கியமான அர்ச்சனைப் பொருளாக அறுகு பயன்படுகிறது.

உபவாசம் போன்று கடுமையான விதிமுறைகள் எதுவும் இல்லை. மதியம் ஒரு நேரம் போசனம் செய்யலாம். இரவு பலகார பட்சணங்கள் ஏதாவது உட்கொள்ளலாம்.

ஒன்பது வருடங்கள் தொடர்ந்து அனுஷ்டித்தபின் விரதோத்யாபனம் செய்யலாம்.

சிலர் திருவிளக்கு வழிபாடு செய்து ஒளித்தீபம் ஏற்றியும் இந்த விரதத்தை நோற்பர்.

இந்த விரதம் மிகவும் பவித்திரமானது. ஆகவே, இதைப் பெண்கள் முறையாக அனுஷ்டித்து சகல ஐஸ்வர்யங்களையும் பெறுவர் என்பது நம்பிக்கை.

- பா.வாணி -

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லைக் கந்தன் ஆலயப் பெருந் திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி உதய திவ்யமணி மகாலிங்கத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். ஏ.ஜெயராம்ன் வயலினும், எஸ்.துரைராசா மிருதங்கமும், செல்வன் ரி.வரோதயன் கடமும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 'திருவாசகம் என்னும் தேன்' என்னும் தலைப்பில் கு.பாலசண்முகன் ஆசிரியர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மஹாகணபதி அறநெறிப் பாடசாலை, அச்செழு துணைவி அறநெறிப் பாடசாலை, துணைவி சிவகாமி அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## பரிவுடன் தந்திடையா

பொதிச் சோறு தந்து
பெருவழிக்கு துணை சென்ற
பெருமானின் புத்திரனே
பட்டடையில் நெல்லும்
பட்டியிலே கோவும்
பானை நிறைந்திருக்கும்
பாலுணவும், மோரும்
உற்றவர்க்கும் கொடுத்து
உண்டு மகிழ்ந்தவர்கள்
கெதியற்று மதி கெட்டு
நிதியற்று வாழ்கின்றார்
கூனிக் குறுகி நின்று
படி அரிசிக்கு ஏங்குகிறார்
நல்லூரின் நாயகனே
எம் உறவுகளின்
பழைய வாழ்வதனை
பரிவுடன் தந்திடையா

நடராசா சந்தரலிங்கம்
அச்சுவேலி.

## முருகன் திருத்தலம் நல்லூர்

நல்லை நகர்ப்பதியை நாடியே நாள்தோறும்
எல்லையிலாக் காவடிகள் ஏந்திவரும் - நல்லடியார்
காவடிக் கந்தனெனுங் காரணப்பேர் சூட்டினர்
சேவடிக்கே சேருஞ் சிறப்பு

ஆறுபடை வீடுடைய ஆறுமுகன் ஈழத்தில்
வீறுடனே வந்து விளங்குதலம் - தேறுங்கால்
அல்லும் பகலும் அடியார் தொழுகின்ற
நல்லூரா மென்றே நவில்

- அமரர் சி.இராசரத்தினம்
வேலணை.

## கந்தப் பெருமானே, காவல்புரி

சூரபன்மன் தன்னை தலையறுத்து மாமயில்மேல்
வீரவேல் கொண்டு விளையாடும் - பேருடனே
சேவற்கொடி யசையத் திருநல்லூர்ப் பதியினிலே
காட்சிதரும் வேலா துணை

பண்பாடவே சுவைக்கும் பக்திப் பழமெனவே
அன்பா லுரைத்த உமை மகனே - கண்புகையு
முன்னே கருணைபுரி முன்னவனே என்னை
கண்பார்த்துக் காவல் புரி.

கவிமணி
கந்தமுருகேச தாசனார்.

## துள்ளி வரும் வேல் எடு!

தொல்லையுறும் தேவரவர் துன்பங்கள் தீர்க்கவெனத்
தொடர்ந்துன்னை வேண்டி நிற்கச்
சூழ்ந்தபகை அத்தனையும் மாய்ந்துபடு மாறுசெயத்
துள்ளிவரும் வேலெ டுத்தாய்
துடித்துவிழும் அருணகிரி படைத்தவுயிர் காக்கவரும்
துணையாக நீயி ருந்து
தோயவரும் திருப்புகழைப் பாயவரும் அருளோடு
தோன்றிவரு மாறு செய்தாய்!

செ.பரமநாதன்
மண்டைதீவு - 2.

## நன்மை கோடி தருபவனே

நல்லைக் கந்தனே
நன்மை கோடி தரும்
எங்கள் முருகனே
அழகனே கார்த்திகேயனே
மனமுருகி உனை
வேண்டினாலே மங்களம்
வாழ்வில் சேர்ந்திடும்
எம் துயரங்கள் தூர வோடிடும்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## அவன் எமக்கே சொந்தம்

வாசலிலே வேம்பசைந்து வரவேற்கும் காட்சி
நல்லை வள்ளி மணவாளன் கோட்டம் வந்தாலே மாட்சி
பாசமுடன் பற்றி நிற்கும் பவவினையின் ஆட்சி
குருபரன் அடியைப் பணிந்திடவே பறந்தோடும் - மீட்சி
தேசு காணத் தேவியர்கள் இருபேரும் சூழத்
திருமுருகன் திருவருளத் திரு அமைந்தே சேரும்
நேசமுடன் நீலமயில் மீது வரும் கந்தன்
அகம் நினைத்தாலே இனிக்குதம்

'அவன் எமக்கே சொந்தம்!'
தேவி கணேஸ்
இராசாவின் தோட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மங்களகரமான திறப்பு விழா
# இக்ஷா நகைமாடம்

34, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா ஐஸ்கிறீம் நிறுவனத்துக்கு அருகில்)



மங்களகரமான ஆவணித் திங்கள் 4 ஆம் நாள் (20.08.2010) வெள்ளிக்கிழமை சிங்கலக்கினம் சந்திரயோகம் கூடிய காலை சுபவேளையில் எமது புதிய ஸ்தாபனமான அக்ஷா நகைமாடத்தை திறந்துவைக்கவுள்ளோம். இந்நிகழ்வில் எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் எம் அன்புக்குரியவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் பங்குகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(102233)

34, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0777172726, 021 222 4324

அன்புரிமையுடன் அழைக்கும்:
திரு.திருமதி ராம் குடும்பத்தினரும்
அக்ஷா நகைமாடம் பணியாளர்களும்.



# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

20.08.2010




## செல்வி ஜெகநாதன் மதுஷா

லண்டனில் வசிக்கும் ஜெகநாதன் கலாஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வி மதுஷா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20.08.2010) வெள்ளிக்கிழமை லண்டனில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவர் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளின் அருளைப் பெற்று பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.



*வாழ்த்துவோர்:* அம்மா, அப்பா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமன்மார், அத்தைமார், மைத்துனர்கள், மைத்துனிகள், உடன்பிறவாச் சகோதர, சகோதரிகள்.
பெரியப்பா, உதயன் போட்டோ,
தில்லையம்பதி, கோண்டாவில். 0776918106



# உலகப்புகழ் பெற்ற நிறுவனங்களுடன்

HNB
## லீஸிங்
பலதரப்பட்ட சேவைகளின் ஓர் அங்கம்

## இணைந்து வழங்கும்

## மாபெரும் வாகன விற்பனை
யாழ்ப்பாணம் - தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில்

2010 ஆகஸ்ட் மாதம்
21 ஆம் திகதி முதல் - 23 ஆம் திகதி வரை

இங்கு
- வாகனங்களுக்கு விஷேட கழிவு
- HNB இனால் வருமானத்திற்கேற்றவாறு குறைந்த தவணைக்கட்டண முறைகளும் விஷேட சேவைகளும்
- HNB Assurance இனால் வழங்கப்படும் குறைந்த தவணையுடனான பூரண காப்பறுதி வசதி.

இலவசம்! அனைத்து குத்தகை வசதியுடனும் ரூபா 1.2 மில்லியன் இற்கான ஆயுள் காப்புறுதியும் HNB கடன் அட்டையும்...

உங்களுக்கு வழங்க இருக்கின்ற இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள HNB வாடிக்கையாளர் நிலையங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி இலக்கம்

சாவகச்சேரி : 021 3205758
சுன்னாகம் : 021 2240303
யாழ்ப்பாணம் : 021 2222787
மானிப்பாய் : 021 4591591
நெல்லியடி : 021 2264150
பருத்தித்துறை : 021 2264935

HNB



# ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 524
சீட்டிழுப்பு திகதி: 18.08.2010

வெற்றி எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 30 36 52 68

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 18,155,124.80 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 210 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 437 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10862 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6312 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 158077 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25349 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,114,200.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அலுவ : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 18,442,013.60



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2148 திகதி 18-08-2010

ஆங்கில எழுத்திற்கும் L

வெற்றி எண்கள்: 20 24 28 56
போனஸ் இல: 68

ஜக்பொட் பரிசு ரூ. 10,500,400/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 191331 | 20/- | 3,826,620/- |
| 2 இல | 13643 | 100/- | 1,364,300/- |
| 3 இல | 291 | 1,000/- | 291,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7588 | 40/- | 303,520/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 549 | 1,000/- | 549,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 10,500,400/- | 10,500,400/- |
| 1 இல + போனஸ் இல | 9113 | 100/- | 911,300/- |
| 2 இல + போனஸ் இல | 438 | 500/- | 219,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 358 | 200/- | 71,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 18,558,240/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 223356 | | 19,158,240/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

அனுராதபுரம் 202201908-2-08
கண்டி 202199595-5-03
அம்பாறை 202201131-5-21
மட்டக்களப்பு 202216974-0-43
பொலன்னறுவை 202202684-5-09
குருநாகல் 202196963-8-46
யாழ்ப்பாணம் 202216900-2-00
கொழும்பு 202212862-1-15
இரத்தினபுரி 202210058-4-22
கம்பஹா 202215498-4-10

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 10,000,000/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஒகஸ்ட் 21 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2335446/7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் காணிகளில் குடியமர்த்துமாறு பொன்னகர் கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னகர் கிராம மக்கள் தம்மை தமது சொந்தக் காணிகளில் குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரணைமடுச் சந்திக்கு அண்மையில் உள்ள இக்கிராமத்தில் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தனர். தாம் குடியிருந்த காணிகளில் வீடுகள் அன்பளிப்பாக கட்டி வழங்கப்பட்டிருந்தபோதிலும் அக் காணிகளை புனரமைப்பதிலும், கிணறு, மலசல கூடம் என்பவற்றை அமைத்தலிலும் பெருமளவு பணத்தினையும் உழைப்பினையும் செலவு செய்திருந்தனர். பின்னர் இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து உறவுகளை இழந்து, அங்கவீனமாகி நலன்புரி முகாம்களில் குடியிருந்து ஆண்டுகள் பல கடந்த பின்னர் எமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றவென அழைத்து வந்து எம்மை வைத்து வேடிக்கை பார்க்கின்றார்கள் என இக்கிராம மக்கள் மனம் குமுறுகின்றனர்.

இது தொடர்பாக பலருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் கடந்த 15 ஆம் திகதி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தம்மை வந்து பார்வையிட்டதாகவும் தமது குறைகளை கேட்டறிந்ததாகவும் விரைவில் வடமாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டு சாதகமான பதிலைப் பெற்றுத் தருவதாகவும் கூறிச் சென்றதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கரணிகளுக்குள் அம்மக்கள் செல்ல விடாது தடுப்பதற்காக கவலாளிகளையும் நியமித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதனால் இம் மக்கள் தமது காணிகளையும், வீடுகளையும் தூரத்தில் இருந்து பார்த்தவாறு தறப்பாள்களிலும் மர நிழல்களிலும் குடியிருக்கின்றனர். இன்னும் பலர் இடைத்தங்கல் முகாம்களில் உள்ளனர்.

எனவே இது விடயமாக சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனம் எடுத்து தம்மை தமது நிலங்களில் குடியமர்த்த ஆவன செய்ய வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

இது போன்று கிளிநொச்சி மாவட்டத்தின் சாந்தபுரம், பரவிப்பாஞ்சான், கிருஷ்ணன் கோயிலடி உட்பட பல இடங்களில் மக்கள் மீள்குடியேற்றப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-405)

## சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கும், கடந்த பரீட்சைகளில் சித்தியடையாதவர்களுக்குமான எழுத்துப்பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் செயலகத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடன் பிற்பகல் 1.30 மணிக்கு முன்னதாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த)

# மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அபிவிருத்திப் பணிகள் உடன் ஆரம்பிக்கப்படும்

### அரச அதிபர் நிக்கலாஸ்பிள்ளை தெரிவிப்பு

மன்னார்,ஓக.20

மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் மாந்தை கமநல சேவை நிலையத்தை மீண்டும் மாந்தையில் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. நிக்கலாஸ்பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

மாந்தை பகுதிகளிலுள்ள மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் மாந்தைக்குச் சொந்தமான மாந்தை கமநல நிலையத்தை இடம் மாற்றி அடம்பனில் அமைப்பது தொடர்பாக அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து கடந்த திங்கட்கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. நிக்கலாஸ் பிள்ளையைச் சந்தித்து உரையாடினர்.




குறித்த கிராமத்தில் எவ்வித வசதிகளும் செய்து தரப்படவில்லை, குடியிருப்பு காணிகள் சரியான முறையில் செப்பனிடப்படவில்லை என்றும் கடந்த பல வருடங்களாக மாந்தை கமநலசேவை நிலையம் யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் மீண்டும் அக்கட்டடம் அடம்பன் பகுதிகளில் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருவதாகவும் இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுதது வந்தனர்.

இந்த நிலையில் இரு தினங்களுக்குள் இவ்விடயங்கள் குறித்து ஆராய்ந்து உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் எடுப்பதாக அரசாங்க அதிபர். கூறினார். (த)

# உயர்தர மாணவர்களுக்கான தகவல்தொழில்நுட்பப் பரீட்சை

கிளிநொச்சி,ஓக.20

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தரம் 12 ஐ பூர்த்திசெய்த மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி ஊடாக இந்தப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் அனுமதி அட்டைகள் கிடைத்துள்ளன. விண்ணப்பித்தவர்கள் அலுவலகத்தில் வந்து அனுமதி அட்டைகளைப் பெறுமாறு பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் அறிவித்துள்ளார். (த-405)

# மன்னார் மூர் வீதியில் தையல் பயிற்சி நிலையம்

மன்னார், ஓக. 20

மன்னார் மூர் வீதி முத்தமிழ் சனசமூக நிலைய பங்களிப்பில் மன்னார் 'லீட்ஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யுவதிகளுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்று மூர் வீதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நிலையத்தில் சுமார் 22 யுவதிகள் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

ஆரம்ப நிகழ்வில் மன்னார் 'லீட்ஸ்' நிறுவனத்தின் இணைப்பாளர் பிரதாபன் கலந்து கொண்டு பயிற்சியை ஆரம்பித்துவைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், 6 மாத பயிற்சி நிறைவுற்றதும் பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் கூறினார். (த-80)

# மன்னாரில் டெங்கு ஒழிப்பில் சிறுவர்களும் தீவிர பங்களிப்பு

மன்னார், ஓக. 20

மன்னாரில் டெங்கு நோய் பரவல் சிறுவர்களிடையே அதிகம் காணப்படுவதாலும் இதனால் சிறுவர்களுக்கு விழிப்புணர்வை மேம்படுத்தும் முகமாகவும் மன்னார் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு, மன்னார் சுகாதாரப் பணிமனையுடன் இணைந்து சிறுவர் டெங்கு ஒழிப்பு வீதி நாடகங்களை நடத்தி வருகின்றது.

கடந்த 17 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையில் மன்னாரின் பல பகுதிகளில் வீதி நாடகங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இன்று 20ஆம் திகதி பெரிய கமம் பகுதியிலும், 21 ஆம் திகதி தாழ்வுப்பாட்டிலும், 22 ஆம் திகதி சின்னக்கரிசலிலும், 23 ஆம் திகதி பேசாலையிலும் வீதி நாடகங்கள் நடைபெறவுள்ளன. (த-80)

# அச்சுவேலி வைத்தியசாலையில் புதிய கட்டடப் பணிகள் துரிதம்

அச்சுவேலி,ஓக.20

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் நிர்வாக அலகு மாடிக் கட்டடத்தின் இரண்டு பக்கங்களுக்குமான இணைப்புக் கட்டடமும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் 10 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச வைத்தியசாலையில் மாடிக் கட்டடம் கடந்த வருடம் முற்பகுதியில் திறந்துவைக்கப்பட்டது. மாடிக் கட்டடத்தில் இரண்டு பக்கங்களையும் ஒன்று படுத்தும் இணைப்புக் கட்டடமும் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையமும் இரண்டாம் கட்டமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலையில் இதுவரை காலமும் பொருத்தமான வாகனத் தரிப்பிடம் இருக்கவில்லை எனினும் தற்பொழுது துவிச்சக்கர வண்டித் தரிப்பிடமும் நிர்மாணிக்கப்படுவதன் மூலம் நீண்டகால குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் இந்த வருட இறுதிக்கு முன்னர் நிறைவு செய்யக் கூடிய வகையில் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-11)

# இந்த வருடம் அறுவடையில் அரைவாசிக்கும் குறைவான நெல்லே கொள்வனவு செய்யப்படும்

கொழும்பு,ஓக.20

நெல் சந்தைப்படுத்தும் சபை இந்த வருடத்திற்கான நெல் அறுவடையில் அரைவாசிக்கும் குறைவான நெல்லையே கொள்வனவு செய்யவிருப்பதாக எதிர்பார்க் கப்படுகின்றது.

சுமார் 6 லட்சம் தொன் நெல் அறுவடையின் மூலம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் 2 லட்சத்து 50 ஆயிரம் தொன் நெல்லையே நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, கொள்வனவு செய்யப்படும் நெல்லைச் சேமித்து வைப்பதற்கு வசதியாக தனியார் கட்டடங்களைத் தாம் வாடகைக்கு அமர்த்தி வருவதாக சபையின் அதிகாரியொருவர் கூறினார்.

விவசாயிகள் தற்போது நவீன இயந்திரங்களின் மூலம் நெல் அறுவடையை மேற்கொண்டுவருகின்றனர்.

ஆனால் அறுவடை செய்த நெல்லை வெயிலில் உலர்த்தாமல் பைகளில் இட்டு நேரடியாக கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுவருவதால் ஈரப்பதம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதனால் தமது நெல்லுக்குரிய நல்ல விலையைப் பெறுவதற்கு அவர்கள் தவறிவிடுகிறார்கள்.

மேலும்நெல் கொள்முதலின் போது தனியாரின் ஏகபோகத்துக்கு நெல் சந்தைப்படுத்தும் சபை ஒருபோதும் அனுமதி வழங்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

## தெல்லிப்பழையில் இன்று வேட்டைத் திருவிழா

வலி.வடக்கு,ஓக.20

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் 9ஆம் திருவிழாவாகிய இன்று பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து 5 மணிக்கு மாலைத் திருவிழாவும் நடைபெறும். (த-86)

# செய்தித் துளிகள்

## 'தேவி பாகவதம்' சொற்பொழிவு

வடமராட்சி,ஓக.20

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் ஆன்மீக நிழ்வு வரிசையில் இன்று 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'தேவிபாகவதம்' என்னும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். சந்தியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (த-236)

## நாவற்குழி களஞ்சியத்துக்கு புதிய கட்டடம்

நாவற்குழி,ஓக.20

நாவற்குழியில் அமைந்துள்ள அரச உணவுக் களஞ்சியத்தின் கிழக்குப் புறமாக புதிய கட்டடத் தொகுதியொன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இது தற்பொழுது பாவனைக்கு விடப்பட்டுள்ளது. அரச உணவுக் களஞ்சியத்தின் உள்ளக வசதிகள் யாவும் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து பொருள்களை ஏற்றிவரும் வாகனங்கள் தற்பொழுது நேரடியாகவே யாழ்ப்பாணம் செல்ல முடிவதால் இக்களஞ்சியத்தில் ஏற்றி இறக்கும் பணிகளில் பெருமளவு தொழிலாளர்கள் ஈடுபடவேண்டிய நிலை இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. (த-121)

## இலகுவேலைத் திட்டம் தொடர்பான கூட்டம்

நல்லூர்,ஓக.20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உணவுக்கான இலகு வேலைத்திட்டம் தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் மேற்படி வேலைத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் இதற்குச் சமுகமளித்து தமக்குரிய நிவாரணத்தைப் பெறமுடியும் என நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (த-111)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.20

கொக்குவில் மேற்கு காந்திஜீ சனசமூக நிலையத்தின் 35 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளதால் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் வீரர்கள் உடனடியாகத் தங்கள் பெயர், விவரங்களை நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

## கொடிகாமத்தில் குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தம்

தென்மராட்சி,ஓக.20

கொடிகாமம் நகர்ப்பகுதிக்கு வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் கடந்த சில நாள்களாக நிறுத்தப்பட்டது.

இதனால் பொதுமக்கள், வர்த்தகர்கள், வியாபாரிகள் போன்றோரும் குடிதண்ணீர் தேவைக்கு சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற ஐவர் மாரவிலவில் கடற்படையால் கைது

கொழும்பு, ஓக. 20

ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்லத் தயாராகவிருந்த ஐவரை கடற்படையினர் மாரவிலப் பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாரவில சுற்றுலா விடுதியில் வைத்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல விருந்த இந்த ஐந்து பேரையும் தாம் கைது செய்தனர் என கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுசெய்யப்பட்டவர்கள் கம்பஹா, சிலாபம் மற்றும் கனேமுல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா புறப்படத் தயாராக இருந்த ஐவரும் கடத்தல்காரர்களுக்குத் தலா ஆறு லட்சம் ரூபா செலுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்தும் நடவடிக்கைகள் மற்றும் இதனுடன் தொடர்புடையவர்கள் பற்றி கடற்படையினர் நாடளாவிய ரீதியில் தகவல்களைத் திரட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)


## மெய்வன்மைச் செயலமர்வு

கோப்பாய், ஒக.20

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6-11 வகுப்புக்களில் சுகாதாரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மெய்வன்மை நிகழ்வுகள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை நல்லூர் ஸ்தான சி.சி.ரி.எம்.எஸ்.பாடசாலையில் நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (த-72)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 17.07.1948

மறைவு: 21.07.2010

## அமரர் செல்லர் முத்துலிங்கம்

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

புண்ணிய சூரியன்
மறைந்தது
எண்ணிய கனவுகள்
எரிந்தது
பனிமலர் வாட்டமும்- மங்கிய
பாசத் தோட்டமும்
இரவியின் இனிதொளி
மப்புமாய் மாறியது
கங்கையில் முத்துவின்
சங்கமம் கலி தரும் தீவிரச்
சங்கடம்
எம் விழி விடும்
கண்ணீர் விம்மலே!

அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(98240)

கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

தாய், சகோதரர் மற்றும் மருமக்கள்.

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சிவசாமி சிறிதரன்

(சாரதி, டெனிஸ் மிதிவெடி அகற்றும் நிறுவனம், முன்னாள் தலைவர், புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம்)

பிறப்பு: 31.05.1976
பறிப்பு: 20.08.2007

வஞ்சமனத்தர் உன் வாழ்வதனை முடித்து
ஆண்டுகள் மூன்று அதற்குள் ஓடியதோ

நித்தம் உன் முகம்தான் நினைவில் வருகுதையா
அகலுமா உன் நினைவு மறையுமா உன் பிரிவு

நெஞ்சம் கனக்குதையா நிம்மதியும் போனதய்யா
என்றும் உன் நினைவில் மீளாமல் துடிக்கும்

உறவுகள்

(102229)

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை.

---


## விற்பனைக்கு

குடத்தனை 10 ஆம் கட்டையில் 163 பரப்பு வயல் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

0777-561341


---


# த சாரிகா லேனர்ஸ்

சாரதி பயிற்சிப் பாடசாலையின் கிளிநொச்சி கிளை திறப்பு விழாவினை முன்னிட்டு நடத்தும் மாபெரும் துவிச்சக்கர வண்டிப் போட்டி

காலம்:— 26.08.2010 காலை 6 மணிக்கு
இடம்:— யாழ். காரியாலயம்

துவிச்சக்கர வண்டிப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் உடனடியாகக் காரியாலயத்தில் பதிவினை மேற்கொள்ளவும்.

57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0215100200/0213207740

குறிப்பு:-
★ இருபாலாரும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
★ பரிசு தொடர்பான விவரங்களுக்கு காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்.


---

# துயர் பகிர்வு



## விசுவநாதர் முருகேசு

S.V.M

எமது கூட்டுறவு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவரும் பிரபல வர்த்தகப் பெருமகனும் புகழ்பூத்த நாயகனுமான S.V.M நாமப் பெருமகனே. யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களைத் தேவைப்படும்போது கடன் அடிப்படையில் வழங்கிக் கூட்டுறவு வளர்ச்சிக்காகப் பங்களிப்புச்செய்த திருமகன் இன்று எம்மை விட்டுப் பிரிந்ததனால் வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

வேலணை ப.நோ.கூ.சங்கம்,
வேலணை. (சி/570042)

---

# கண்ணீர்க் காணிக்கை....

## அமரர் எஸ்.வி.முருகேசு

(தொழிலதிபர்)



உன்னத தொழில் அதிபனாய்
உத்தம நல் அறிஞனாய்
வர்த்தகத் தொழிலில் வித்தகனாய்
வண்ணமுற வாழ்ந்த செம்மல்
சத்திரம் ஞானவைரவரின் சந்நிதியில்
ஆரம்பகாலம் தனில் ஆன்மீகத் தொண்டனாய்
ஏற்றமிகு வாழ்வு தனில் நாம் போற்றும் போசகராய்
வாழ்வாங்கு வாழ்ந்து தொல்லையிலும் பிறவி நீங்கி
வானுறையும் தெய்வத்துள் சங்கமித்த
அண்ணலுக்கு எம் கண்ணீர்க் காணிக்கைகள் சமர்ப்பணம்.

சத்திரம் ஞானவைரவர் தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.

(102241)

---

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வரத்தினம் தனலட்சுமி



வேலணையைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் மற்றும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் தனலட்சுமி 17.08.2010 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா (வேலணை) - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா (புளியங்கூடல்) - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சின்னம்மா முத்துலிங்கம், மகேஸ்வரி, இராசாத்தி, புவனம், சோதி, காலஞ்சென்ற கேதீஸ் மற்றும் பாலன், தவம், இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதந்திரகரன் (கனடா), விவேகானந்தன் (ஆனந்தன் - திருநெல்வேலி), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), ஞானகரன் (ஜேர்மனி), சிறிகரன் (லண்டன்), நாகேஸ்வரி (ரதி - கொழும்பு), கேதீஸ்வரி (கனடா), தயானந்தன் (லண்டன்), தங்கேஸ்வரி (நோர்வே), சுதாமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோ, சாந்தினி, திருச்செல்வம், சவி, பிறேமா, றஞ்சன், சுதா, சியாமினி, ஜெயராஜா, பவன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.08.2010 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தலங்காவல் பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.*
*தொ.பே. 0774707708 (இலங்கை),*
*0114162879552 (கனடா)*

தகவல்:
செ.விவேகானந்தன்
(மகன்).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

* பின்வரும் விவரத்தை வாசித்து 33ஆம், 34ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

| நிறை | பொருள் | விலை |
|---|---|---|
| 50 கிராம் | சீனி | ரூ. 6.00 |
| 150 கிராம் | தேயிலை | ரூ. 15.00 |
| 25 கிராம் | கோப்பி | ரூ. 8.00 |


33. 1.5 kg சீனியும், 750g தேயிலையும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

..........................................................................................

34. 2.5kg தேயிலையும், 500g கோப்பியும் வாங்க எவ்வளவு பணம் தேவை?

......................


35. இவ்வுருவின் சுற்றளவு யாது?




........................

36. ஒரு பல்தேர்வு வினாப்பத்திரத்தில் 50 வினாக்கள் காணப்பட்டன. அதில் ஒரு சரிக்கு இரண்டு புள்ளிகள் வழங்கப்படும். ஒரு பிழைக்கு ஒரு புள்ளி கழிக்கப்படும். குமரன் இப்பரீட்சையில் 70 புள்ளிகள் பெற்றான். அவன் எத்தனை வினாக்களுக்குச் சரியாக விடை எழுதியிருப்பான்? ......................

37. இங்கு ஐந்து அடுக்குகளில் கட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன. 15 அடுக்குகளில் இவ்வாறு கட்டைகள் அடுக்கப்பட்டால் மொத்தமாக எத்தனை கட்டைகள் காணப்படும்?



......................

38. நவமோகன் 48 km தூரத்தைக் கடக்க வேண்டியிருந்தது. அவன் அத்தூரத்தில் 2/6 பங்கு தூரத்தை நடந்தும் 3/6 பங்கு தூரத்தை புகைவண்டியிலும், மீதித் தூரத்தைப் பேருந்திலும் கடந்து சென்றான். அவன் பேருந்தில் சென்ற தூரம் யாது?

....................

39. ஒரு சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 12 லீற்றர் வர்ணம் தேவை. வர்ணம் 250 ml பேணிகளிலேயே உள்ளன. ஒரு பேணி வர்ணத்தின் விலை ரூபா 250.00 ஆயின், சுவருக்கு பூசுவதற்குத் தேவையான வர்ணம் வாங்க எவ்வளவு பணம் தேவை?

....................

40. புகைவண்டி மு.ப. 11.45 இற்குப் புறப்பட இருந்தது. அது 45 நிமிடங்கள் தாமதித்தே தனது பயணத்தை ஆரம்பித்தது. அது 6 மணித்தியாலம் 15 நிமிடங்கள் பயணம் செய்து பயணத்தை நிறுத்திக்கொண்டது. புகைவண்டி பயணத்தை நிறுத்திய நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

....................

## வினாத்தாள் II — 1மணி 15 நிமிடங்கள்

சுட்டெண் ........ புள்ளிகள் ........

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* பின்வரும் உரைப்பகுதியை நன்கு வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"சின்னஞ்சிறு தோட்டத்தில்" காணப்படும் செடியில் அரும்பாக இருந்து மொட்டாக வந்து நேற்றுக்காலை கதிரவனின் வரவு கண்டு கமகம எனும் நறுமணத்துடன் எனது கமலமுகம் மலர்ந்தது. எனது சுகந்தம், கவர்ச்சி, அழகு எல்லாம் எல்லோர் மனதையும் கவர்ந்தது. தேனீக்கள் என்னிடம் தேனைப் பெறுவதற்காக சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரம் செய்தன. உச்சிப் பொழுதானதும் அந்தக் கதிரவனின் பொற்கதிர்கள் என்முகத்தை வாட்டிவதைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வளவு குறுகிய நேரத்தில் என்னழகு அவலட்சணம் அடையுமென நான் எதிர்பார்க்கவில்லை. நேற்று மாலை தாய்ச்செடியில் இருந்து உதிர்ந்துவிட்டேன்.

1. மேலே உள்ள பந்தியில் கூறப்படும் சுயசரிதை எதைப்பற்றியது?
..........................................................................................
2. பந்தியில் உள்ள அடுக்குமொழிச் சொல் ஒன்றை எழுதுக.
..........................................................................................
3. பந்தியில் உள்ள இணைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.
..........................................................................................
4. பந்தியில் உள்ள இரட்டைக்கிளவியை எழுதுக.
..........................................................................................
5. என்னழகு என்பதை பிரித்து எழுதுக.
..........................................................................................
6. பந்தியில் உள்ள அடுக்கிடுக்கு மொழியை எழுதுக.
..........................................................................................
7. தேனீக்கள் அதனிடம் எதனைப் பெறுவதற்காக சுற்றிச்சுற்றி வந்தன எனப் பந்தியில் கூறப்பட்டுள்ளது?
..........................................................................................
8. உச்சிப்பொழுது என்பதற்கு வழங்கப்படும் மற்றுமொரு சொல் யாது?
..........................................................................................
9. விட்டேன் என்பதன் எதிர்காலச் சொல்லை எழுதுக.
..........................................................................................
10. சின்னஞ்சிறு என்பதன் எதிர்ச்சொல் எழுதுக.
..........................................................................................
11. பின்வரும் சிங்களச் சொல்லினது கருத்தை தமிழில் எழுதுக.
..........................................................................................
    1) ஒயாகே நம மொக்கத்த?
    ......................................................................................
    2) மகே நம பாலன்.
    ......................................................................................
12. பின்வரும் ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.
    01. Yellow Line
    ......................................................................................
    02. I want to play
    ......................................................................................
13. தமிழ்ச் சொல்லுக்கு பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.
    01. வெள்ளிக்கிழமை
    ......................................................................................
    02. வாழைப்பழம்
    ......................................................................................
14. பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.
    01. ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது -
    ......................................................................................
    02. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல
    ......................................................................................
15. பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.
    01. கம்பி நீட்டுதல்
    ...................................................................................... -
    02. ஏட்டிக்குப் போட்டி -
    ......................................................................................
16. பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.
    01. யானை வாயில் அகப்பட்ட கரும்புபோல
    ......................................................................................
17. பின்வரும் வாக்கியத்திற்கு நிறுத்தற் குறியீடுகளை இடுக.
ஆதிகாலத்தில் தரை மார்க்கமாகச் செல்வதற்கு மாட்டுவண்டி குதிரை வண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்
18. மாணவர் மன்றக் கூட்டம் அடுத்த மாதம் முதலாவது வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

- மன்றப் பொறுப்பாசிரியர்-

* மேலே தரப்பட்டது அறிவித்தலா அல்லது அறிவுறுத்தலா எனப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
(..........................................................................................)

19. மீனினம் ஓடிப்பறக்குதம்மா! ஊடே
வெள்ளி ஓடமொன்றும் செல்லுதம்மா!
வானுங் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சி யிள்ளம் முழுகுதம்மா
    1) மேலே தரப்பட்ட பாடலில் வெள்ளி ஓடமெனக் குறிப்பிடுவது எது என எழுதுக? (........................)
    2) நீங்கள் ஒரு விண்கலத்துக்கு போய் கிரகத்தில் இறங்கினால் அமிழ்ந்து போவீர்கள். காரணம் இக் கிரகம் திடப்பொருட்களால் ஆனது அல்ல. முழுக்க முழுக்க வாயுக்கள்தான் இவை இக் கிரகத்திற்கு ஓர் அழகான வண்ணக் கலவை தோற்றத்தைத் தருகின்றன. இக் கிரகம் சூரியனில் இருந்து ஐந்தாவதாகவும் உள்ளது. மேலே பந்தியில் தரப்பட்ட கிரகம் எது என புள்ளிக் கோட்டில் எழுதுக.
    (.....................................)
20. சரியான விடையை தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
    1) சிறுவர் கடற்கரையில் .................... பொறுக்கி விளையாடினார் (ஊரி / ஊறி)
    2) இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ................ காரியம் ஆகும் (அரிய / அறிய)
21. 01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து அதன் எழுத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.
    1) கிராமப்புறங்களில் தேநீர் தயாரிக்கும்போது தேநீருடன் சேர்க்கும் மூலிகை வாசனைப் பொருள்
    அ. இஞ்சி ஆ. நன்னாரி
    இ. துளசி ஈ. சிறு நாரத்தை
    (............................)
    2) தமிழர்களின் பாரம்பரியத்தில் அம்மை நோய் ஏற்படும்போது உடலில் அரைத்துப் பூசப்படுவது
    அ. துளசி ஆ. குப்பைமேனி
    இ. வேம்பு ஈ. வசம்பு
    (.....................................)
    3) இலங்கையில் றம்புட்டானிற்கு பிரசித்திபெற்ற இடம் எது?
    அ. மல்வானை ஆ. நுவரெலியா
    இ.கம்பளை ஈ. காலி
    4) மின்குமிழை ஒளிரவிடுவதன் மூலம் எவற்றின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்?
    அ. கரப்பான் பூச்சி ஆ. நுளம்பு
    இ.பல்லி (............................)
    5) மலைநாட்டுப்பகுதியில் வாழும் மக்கள் கால்களில் அட்டைகள் கடிக்காதிருக்க உடலில் பூசிக்கொள்ளும் பதார்த்தம் எது?
    அ. சவர்க்காரக்கரைசல் ஆ. சுண்ணாம்புக்கரைசல்
    இ. உப்புக்கரைசல் (....................)

* 06 - 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத்தெரிவுசெய்து கோடிடுக.

06. கியூலெக்ஸ் நுளம்பினால் யானைக்கால் நோய் ஏற்படுகிறது இந்த நுளம்பு ஒருவரைத் தாக்கும் நேரம்
    1) நண்பகல் 12 மணி தொடக்கம் 3 மணி வரை
    2) நள்ளிரவு 12 மணி தொடக்கம் 1 மணி வரை
    3) இரவு 6 மணி தொடக்கம் 9 மணி வரை
07. கலையுரு காட்டி ஒன்றை உருவாக்க குறைந்தது எத்தனை தளவாடித் துண்டுகள் தேவை
    1) 5 2) 3 3) 4
08. இலங்கை மாணவர்கள் கட்டாயக் கல்வியைக் கற்கும் வயதெல்லை
    1) 5-14 2) 5-10 3) 10-15
09. பூச்சிகள் தாக்கத்திலிருந்து பாதுகாக்கவும், நீண்ட காலம் பயன்படுத்தவும் தளபாடம் செய்யமுன் சேற்றில் புதைத்து வைக்கப்படும் மரம் எது?
    1) மரமுந்திரிகை 2) முதிரை 3) தேக்கு
10. இரத்தினபுரி அமைந்துள்ள மாகாணம் எது?
    1) ஊவா மாகாணம்
    2) சப்ரகமுவ மாகாணம்
    3) தென் மாகாணம்
11. கொள்ளை நோய் (பிளேக்) பரப்பப்படுவது
    1) எலியின் உடலில் வாழும் தெள்ளு காரணமாக.
    2) நுளம்பு மனிதனில் இரத்தத்தைக்குடிப்பதால்.
    3) பன்றியின் உமிழ் நீரில் உள்ள கிருமிகள் உடலினுள் உட்செல்லுவதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. எமது நாட்டில் அநேகமான தாவரங்கள் பூக்கும் மாதம் எது?
1) கார்த்திகை. 2) சித்திரை. 3) மார்கழி.

13. பின்வருவனவற்றுள் தானிய வகையைச் சேர்ந்தது எது
1) பூசணி. 2) வெண்டி. 3) குரக்கன்.

14. அதிகளவு புரதத்தைக் கொண்ட ஏழைகளின் இறைச்சி என அழைக்கப்படுவது எது?
1) காளான் 2) சோயா 3) நெத்தலி

15. அதிகளவு மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மகாணம்
3) வடமத்திய மாகாணம்

16. அதிகளவு குளங்களைக் கொண்ட இடம் எது
1) அநுராதபுரம் 2) குருநாகல்
3) மட்டக்களப்பு

17. தற்போது தயாரிக்கப்படும் மூலிகைச் சவர்க்கார வகைகளில் அடங்கியிருக்கும் மூலிகைத்தாவரம் எது?
1) தூதுவளை 2) கற்றாளை
3) கீழ்காய் நெல்லி

18. மஞ்சள் நிறமுடைய பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை தினமும் உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் தவிர்க்கக் கூடிய குறைபாட்டு நோய் எது?
1) கண்டமாலை 2) மாலைக்கண்
3) குருதிச்சோகை

19. இலத்திரனியல் ஊடகம் அல்லாதது எது?
1) பத்திரிகை 2) இணையம் 3) தொலைக்காட்சி

20. மீன் பாடும் நகரம் - காற்று
மிதந்து வரும் நகரம்
தேன் ஓடும் நகரம் - வளர்
தென்னை மர நகரம்
கலை வாழும் நகரம் - தமிழக்
கவி பாடும் நகரம்
அலை கடல் நகரம் - இயற்கை
அழகு மிகு நகரம்.

* மேலே உள்ள பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள நகரம் எது?
1) யாழ்ப்பாணம் 2) மட்டக்களப்பு
3) திருகோணமலை

22. பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.
1. டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு காய்ச்சலுடன் தோலில் நிறப்புள்ளிகள் தோன்றும்.
2. இடி முழங்கும்போது முதலில் வெளிச்சத்தைக் கண்டு சிறிது நேரத்தின் பின்னர் இடி முழங்கும் சத்தம் கேட்கும். இதற்கான காரணம், ஒலியை விட ஒளி ................ பயணம் செய்வதாகும்.
3. ஒளிர்ந்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்தியொன்றினை ஜேம் போத்தல் ஒன்றினால் மூடியபோது சிறிது நேரத்தின் பின் அணைந்தது. அதற்கான காரணம், மெழுகுவர்த்தி ஒளிருவதற்கு அவசியமான ........................ இல்லாமையே காரணமாகும்.
4. சில நாட்களாக பலகையொன்றிற்கு கீழ் அகப்பட்டிருந்த புற்கள் மஞ்சள் நிறமாக மாறியிருந்தன. இதற்கான காரணம், புற்களுக்கு அவசியமான ............................. கிடைக்காமையாகும்.

23. பின்வரும் கணிதச் செய்கைக்குரிய விடையை மட்டும் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1. நீர்கொழும்பிலிருந்து புத்தளத்திற்கு சென்று மீண்டும் நீர்கொழும்புக்கு வருவதற்கு 58km 900m தூரம் பயணம் செய்ய வேண்டும். அதன்படி நீர்கொழும்பிலிருந்து புத்தளத்திற்கு உள்ள தூரம் எவ்வளவு?
..............................................................
2. சதுரம், வட்டம், செவ்வகம், முக்கோணம் ஆகிய வடிவங்களில் மிகக்கூடிய சமச்சீர் கோடுகளை வரையக்கூடிய வடிவம் எது?
..............................................................
3. கூட்டுக 1/3 + 2/6 =
..............................................................
4. மு.ப 7.45 மணியில் இருந்து பி.ப 9.25 மணி வரையுள்ள காலம் எவ்வளவு?
..............................................................
5. 18 ஐ உரோம இலக்கத்தில் எழுதுக.
..............................................................
6. ஒரு கம்பியின் நீளம் உயரத்தின் 2/6 பங்கை வெட்டி நீக்கிய பின் கம்பியின் உயரம் 32cm இருந்தது முன்னர் இருந்த கம்பியின் உயரம் யாது?
..............................................................

24. ஓர் உணவகத்தில் வாரத்தில் ஐந்து நாட்களில் விற்பனை செய்யப்பட்ட பாண்களின் எண்ணிக்கை கீழே தரப்படுகின்றது.

| நாட்கள் | காலை | மாலை |
|---|---|---|
| திங்கள் | 19 | 22 |
| செவ்வாய் | 16 | 14 |
| புதன் | 23 | 19 |
| வியாழன் | 22 | 25 |
| வெள்ளி | 23 | 21 |


* மேலே உள்ள அட்டவணையை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.
1. அவ்வாரத்தில் குறைந்தளவு பாண் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?
..............................................................
2. அவ்வாரத்தில் அதிகளவு பாண் விற்பனை செய்யப்பட்ட நாள் எது?
..............................................................
3. அவ்வாரத்தில் அதிகளவு பாண் விற்பனை செய்யப்பட்டது காலையிலா? மாலையிலா?
..............................................................
4. அவ்வாரத்தில் காலையிலும், மாலையிலும் விற்பனை செய்யப்பட்ட பாண்களின் எண்ணிக்கை யாது?
..............................................................
5. அவ்வாரத்தில் காலையில் கூடுதலாக விற்கப்பட்ட பாணுக்கும் மாலையிலும் குறைவாக விற்கப்பட்ட பாணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
..............................................................
6. விமலை விட ரூபா 40 கூடுதலாக கமலுக்கு கடைக்கும் வண்ணம் 300 ரூபாவைப் பிரித்துக்கொண்டால் கமல் பெறும் பணம் எவ்வளவு?
..............................................................
7. 1kg மாவின் விலை ரூ 80 எனின், 3kg 750g மாவின் விலை யாது?
..............................................................
8. பத்தாயிரத்து எட்டுடன் மூவாயிரத்து ஒன்பதைக் கூட்டினால் வரும் விடையை இலக்கத்தில் எழுதுக.
..............................................................

25. பின்வரும் விவரத்தை வாசித்து விடை தருக.

| | |
|---|---|
| 1 கிலோகிராம் சீனியும் 500 கிராம் தேயிலையும் | ரூ 175 |
| 1 கிலோகிராம் சீனியும் 400 கிராம் பால்மாவும் | ரூ 155 |
| 1 கிலோகிராம் சீனி | ரூ 35 |
| 500 கிராம் தேயிலையும் 1 கிலோ கிராம் விசுக்கோத்தும் | ரூ 220 |

1. 2kg சீனியையும் 1kg தேயிலையும் வாங்க எவ்வளவு பணம் தேவை?
..............................................................
2. 500g விசுக்கோத்தும் 400g பால்மாவினதும் விலை யாது?
..............................................................

26. மீன் இறைச்சி முட்டை




சிற்றுண்டிச்சாலை ஒன்றில் மீன், முட்டை, இறைச்சி ஆகிய உணவுகள் உண்ட மாணவர்கள் பற்றிய விவரம் மேலே வெண்ணுருவில் தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.
1. முட்டை மட்டும் உட்கொண்டவர்கள் எத்தனை பேர்?
..............................................................
2. மீனையும், முட்டையையும் உட்கொண்டவர்கள் எத்தனை பேர்?
..............................................................
3. இறைச்சியை மட்டும் உட்கொண்டவர்கள் எத்தனை பேர்?
..............................................................

27. பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.
(ஆடாதோடை, குப்பைமேனி, இருவேரி, ஆனைத்தகரை)

..............................................................

28 மாணவனொருவன் எழுத ஆரம்பித்த கட்டுரையின் முதற்பகுதி கீழே தரப்பட்டு உள்ளது. அவன் நிறுத்திய இடத்திலிருந்து ஆறு ஆக்கபூர்வமான வாக்கியங்களை எழுதி மீதிப்பகுதியை பூரணப்படுத்துக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு செற்களைக் கொண்டதாக இருப்பதுடன் அவ்வாக்கியங்களின் எழுவாய், பயனிலைகள் திருத்தமாக அமைந்து இருத்தல் வேண்டும்.

அம்மா என்னுடன் நகரத்திற்குச் சென்று காய்கறி வகைகள், ஏனைய பொருட்களை வாங்குவதற்காகவும். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் நகரம் மக்களால் நிரம்பி வழிந்தது. சன நெரிசலில் ஒரு தடவை என்னால் அம்மாவை கண்டு பிடிக்க முடியாமல் போனது. பார்த்த இடமெல்லாம் அறிமுகமில்லாத முகங்ளே காணக்கிடைத்தன. இரண்டு மணித்தியாலங்களாக எல்லா இடங்களிலும் தேடியும் அம்மாவைக் கண்டுபிடிக்க முடியாமல் போனது. (விடை எழுதுவதற்குப் (பிறிதொரு தாளினை உபயோகிக்கவும்)

## விடை விளக்கக்குறிப்புக்கள் தொடர் 10 இற்கானது.

### வினாத்தாள் I

01-3 02-3 03-2 04-3 05-1 06-2 07-1 08-2 09-2
10-1 11-3 12-2 13-3 14-2 15-2 16-1 17-1 18-1
19-3 20-2 21-2 22-2 23-3 24-2 25-3 26-4 27-4
28-4 29-5 30-4 31-அமலன் 32-மயூரி 33-விமலன்
34-அமலன், கமலன்,மயூரி, துளசி, விமலன்.
35-AMALAN, KAMALAN, MAYURI,THULASI, VIMALAN 36-55 37-மாலுமி
38-பாதம். 39-காகம். 40-கோன்.

### வினாத்தாள் II

01. 1-மின்னல், 2-அலை, 3-மேகம், 4-காற்று, 5-வானம், 6-வானம்,
02) ஆழி, 03) எட்டுத்திசையும், 04) அதிகமானது, 05) நான் பாடினேன்.
06) உறவினர், 07) குஞ்சு, 08) தம்பி, 09) வீராங்கனை, 10) வீடு+கூரை,
02. 1-சரண், 2-சந்தோசமாக,
03. 1- வாருங்கள்! வாருங்கள்! உங்கள் வரவு நல்வரவாகுக!
2-குமார் பாடசாலைக்குப் பிந்தி வந்தது உனது குற்றம். வாங்கின் மேல் ஏறி நில்.
04. 1-ஒருவரின் பொறுமை இருவரையும் நட்பாக்கும்,
2-பெரியோர் தவறியும் பிழைவிடார்.
05. 1-பேரழிவு, 2-இளந்தென்றல், 06. 1-தசாவதானி, 2-கடற்பேரலை/சுனாமி,
07. 1-Beach 2-Well 3-Mountion
08. 1-தயவுசெய்து நிறுத்தாதீர். 2-அமரும். 3-எப்படிச்சுகம்.
09. 1-நாம் போகிறோம். 2-அமரவேண்டாம்.
10. 1-பாசல. 2-வந்துறா.

11.

| | |
|---|---|
| 1. ஆசனம் | 1. பின்னால்வரும் வாகனத்தை எச்சரிக்க |
| 2. மணி | 2. மனித வலுவைச் செலுத்த |
| 3. முன், பின் தடுப்புகள் | 3. இரவில் ஒளிதர |
| 4. மிதி பெடல் | 4. அமர்வதற்கு |
| 5. முன்பக்க விளக்கு | 5. சேறுபுழுதி உடையில் பரவாமலிருக்க |
| 6. சேற்றுத்தடுப்பு | 6. திசைதிரும்பிச் செல்ல |
| 7. பின் சிவப்பு விளக்கு | 7. எச்சரிக்கை ஒலி எழுப்ப |
| 8. கையாளும் கைப்பிடி | 8. நிறுத்த |
| 9. பற்சில்லுகள் | 9. சில்லைச் சுழலவைக்க |

12-4, 13-3, 14-2, 15-2, 16-1, 17-1, 18-3, 19-4, 20-4, 21-1, 22-2, 23-2, 24-1
24-1, 25-2, 26-1, 27-3, 28-2, 29-3, 30-3, 31-1, 32-1, 33-1, 34-4, 35-3, 36-1
37-5, 38-22, 39-இந்திரன், 40-சபீனா, 41-52 கி.கி, 42-வாக்கியங்கள் இறந்த காலத்தில் எழுதப்படல் வேண்டும்.

## விடை விளக்கக்குறிப்புக்கள் தொடர் 11 இற்கானது.

### வினாத்தாள் I

01-2, 02-1, 03-1, 04-1, 05-3, 06-2, 07-3, 08-2, 09-2, 10-1, 11-1, 12-2, 13-1, 14-1, 15-3, 16-2, 17-3,
18-2×9=18, 2+6=8, 18+8=26 19-3, (7×5)+(6×6)=71 20-1 21-2
22-2, 23-3, 24-3, 25-3, 26-1, 27-2, 28-3, 29-2, 30-1, 31-1, 32-1, 33-ரூபா 255
34-ரூபா 410, 35-108 செ.மீ, 36-20, 37-120, 38-8 கி.மீ, 39-12,000 ரூபா
40-18:45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியில் ஆளும் கட்சிக்கே மீண்டும் வெற்றி வாய்ப்பு

## கருத்துக் கணிப்பில் தகவல்

ஆஸ்திரேலியீாவில் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் ஆளுங்கட்சியான தொழிலாளர் கட்சி மீண்டும் வெற்றிவாகை சூடி ஆட்சிப் பீடத்தில் அமரும் என்று தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் 21ஆம் திகதி பொதுத் தேர்தல் நடக்கவுள்ளது. இத் தேர்தலில் ஆளும் தொழிலாளர் கட்சிக்கும், பிரதான எதிர்க்கட்சியான லிபரல் கட்சிக்குமிடையே கடும் போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், இத்தேர்தலின் வெற்றி வாய்ப்பு குறித்து ஜே டபிள்யூ எஸ் என்ற தேர்தல் ஆய்வு மையம் கடந்த வாரம் நாடு முழுவதும் ஆய்வு ஒன்றை நடத்தியது.

இந்த ஆய்வில் தொழிலாளர் கட்சிக்கே மீண்டும் வெற்றிவாய்ப்பு அதிகம் உள்ளது என்றும் லிபரல் கட்சியைவிட 4 இடங்களை அதிகமாகக் கைப்பற்றி ஆட்சி அமைக் கும் என்றும் தெரியவந்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நாட்டில் தொழிலாளர் கட்சிக்குப் பாதகமான சூழல் நிலவியது. அப்போது தேர்தல் நடந்திருந்தால் தொழிலாளர் கட்சி நிச்சயம் பின்னடைவைச் சந்தித்திருக்கும்.

ஆனால், இப்போது தொழிலாளர் கட்சிக்குச் சாதகமான சூழல் நிலவுகிறது. இதனால் அக்கட்சி வெற்றிவாகை சூடுவது உறுதி என ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இப்போது பிரதமராக உள்ள ஜூலியா கில்லார்டுவே மீண்டும் பிரதமராவார் என்று பெரும்பாலான மக்கள் தெரிவித்துள்ளனர் என இந்த ஜே டபிள்யூ எஸ் என்ற ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழவையில் மொத்தம் 150 இடங்கள் உள்ளன். இவற்றில் தற்போது 88 இடங்கள் தொழிலாளர் கட்சி வசம் உள்ளன.

எதிர்வரும் தேர்தலில் இந்தளவிலான இடங்களை அக்கட்சி கைப்பற்றுவது கடினம். குயின்ஸ்லாந்து பகுதியில் பின்னடைவை சந்திக்கும். விக்டோரியா பகுதியில் நல்ல வெற்றியை பெறும் என்றும் கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

## ஜப்பானில் கடும் வெயிலுக்கு 30 ஆயிரம் பேர் பாதிப்பு

டோக்கியோ, ஓக. 20

ஜப்பானில் கடும் வெயிலுக்கு இந்த ஆண்டு இதுவரை 31 ஆயிரத்து 579 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெயிலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தவர்களில் 132 பேர் உயிரிழந்தனர்.

ஜப்பானில் மே மாதத்திலிருந்தே வெயில் கடுமையாக உள்ளது. இதனால் நாடு முழுவதும் மே மாதத்தில் இருந்தே மக்கள் வெயிலால் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

மே மாதத்திலிருந்து ஓகஸ்ட் 15 வரை 31 ஆயிரத்து 579 பேர் பாதிக்கப்பட்டனர். இதில் வெயிலின் கடுமையான பாதிப்புக்கு ஆளான 132 பேர் உயிரிழந்தனர் என்று பேரிடர் மேலாண்மை நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜூலையில்தான் வெயிலுக்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். ஜூலை மாதத்தில் மட்டும் 17 ஆயிரத்து 680 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 94 பேர் இறந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வெற்றி குறித்து முதலை ஆருடம்

மெல்போர்ன், ஓக. 20

ஆஸ்திரேலியாவில் உப்புநீரில் வசிக்கும் ஹரி என்னும் முதலை, ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட்டின் படத்தைச் சுட்டிக்காட்டி, அவரே தேர்தலில் வெற்றி பெறுவார் என முன்கூட்டியே உணர்த்தியுள்ளதாம்.

720 கிலோ கிராம் எடை கொண்ட இந்த முதலை, ஐந்து அடி நீளமானது. டார்வினில் மக்கள் நடமாட்ட மிகுந்த வீதிகளில் ஒன்றில் உள்ள இந்த முதலை சுற்றுலா பயணிகளையும் வெகுவாகக் கவர்ந்து வருகிறது.

இந்த முதலையின் எதிரில் புதன்கிழமை, இரு கோழிக் குஞ்சுகள் வைக்கப்பட்டன. ஒரு கோழிக் குஞ்சிடம் பிரதமர் ஜூலியா கில்லார்ட்டின் படம் வைக்கப்பட்டிருந்தது. மற்றக் குஞ்சிடம் எதிரணித் தலைவர் டொனி ஏபோட்டின் படம் வைக்கப்பட்டிருந்தது.

இவற்றைப் பார்வையிட்ட முதலை ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் கில்லாட் படத்தோடு இருந்த கோழிக் குஞ்சின் மீது பாய முற்பட்டது.

இதிலிருந்து அவரே வெற்றிபெறுவார் என ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

இம்மாத ஆரம்பத்தில் டார்வின் கிண்ணத்துக்கான பந்தயம் நடைபெற்றது. இதில் 12 குதிரைகளில் வெற்றிபெறும் குதிரைக்குரிய அட்டையை முன்கூட்டியே மற்றுமொரு முதலை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொங்கோவில் அமைதிப்படை முகாம் மீது தாக்குதல்; மூன்று இந்தியச் சிப்பாய்கள் பலி

கின்ஷாசா, ஓக. 20

கொங்கோவில் அமைதிப் பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நா. படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் மூன்று இந்தியச் சிப்பாய்கள் பலியாயினர்.

கொங்கோவில் பல ஆண்டுகளாகக் காணப்படும் உள்நாட்டுக் கலவரத்தை கட்டுப்படுத்த அங்கு ஐ.நா. அமைதிப் படை பணியில் ஈடுபட்டுள்ளது. பிரச்சினைக்குரிய கிவு மாகாணத்தில் தீவிரவாதிகள் சிலரை தேடும் பணியில் ஐ.நா. படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இதற்காக கிரும்பா என்ற இடத்தில் ஐ.நா. பாதுகாப்புப் படை முகாம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த முகாமை புதன்கிழமை 50 பேர் கொண்ட தீவிரவாதிகள் பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர்.

இந்த சம்பவத்தில் தீவிரவாதிகளுடன் சண்டையிட்ட இந்தியச் சிப்பாய்கள் மூன்று பேர் பலியாயினதுடன் அமைதிப் படையைச் சேர்ந்த ஏழு வீரர்கள் காயமடைந்துள்ளனர்.



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஓகியோவிலுள்ள கொலம்பஸ் பன்னாட்டு விமான நிலையம் சென்றபோது விமான ஓடுபாதை அருகில் இருந்த மக்களைப் புன்னகையுடன் பார்க்கிறார்.

# விசா கட்டணத்தை அதிகரிக்க அமெ. திட்டம்: வெளிநாட்டு முன்னணி நிறுவனங்கள் அதிருப்தி

வாஷிங்டன், ஓக. 20

'எச்-1பி மற்றும் எல்-1' விசா கட்டணத்தை அதிகரிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதனால், ஏராளமான வெளிநாட்டு முன்னணி கம்பெனிகள் பாதிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது. இது குறித்து இந் நிறுவனங்கள் அதிருப்தி தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் வேலைக்கு செல்வோருக்காக ஆண்டுதோறும், 'எச்-1பி மற்றும் எல்-1' விசாக்கள் வழங்கப்படுகின்றன. இந்தியக் கம்பெனிகள், குறிப்பாக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்தான், ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்ற 50 ஆயிரம் விசாக்களை விண்ணப்பித்து வாங்குகின்றன.

ஏற்கனவே உள்ள இந்த வகை விசாக்களைப் புதுப்பிப்பதோடு, புதிதாகவும் வாங்குகின்றன. இந்நிலையில், இந்த வகை விசா கட்டணங்களை அதிகரிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாவாக்க முடிவு செய்துள்ளது.

இந்தக் கட்டண உயர்வு, ஐந்து ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும். இதன்மூலம், 2,750 கோடி ரூபாய் திரட்டவும் அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அமெரிக்கா - மெக்சிகோ எல்லைப் பகுதியில் பாதுகாப்பை அதிகரிக்க அமெரிக்கா, 3,250 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. அதில், பெரும்பகுதியை விசா கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம் பெறவும் முடிவெடுத்துள்ளது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த விசா கட்டண உயர்வு பொருந்தும். அமெரிக்கா குறிப்பிட்ட இந்திய கம்பெனிகளில் டாடா, விப்ரோ, இன்போசிஸ் மற்றும் சத்யம் அடங்கும்.

தங்களது பணியாளர்கள், அமெரிக்காவில் தொழில்நுட்ப பணியாற்ற அதிக அளவில் 'எச்-1 பி' மற்றும் 'எல்.1' விசா வாங்குகின்றனர் என்று குறிப்பிட்டிருக்கிறது. 'நாஸ்காம்' அமைப்பு தகவல்படி ஆண்டுதோறும் இக்கம்பெனிகள் மூலம் 50 ஆயிரம் பேர் விசா கேட்டு விண்ணப்பிக்கின்றனர் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த விசா கட்டண உயர்வுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள இந்திய அரசு, இந்த விவகாரத்தை உலக வர்த்தக அமைப்பின் கவனத்திற்குக் கொண்டு செல்ல தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், விசா கட்டண உயர்வு இந்திய கம்பெனிகளையும், இந்தியர்களையும் பெரிதும் பாதிக்கும் என்பதை அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது. அதை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

இருந்தாலும், இந்தக் கட்டண உயர்வால், இந்தியா உடனான நீண்டகால பொருளாதாரப் பங்களிப்பு மற்றும் உறவு பாதிக்கப்படாது. அதற்கு மாறாக பலமடையும் என்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சக தகவல் தொடர்பாளர் மார்க் டோனர் கூறியுள்ளார்.

# பேச்சுக்கு வடகொரியா விருப்பம்; நிராகரித்தது தென் கொரிய அரசு

சியோல், ஓக. 20

வடகொரியா சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுத்ததை தென்கொரியா நிராகரித்துவிட்டது.

பேச்சுக்கு முன்வந்தால் பொருளாதார உதவி செய்யப்படும் என்று வடகொரியாவிடம் தென்கொரியா கடந்த ஆண்டு உறுதி அளித்தது. இதை பரிசீலித்த வடகொரியா சமீபத்தில் பேச்சுக்கு விருப்பம் தெரிவித்தது.

எனினும், வடகொரியாவின் விருப்பத்தைத் தென்கொரியா தற்போது நிராகரித்துவிட்டது என்று தென்கொரிய பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இரு நாடுகளுக்குமிடையே நிலவிய சூழல் வேறு; இப்போது நிலவும் சூழல் வேறு. இப்போதைய சூழலில் பேச்சுகளில் ஈடுபட விரும்பவில்லை என்று வடகொரியாவிடம் தென் கொரியா கூறிவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவின் இந்த முடிவால் வட கொரியா அதிருப்தியில் உள்ளது. இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழலும் உருவாகியுள்ளது. இதனிடையே, தற்போதைய சூழலில் வடகொரியாவுடன் பேச்சு நடத்த வாய்ப்பே இல்லை என்று தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமைதிப் பேச்சை மீண்டும் தொடங்குவது தொடர்பாக வடகொரியாவுடன் எவ்விதப் பேச்சும் நடத்தப்படவில்லை என்றும் தென்கொரிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதற்கு முன்னர் வடகொரியாவும், தென்கொரியாவும் அமைதிப்பேச்சை மீண்டும் தொடங்கத் திட்டமிட்டிருந்தன என்றும் இது தொடர்பாக இரு நாடுகளும் இரகசியமாகப் பேச்சு நடத்தி வந்தன என்றும் தகவல் வெளியாகியிருந்தது.

## உலக அரங்கில்

## முஷாரப்பின் மருமகள் நிவாரணநிதி சேகரிப்பு

பாகிஸ்தான் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பின் மருமகள் நிதிதிரட்டி வருகிறார்.

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தற்போது லண்டனில் தங்கியுள்ளார். பாகிஸ்தானில் தற்போது வரலாறு காணாத வெள்ளம் சூழ்ந்துள்ளது. ஆயிரத்து 700 பேர் இந்த வெள்ளத்துக்குப் பலியாகியுள்ளனர்.

சிந்து மற்றும் பஞ்சாப் மாகாணத்தில் இரண்டு இலட்சம் பேர் வீடுகளை இழந் துள்ளனர். வெளிநாட்டில் தங்கியுள்ள முஷாரப், வெள்ள நிவாரண நிதியாக ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளார். இந்நிலையில், அவரது புதல்வர் பிலாலின் மனைவி இரும் முஷாரப், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதி திரட்டி வருகிறார்.

ரமழான் மாதத்தை ஒட்டி அவர் கலண்டர்களை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளில் விற்றுவருகிறார். இந்த கலண்டர் மூலம் கிடைக்கும் கணிசமான நிதியை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவிட அவர் முடிவு செய்துள்ளார்.

இந்தியாவிலுள்ள தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக ளிடமிருந்து நிதிதிரட்டி, பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரத்துக்காக செலவிடத் திட்டமிட்டுள்ளார்.

ஒரு மாதத்துக்கும் மேலாக வெள்ளம் பல பகுதிகளை சூழ்ந்துள்ளது. கால்நடைகள் செத்து மிதக்கின்றன. சுகாதாரமற்ற நிலையில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தடுப்பூசி மற்றும் சிகிச்சைக்காக நிதியை செலவிட உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப்பிரச்சினையில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய ராஜீவை விட மகன் ராகுல் காந்தி அதிபுத்திசாலி!

## பழம்பெரும் எழுத்தாளர் குஷ்வந்த் சிங் புகழாரம்



புதுடில்லி, ஓக. 20

ராஜீவ் உண்மையில் ஒரு தலைவர் அல்லர்; இலங்கைப் பிரச்சினையில் அவர் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினார். ஆனால் ராகுல் தன் தந்தையை விட அதி புத்திசாலியாக உள்ளார் - என்று பிரபல எழுத்தாளர் குஷ்வந்த் சிங் (வயது - 95) கூறியுள்ளார்.

இந்தியாவின் பிரபல மூத்த எழுத்தாளரான குஷ்வந்த் சிங், தான் எழுதிய புத்தகத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

ராகுலுக்கு என்று ஒரு தொலைநோக்கு இருக்கிறது. மாயாவதி மற்றும் சிவசேனாவின் மண்ணிலேயே அவர்களை ராகுல் எதிர்கொண்டிருக்கிறார். அமேதியில் தாழ்த்தப்பட்டோரின் வீடுகளில் தங்கி, அவர் உணவு உண்டமை சர்ச்சையைக் கிளப்பியது. எனினும், இந்தியாவின் வெட்கக்கேடான நிலையை அவர் வெளிப்படுத்தினார். இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் இந்தியாவில் தீண்டத்தகாதோர் உள்ளனர். அவர்கள் இன்னும் துன்பத்தில் உழல்கின்றனர்.

சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்று, அதை எதிர்ப்பது போல் மும்பைக்குச் சென்று 'மும்பை இந்தியர்கள் அனைவருக்கும் சொந்தம்' என்று சிவசேனாவை எதிர்த்துப் பேசினார். ராஜிவைப் பொறுத்தவரை, அவரால் கையாள முடியாத பதவியில் அவர் திணிக்கப்பட்டார். அவரிடம் சில நல்ல யோசனைகள் இருந்தன. ஆனால் அவை ஒன்றும் அசாதாரணமானதல்ல. உண்மையில் அவர் தலைவரே அல்லர். ஆனாலும் அவர் அரசியலுக்குப் பொருந்தாதவர் என்று நான் கருதவில்லை. அவர் தன் தாயைப் பின்பற்றினார்; அவரைப் போலவே பல தவறுகளைச் செய்தார்.

அவர் ஊக்குவித்த தொலைத் தொடர்பு மற்றும் கணினி பற்றிய திட்டங்கள், அவரது தாயின் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டவைதான். இலங்கைப் பிரச்சினையில் அவர் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினார். ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு அமைச்சரைத் திட்டினார். ஷாபானு வழக்கு மற்றும் பாபர் மசூதி சம்பவம் ஆகியவற்றில் அவர் செய்த பெருந்தவறுகள், நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத்தி விட்டன.



இந்திராவின் படுகொலையை ஒட்டி நடந்த, சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தை அவரால் எளிதில் அடக்கியிருக்க முடியும். ஆனால், 'ஒரு பெரிய மரம் விழும் போது, பூமி அதிரத்தான் செய்யும்' என்ற அவரது பேச்சின் மூலம் கலவரத்தை நியாயப்படுத்தினார். அவரது தாத்தா நேரு இது போன்ற கலவரங்களை அனுமதித்திருப்பாரா?

2014 லோக்சபாத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால், ராகுல் பிரதமர் ஆவார். ராகுல் என் வீட்டுக்கு வந்தபோது, முகஸ்துதி செய்பவர்களை விலக்கி வையுங்கள் என்று சொன்னேன். - இப்படி குஷ்வந்த் சிங் எழுதியுள்ளார்.

# தலைசிறந்த 10 தலைவர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தார் மன்மோகன்

சென்னை, ஓக.20

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'நியூஸ்வீக்' பத்திரிகை சர்வதேச அளவில் பிற தலைவர்களின் மனதைக் கவர்ந்த தலைசிறந்த 10 தலைவர்கள் பட்டியலை வெளியிட்டது.

இதில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதலிடம் கிடைத்துள்ளது. அவரது எளிமையான நடவடிக்கைகளுக்காக அவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார் என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் மிகவும் அன்பானவர் - பழகுவதற்கு இனிமையானவர் - எளிமையானவர் - கறைபடாத கரத்திற்கு சொந்தக்காரர். அரசியல் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு என உலகத் தலைவர்கள் புகழாரம் சூட்டியுள் ளனர்.



பொருளாதார வல்லுநராக இருந்து அரசியல்வாதியான மன்மோகன் சிங், 21ஆம் நூற்றாண்டில் இந்தியாவை வலிமை வாய்ந்த நாடாக உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார் எனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

உலகின் வாழ்க்கை தரம், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல் சூழல் உள்ளிட்ட 5 பிரிவுகளில் மிகச் சிறந்த நூறு நாடுகளில் இந்தியா 78 ஆவது இடத்தில் உள்ளது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.



இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமாராவ், சென்னையில் முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து இலங்கைக்குச் சிறப்புப் பிரதிநிதியை அனுப்புவது உட்பட பல்வேறு விடயங்களைப் பேசினார்.

# அ.தி.மு.க. கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு

## வைகோ நம்பிக்கை தெரிவிப்பு

சென்னை, ஓக. 20

வரும் சட்டசபைச் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கு வெற்றிவாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது - என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ பேசினார்.

ம.தி.மு.க. மாவட்டச் செயலர்கள் கூட்டம் அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது.

கூட்டத்தில் வைகோ மேலும் பேசியவை வருமாறு -

ம.தி.மு.கவிற்குக் கிடைத்துள்ள வாக்குகளில் குறைந்த சதவீதத்தில்தான் தேர்தல் கமிஷனின் அங்கீகாரத்தை இழந்துள்ளது. இன்னும் ஆறு ஆண்டுகளுக்கு பம்பரம் சின்னத்தில் நாம் போட்டியிட முடியும். கடந்த சட்டசபைத் தேர்தலில் சீமா பஷீர், மணிமாறன், நடராஜன், பூமிநாதன் போன்றவர்கள் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தனர். அவர்கள் வெற்றி பெற்று கூடுதலாக சில எம்.எல்.ஏக்கள் நமக்கு கிடைத்திருந்தால் தேர்தல் கமிஷன் அங்கீகாரம் எளிதாகக் கிடைத்திருக்கும்.

மக்கள் மனதில் ம.தி.மு.கவின் அங்கீகாரம் நீடிக்கிறது. வரும் சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. ஆட்சிக்கு எதிராக என் பிரசாரம் வலிமையாக இருக்கும். தி.மு.க. குடும்பச் சொத்துக்களின் முழுவிவரமும், ஆதாரத்துடன் கூடிய பல புதிய தகவல்கள் என் கைக்கு கிடைத்துள்ளன. இப்போது நான் வெளியிட்டுப் பேசுவதை விட, தேர்தல் நேரத்தில் ஒவ்வொன்றாக மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்வேன்.

மக்கள் பிரச்சினைகளில் தி.மு.க. கவனம் செலுத்தவில்லை. தினமும் ஆடம்பர பகட்டு விழாக்களை நடத்தி, மக்களை எரிச்சல் அடையச் செய்து வருகிறது. கருத்து உரிமைக்குப் பலத்த அச்சுறுத்தலை தி.மு.க., அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. மக்கள் வரிப்பணத்தை பாழாக்கி, முதல்வர் குடும்ப உறுப்பினர்களுக்கு விளம்பர வெளிச்சம் தேடும் மாநாடாக கோவை செம்மொழி மாநாடு அமைந்துள்ளது.

அ.தி.மு.க. கூட்டணிக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்து விட்டது. ம.தி.மு.கவினருக்கும் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சட்டசபைத் தேர்தலில் பெருவாரியான தொகுதிகளில் வெற்றி பெறும். - இப்படி அவர் பேசினார்.

# பாடசாலைக்கட்டடம் இடிந்து 18 மாணவர்கள் பரிதாபப் பலி

டேராடூன், ஓக. 20

உத்தரகண்ட் மாநிலத்தில் மழையின் காரணமாக பாடசாலைக் கட்டடம் இடிந்து விழுந்து 18 மாணவர்கள் பலியாகினர்.

உத்தரகண்ட் மாநிலம், பாகேஷ்வர் மாவட்டத்தில் சம்கார் என்ற கிராமத்தில் உள்ள பாடசாலைக் கட்டடம் ஒன்று நேற்று முன்தினம் காலை பெய்த கனமழை காரணமாக இடிந்து விழுந்தது. இதில், மாணவர்களும், ஆசிரியர்களும் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். தகவலறிந்த பொலிஸாரும், மீட்புக் குழுவினரும் விரைந்து வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

# இந்தியச் செய்திகள்

# இலங்கை மீனவரிடம் கைவரிசை காட்டிய தமிழ்நாட்டு அதிகாரிகள்

இராமநாதபுரம், ஓக.20

எல்லை மீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான இலங்கை மீனவர்களிடம் பறிமுதல் செய்த மீன் வகைகளை ஏலம் விட்டுப் பெற்ற 90 ஆயிரத்து 648 ரூபாவை மண்டபம் மீன்துறை அதிகாரிகள் வழங்காததால் மீனவர்கள் விரக்தியுடன் தாயகம் திரும்பினர்.

கடந்த ஜூன் 16 இல் காரைக்கால் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த நான்கு படகுகளைப் பிடித்த கடலோரக் காவல்படையினர், அதிலிருந்த 21 மீனவர்களைக் கைதுசெய்தனர். இதுபோல் ஜூன் 5 ஆம் திகதி இந்திய எல்லையில் மீன்பிடித்து பிடிபட்ட மற்றொரு படகின் ஐந்து மீனவர்களுடன் 26 மீனவர்களை மதுரை சிறை யில் அடைத்தனர். தண்டனை முடிந்த நிலையில் நேற்றுமுன்தினம் (18ஆம் திகதி) இலங்கை செல்ல மத்திய, மாநில அரசுகள் ஒப்புதல் அளித்தன. இதற்காக கடந்த 20 நாட்க ளாக மண்டபத்தில் பொலிஸ் பாதுகாப்பில் மீனவர்கள் தங்கியிருந்தனர். ஒவ்வொரு முறை மீன வர்கள் பிடிபடும் போதும் அவர்களிடம் கைப்பற்றப்படும் பொருள்களை விடுதலையாகும் போது ஒப்படைக்க வேண்டும்.

மீன்கள் அழுகும் பொருள் என்பதால், அவற்றை ஏலத்தில் விட்டு அதற்கான பணத்தை விடுதலையாகும் மீனவர்களிடம் மீன்வளத்துறை அதிகாரிகள் ஒப்படைப்பது வழக்கம். ஆனால் ஜூன் 5 ஆம் திகதி பிடிபட்ட படகின் மீன் வகைகளை ஏலமிட்டுப் பெற்ற ரூபா 62 ஆயிரத்தை ஒப்படைத்த மீன்வளத்துறை அதிகாரிகள், ஜூன் 16 இல் பிடிபட்ட ஐந்து படகுகளின் மீன் வகைகளுக்கான 90 ஆயிரத்து 648 ரூபாவை வழங்கவில்லை. இன்று, நாளை என கடந்த 20 நாட்களாக ஆசை வார்த்தை கூறி இலங்கை செல்ல படகு ஏறும் கடைசி நிமிடம்வரை அவர்களுக்கான பணத்தைக் கொடுக்கவில்லை. இதனால் விரக்தியடைந்த மீனவர்கள் நொந்து போன மனதுடன் இலங்கை திரும்பினர். இலங்கை திருகோணமலை மீனவர் குமார கருணாரத்ன கூறுகையில் -

பொலிஸார் கைப்பற்றிய பொருள்கள், படகுகள் எல்லாம் [illegible] வரை எங்களுக்குச் சேரவேண்டிய மீன்கள் ஏலம் விட்டுப் பெற்ற பணத்தை மீன்வளத் துறை அதிகாரிகள் தரவில்லை. சிறைத்தண்டனை அனுபவித்தும் நஷ்டத்துடன நாடு திரும்புகிறோம் - என்று தெரிவித்தார்.

# யாருக்கும் உதவாதவர்களை காலம் எட்டி உதைத்துவிடும்

## நோன்பு திறப்பு நிகழ்வில் ஜெயலலிதா

சென்னை, ஓக. 20

யாருக்கும் உதவாதவர்களை காலம் எட்டி உதைத்துவிடும். ஆனால், கொடுத்து உதவுகின்ற ஈகை குணம் கொண்டவர்கள் வரலாற்றில் நிலைத்து நிற்பார்கள் - என்று இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா கூறினார்.

அ.தி.மு.க. சார்பில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி சென்னை ராதாகிருஷ்ணன் வீதியில் உள்ள நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. அதில் அவர் மேலும் பேசியவை வருமாறு :

இஸ்லாமிய மக்களுக்கு இறைவனால் இடப்பட்ட கட்டளை நோன்பு. பெரியவர் முதல் சிறியவர் வரை நீர் கூடப் பருகாமல் நோன்பை மேற்கொண்டு உள்ளத் தூய்மையுடன் இறைவனை வழிபட்டு இல்லாதவர்களுக்கு உதவி செய்வது ரமழான் மாதத்தில் நடக்கிறது.

அறிவியல் அடிப்படையிலும் நோன்பு இருப்பவர்களுக்கு பெரும் பயன் கிடைக்கிறது. பிறருக்கு உதவி செய்து வாழ்பவர்களை உலகம் என்றும் போற்றிப் புகழும்.

யாருக்கும் உதவாதவர்களை காலம் எட்டி உதைத்துவிடும். ஆனால், கொடுத்து உதவுகின்ற ஈகை குணம் கொண்டவர்கள் வரலாற்றில் நிலைத்து நிற்பார்கள். இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், இஸ்லாம் மதத்தின் இணையில்லா தத்துவங்களில் ஒன்றாக பிறருக்கு உதவிடும் உன்னத நோக்கம், இந்த ரமழான் மாதத்தில் வலியுறுத்தப்படுகிறது. ரமழான் நோன்பு பண்டிகை இஸ்லாமிய மக்களுக்கு ஏற்றத்தையும், இன்பத்தையும், மன அமைதியையும் தர வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். - இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு இடமில்லை என்கிறார் கனேடியப் பிரதமர்

## சன் சீ கப்பல் அகதிகள் குறித்து முதல் தடவையாக பிரஸ்தாபம்

கனடா, ஒக. 20

கனடா புகலிடம் கோருபவர்களுக்கு நேசக்கரம் நீட்டும் நாடு என்ற போதிலும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு இடம ளிக்கப்படமாட்டாது. கப்பல்களில் வந்து அதிக எண்ணிக்கையான மக்கள் புகலிடம் கோர முற்பட்டால் சட்டங்களில் திருத்தங் கள் மேற் கொண்டு அதைத் தடுக்க கனடா அரசு தயங்காது.

- இவ்வாறு கனேடியப் பிரதமர் ஸ்டீ வன் ஹார்பர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசு என்ற ரீதியில் நாட்டின் இறைமை யையும், தேசிய பாதுகாப்பையும் உறுதிப் படுத்தவேண்டியது முதன்மைக் கடமைக ளில் ஒன்றாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக் கையாளர்கள் கப்பல் மூலம் கனடாவில் தஞ்சம் கோரியதன் பின்னர் முதல் தட வையாக அந்நாட்டுப் பிரதமர், புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான கருத் துக்களை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த கப்பலில் விடுத லைப் புலி உறுப்பினர்கள் இருக்கக்கூடும் என்பது தொடர்பில் அந்நாட்டு அதி காரிகள் அதி கம் கரிசனை கொள்ள வில்லை எனத் தெரி விக்கப்படுகிறது.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் இடம் பெற்றுள்ளனவா என்பது குறித்து அதிகாரி கள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின் றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

'சன் சீ' கப்பலில் பயணித்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டத்தரணிகளின் ஊடாகத் தங்களது ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்தி அடைக்கலம் கோரும் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் கனேடிய அதிகாரிகள் குறிப்பிட் டுள்ளனர். (சி)

## நியந்தரி அமைப்பின் ஐயுர்வேத உபாகர்மம்

யாழ்ப்பாணம், ஒக.20

'நியந்தரி' அமைப்பினால் நடத்தப் படும் அந்தணர்களுக்கான ஐயுர்வேத உபாகர்மம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பங்குகொள்ளவருபவர்களை பஞ்ச பாத்திரம் கொண்டு வருமாறு ஏற்பாட்டா ளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-10)

## பிக்குகள் 1,500 பேர் மேர்வினுக்கு ஆதரவாக இன்று மகஜர்

கொழும்பு, ஒக. 20

மேர்வின் சில்வா எம்.பியை மீண்டும் பிரதி அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று கோரி 1,500 புத்த பிக்குகள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இன்று கையளிக்கப்பட உள்ளது.

இந்த தகவலை மேர்வின் சில்வா எம்.பியே தெரிவித்தார்.

சமுர்த்தி அலுவலர் ஒருவரை மரத்தில் கட்டிய சம்பவத்தின் பின்னணியில் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் பதவி யில் இருந்து மேர்வின் சில்வா ஜனாதி பதியால் நீக்கப்பட்டார்.

இந்த நிலையிலேயே கம்பஹாவைச் சேர்ந்த புத்த பிக்குகள் மேர்வின் சில்வா வுக்கு மீண்டும் பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படவேண்டும் என்று ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பிக்க உள்ளனர்.

இதற்காக புத்தபிக்குகள் இன்று கொழும்பில் கூடுகின்றனர். மகஜர் ஒன் றில் அவர்கள் கையொப்பமிட்ட பின்னர் அதனை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள் ளனர் என்று மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

**2005ஆம் ஆண்டு முதல்**

# ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் 19,271 சிறைக்கைதிகள் விடுதலை

கொழும்பு, ஒக. 20

2005ஆம் ஆண்டு முதல் இப்போது வரை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் 19ஆயிரத்து 271 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் விஜயமுனி சொய்ஸா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

ஐனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுனில் ஹந்துன்நெத்தி நேற்று எழுப்பிய இது தொடர்பான கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்தோடு அவ்வாறு விடுதலை செய் யப்பட்டவர்களின் பெயர்களும் அவர்கள் ஒவ்வொருவரும் புரிந்த குற்றங்களையும் உள்ளடக்கிய பெயர்ப்பட்டியல் ஒன்றும் இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்படுமா என் றும் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பி னார்.

அந்த விவரங்கள் நீதிமன்றங்களிடம் இருந்தே பெறப்படவேண்டும். அதற்காக ஒருவாரம் தேவைப்படுகிறது என்று பிரதி அமைச்சர் பதில் அளித்தார். (ஒ-சி)

# கே.பி. இன்னும் இராணுவ பாதுகாப்பில் இருக்கிறாராம்

கொழும்பு, ஒக. 20

குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி., இராணுவத்தினரது பாதுகாப்பிலேயே வைக்கப்பட்டுள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல நேற்று செய்தியாளர்களிடம் தெரி வித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இங்கு செய்தியாளர் ஒரு வர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

கே.பி., கைதுசெய்யப்பட்டு வெளி நாட்டில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படும்வரை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ தெரியாது என சரத் பொன்சேகா லங்கா ஈ நியூஸ் இணைய தளத்துக்கு வழங்கியுள்ள பேட்டியில் தெரி வித்தார். இது உண்மையா? - எனச் செய்தி யாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

பதில்: - ''அது அப்பட்டமான பொய்'' என அமைச்சர் ஒரு வார்த்தையில் பதில் அளித்தார்.

கேள்வி:- கே.பி. என்ற குமரன் பத்ம நாதன் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட் டாரா? நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள் ளாரா? இப்போது அவர் எங்கே வைக்கப் பட்டுள்ளார்?

பதில்:- அவர் இராணுவத்தின் பாது காப்பில் இருக்கின்றார்.

கே.பி. என்ற குமரன் பத்மநாதன் தொடர்பான கேள்விகளுக்கு இவ்வாறு சுருக்கமாகப் பதில் அளித்தார் ஹெகலிய. (ஒ-சி)

# மேர்வின் குறித்து இன்று ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு, ஒக. 20

நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்கள் தொடர்பாக ஆராய வுள்ள ஒழுக்காற்றுக் குழு இன்று தனது முதலாவது அமர்வை மேற்கொள்ளவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இந்த அமர்வு இடம்பெறவுள்ளது என குழுவின் உறுப் பினர் சட்டத்தரணி எச்.எம்.ஷஹீட் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசா ரணை செய்வதற்கென மூவர் கொண்ட குழு வொன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைத்துள்ளது.

இதன் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயரத்ன வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். செயலாள ராக மஹிந்த சமரவீரவும், குழுவின் ஏனைய உறுப்பின ராக சட்டத்தரணி எச்.எம்.ஷஹீட்டும் செயற்படு கின்றனர்.

களனியில் டெங்கு ஒழிப்புக் குறித்த சிரமதானப் பணிகளில் கலந்துகொள்ளாத சமுர்த்தி உத்தியோ கத்தர் ஒருவரை மரத்தில் கட்டி வைத்ததன் காரண மாக முன்னாள் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் பிரதி அமைச்சர் பதவி பறிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் சிறந்த நாடுகளில் இலங்கைக்கு 66ஆம் இடம்

**பின்லாந்து முதலாம் இடத்தில்**

கொழும்பு, ஒக. 20

உலகின் சிறந்த நாடுகளின் வரிசையில் இலங்கை 66ஆம் இடத்திலுள்ளது என அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'நியூஸ் வீக்' சஞ்சிகையின் ஆய்வு ஒன் றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூறு நாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் பின்னர் இந்த நாடுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என 'நியூஸ் வீக்' சஞ்சிகை தக வல் வெளியிட்டுள்ளது.

சுகாதாரம், கல்வி, பொருளாதாரப் போட்டித் தன்மை, வாழ்க்கைத் தரம்மற்றும் அரசியல் சூழல் ஆகிய ஐந்து அம்சங்களை அடிப்படையாகக்கொண்டு சிறந்த நாடுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகளுக்கமைய உலகின் சிறந்த நாடுகளின் பட்டியலில் பின்லாந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது.

சுவிற்சர்லாந்து, சுவீடன், அவுஸ்திரேலியா மற்றும் லக்ஸம்பேர்க் ஆகிய நாடுகள் அடுத்த நான்கு இடங் களைப் பெற்றுள்ளன. இந்தியா 78ஆம் இடத்தில் உள்ளது.

இந்தப் பட்டியலில் கடைசியும் 100 ஆவது இடமும் பேர்கினா ஃபாசோ நாட்டுக்குக் கிடைத்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏ–9 வீதி விபத்தில் பெண் மரணம்

கொழும்பு, ஒக. 20

ஏ-9 வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் நடேசலிங்கம் லோஜனி (வயது - 23) என்ற யுவதி சம்பவ இடத் திலேயே பரிதாப கரமாக உயிரிழந்தார்.

வவுனியா வைத்தியசாலைக்கு அருகே நேற்றுக் காலை 9 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இவர் பயணம் செய்த சைக்கிளுடன் டிப்பர் வாகனம் ஒன்று மோதியது எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

## தீவக கல்வி வலயத்தில் பதவி வெற்றிடங்கள்

யாழ்பாணம், ஒக.20

தீவகக் கல்வி வலயத்துக்காக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மாணவ அபிவிருத்தி) கோட்டக் கல்விப் பணிப்பா ளர் (காரைநகர்) ஆகிய பதவிகளுக்கு தகுதி யானவர்களிடம் இருந்து விண்ணப் பம் கோரப்படுகின்றன.

அதிபர் சேவை தரம் ஐ இல் போதிய ளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத விடத்து அதிபர் சேவை 2 -1 தரத்தில் உள்ள வர்களது விண்ணப்பங்கள் சேர்த்துக் கொள்ளப்படும் எனவும் -

விண்ணப்பங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்று அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள் ளார். (ஒ-10)

## நம்பிக்கையுடன் காத்திருக்கும் இலங்கைப் பெண்

லண்டன், ஒக. 20

இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர் சன் சீ கப்பலில் தமது குடும்பத்தினர் 11 பேர் கனடாவை அடைந்திருக்கலாம் என்ற நம்பிக்கையுடன் லண்டனில் காத்திருக்கி றார் என அங்கிருந்து கிடைக்கும் செய் திகள் தெரிவிக்கின்றன.

நிர்ஜா கணேசலிங்கம் என்பவரே இந் தப் பெண் ஆவார்.

கடந்த ஆறுமாத காலமாக இந்த உற வினர்கள் நிர்ஜாவுடன் தொடர்பு கொள்ள வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

## பாழடைந்த கிணற்றுக்கு நீதிமன்றத்தில் வழக்கு

நல்லூர், ஒக.20

பராமரிப்பின்றி பாழடைந்து கிடக்கும் கிணறு குறித்து 2007 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க நுளம்பு பெருகும் சட்டத்திற்கு அமைவாக வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் நா.ரகுமார் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

பாழடைந்த கிணறு தொடர்பாக மேற் குறித்த சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத் தக்கது. (த-111)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1989 . 08 . 15

இறப்பு 2008 . 08 . 31

அமரர் பத்மநாதன் அமலநாத்

ஆவணியில் தாய்மடியில் அவதரித்து 19 ஆண்டுகள் துள்ளி விளையாடி பாதியில் பிரிந்து இரண்டு ஆண்டுகளாயினும் இமைப் பொழுதுகூட மறவாது உன் நினைவுகளுடன் வாழ்கிறோம்.

7/1, அன்னசத்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்

உன்பிரிவால் துயருறும்: அம்மா, அப்பா (சாரதி) சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயத்துக்குச் சென்று திரும்புகையில் ஸ்ரான்லி வீதியில் வயோதிபப் பெண் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 20

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் நேற்றுமாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் 81 வயதுடைய விநாயகமூர்த்தி சிவயோகம் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நல்லூர் ஆலயத்திற்குச் சென்றுவிட்டு, ஓட்டேவில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவர். ஸ்ரான்லி வீதியில் ஓட்டோவில் இருந்து இறங்கிய சமயம் பின்னால் வந்த மற்றொரு ஓட்டோ அவர் மீது மோதியது.

இதில் படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் அங்கு உயிரிழந்தார்.

இவரின்சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# சிங்கள மயமாக்கப்படுவதைத் தடுக்க சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவை

## தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக.20

வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் நிலப்பறிப்பையும், சிங்களமயமாக்கலையும் தடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு தேவையாகவுள்ளது.

இந்த ஆதரவைத் திரட்டுவதற்கு தாயகத்தில் உள்ள மக்களும், புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், தமிழகத்தில் உள்ள தமிழ் உறவுகளும் விழிப்புணர்வுடன் ஒற்றுமையாகச் செயற் பட முன்வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

தமிழ்த்தேசியத்திற்கான மக்கள் முன்னணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் செறிவாக இருப்பதனால் உடனடி சிங்களக் குடியேற் றங்கள் சாத்தியமில்லை என்பதால் பொருளா தார ரீதியாக சிங்கள மயமாக்கும் முயற்சி கள் தீவிரம் பெறுகின்றது. இத்தகைய சிங்க ளக் குடியேற்றங்கள் உள்ளிட்ட சிங்கள மயப்படுத்தல் திட்டங்களை நியாயப் படுத்த சில 'தமிழ்த் தலைவர்கள்' முனைகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்த அறிக்கையின் முழு விவரம் நாளை வெளிவரும்.)

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைச் செய்யும்போது பல சவால்களையும், சிக்கல்களையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீள எழுச்சி பெறுவதற்குப் பல்வேறு தரப்பினர் உதவிகளை வழங்கினார்கள். இதற்கான நிதி உதவிகள் இலங்கை அரசு மற்றும் வெளிநாடுகளிலிருந்து கிடைத்தது. இடம்பெயர்ந்த மக்களும் தமது நிலை தொடர்பில் அதிக மனவேதனையுடனேயே இருந்தனர். இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக உதவிகளை செய்துகொடுக்க வேண்டும். அந்த மக்களின் வாழ்க்கையை பழைய நிலைமைக்குக் கொண்டு சென்று சிறப்பாக வாழ்வதற்கு எம்மாலான உதவிகளை நாம் செய்வோம்.

அனைத்து இலங்கையர்களும் சந்தோஷமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான அத்திவாரத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும். நாட்டிலுள்ள அனைவரும் சமாதானமாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் - இப்படி நீல் பூனே தெரிவித்தார். (அ-சி)

## கோதுமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடும். நோய்கள் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கம் அளித்தார்.

''நாம் பயிர் செய்வோம் நாட்டைக் கட்டி எழுப்புவோம்'' என்ற மஹிந்த சிந்தனைத் திட்டம் நல்ல பயனை அளித்துள்ளது. நெல் உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ளதுடன் நாட்டில் அரிசியின் பாவனையும் அதிகரித்துள்ளது. 2005ஆம் ஆண்டு தனிநபர் கோதுமை பாவனை42 கிலோவாக இருந்தது. 2009ஆம் ஆண்டு இது 27கிலோவாகக் குறைந்துள்ளது. அரிசியின் பாவனையை அதிகரிக்கச் செய்து கோதுமை பாவனையை மேலும் குறைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதே வேளை, எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு ''நாம் பயிர் செய்வோம் நாட்டைக் கட்டி எழுப்புவோம்'' திட்டத்துக்கு அரசு 2,400 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அருந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தார்.

பதக்கங்கள், பதவிகள், ஓய்வூதியம் போன்றவை இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கு ஏற்ப பறிபோனமை தொடர்பில் தனக்கு எதுவித கவலையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இவற்றை எதிர்பார்த்து தான் பயங்கரவாதத்தை ஒழிக்கவில்லை என்றும் இதுபோன்ற எதுவித பிரச்சினைகள் வந்தாலும் மக்களுக்காக தனது சேவை தொடரும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாடு நீதியற்ற நாடாக மாறியுள்ளது. இதனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் அநீதி எனக்கு மட்டும் பொதுவானதல்ல. எனது பதவி, ஓய்வூதியம், பதக்கங்கள் போன்றவற்றைப் பறிக்க இராணுவ நீதிமன்றம் உத்தரவிட்டது.

பதவிகள், பட்டங்களை எதிர்பார்த்து நான் இந்த நாட்டுக்குச் சேவை செய்யவில்லை. அவை பறிபோனமை பற்றி எனக்குக் கவலையில்லை. நான் தொடர்ந்தும் மக்களுக்குச் சேவையாற்றுவேன்.

நான் 50 ஆயிரம் ரூபாவை ஓய்வூதியமாகப் பெற்றுவந்தேன். அந்தப் பணத்தை மாதாந்தம் அநாதை இல்லம் ஒன்றுக்கு வழங்க நான் திட்டமிட்டிருந்தேன். அந்தப் பணம் இப்போது கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பதவிகள், பதக்கங்களை பறித்த போதும் நான் செய்த வீர செயல்களை இல்லாதொழிக்க முடியாது.

எனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு மூலம் இராணுவ சம்பிரதாயம் மீறப்பட்டுள்ளது. இதனால் சிலர் மட்டும் மகிழ்ச்சியடைவர்.

அடுத்த இராணுவ நீதிமன்றில் எனக்கு சிறைத்தண்டனை வழங்கப்படும் என்றே எண்ணுகிறேன். இதுதொடர்பாக ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தும், நான் அது குறித்துக் கவலைப் படப் போவதில்லை. - என்றார். (அ-சி)

## ஐ.நாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சர்வதேச மனிதநேய தின வைபத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஆழிப்பேரலை மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் என்பவற்றில் ஐ.நா. பெரிதும் உதவி புரிந்தது. யுத்தத்திற்குப் பின்னர் இலங்கைக்கு ஐ.நா வழங்கிய உதவிகளுக்கு நன்றி.

இப்போது நாம் சாதித்த விடயங்களை சகல மனிதாபிமான பணியாளர்களினதும் ஐ.நாவினதும் உதவியின்றிச் சாதித்திருக்க முடியாது. இலங்கை அரசின் சார்பிலும் இலங்கை மக்களினது சார்பிலும் ஐ.நா அலுவலகத்திற்கும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துள்கொள்கின்றேன். அதுமாத்திரமின்றி உதவி வழங்கும் நாடுகளுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இலங்கை அரசு அரை நிரந்தர வீடுகளை ஏன் அமைத்தது என்பது தொடர்பாக ஐ.நாவுடன் வாக்குவாதங்கள் இருந்தன. அந்நேரம் அகதிகளை இலங்கை அரசு பல வருடங்களுக்கு அங்கேயே தடுத்து வைத்திருக்கப்போவதாகவும் வதந்திகள் பரவின. ஆனால் அரசு எதனைச் செய்ய முயற்சித்தது என்பதனை அனைவரும் இப்போது புரிந்துகொண்டுள்ளனர்.

இங்கு மக்கள் பலவருடங்களாக இடம்பெயர்ந்து இருந்துள்ளனர். தற்போது அவர்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது இடம்பெயர் முகாம்களில் குறைந்தளவான மக்களே இருக்கின்றனர். அவர்களும் மிகவிரையில் மீளக்குடியேற்றப்படு வார்கள். இதற்கும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளின் உதவிகள் தேவைப்படுகின்றது. இடம்பெயாந்த மக்களை மீளக் குடியேற்றப் பல வருடங்கள் பிடிக்கும் எனப் பலர் தெரிவித்தனர். ஆனால் ஒரு வருடத்தில் நாம் அவர்களை மீளக்குடியேற்றியுள்ளோம். இதேபோலவே எஞ்சியுள்ளவர்களையும் குடியேற்றுவோம் - என்று அமைச்சர் பஸில் கூறினார். (அ-சி)

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புலிப்பயங்கரவாதத்துக்கு எதிராக யுத்த வெற்றியை நோக்கிப் படைகளை நகர்த்திய தளபதி சரத் பொன்சேகாவை சகல பதவிகளில் இருந்தும் நீக்க இராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் அதை அங்கீகரித்த ஜனாதிபதியின் நடவடிக்கையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நீதிமன்ற வழிமுறையில் உள்ளபக்கச் சார் பற்ற தன்மை, பகிரங்கத் தன்மை, நியாயம் சரத் பொன்சேகாவுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய இராணுவ நீதிமன்றத்திடம் இருக்கவில்லை என்பது தெளிவாக விளங்குகின்றது.

சரத் பொன்சேகாவின் ஓய்வூதியத்தை ரத்துச் செய்வதற்கு இராணுவ நீதிமன்றம் எடுத்த முடிவை ஐ.தே.க. வன்மையாகக் கண்டிக்கின்றது.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஒ-சி)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை விற்றுள்ளனர்.

இவர்களது வியாபாரத்துக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் அந்தப் பகுதியில் இராணுவத்தினரும் கடமையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் கடந்த செவ்வாய் அன்று நடைபெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தின் பின்னர் கொக்குவில் பகுதிகள் எங்கும் இராணுவத்தினர் சோதனை,காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சிங்கள வர்த்தகர்கள் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-10-6)

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு வந்துள்ளமையானது அந்தச் சேவை அமைப்புக்குப் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் சட்டத்தின்படி வெளிநாட்டவர் ஒருவர் நாட்டுக்கு வந்து 28 நாள்களுக்குள் தம்மை பற்றிய விவரங்களைப் பதிவு செய்தல் வேண்டும். எனினும் இலங்கை அகதிகளின் விடயத்தில் இது சாத்திய மில்லை என்பதால் அந்த பதிவுச் செய்யும் காலத்தை அகதிகள் குடிவரவுத் திணைக்களம் நீடித்துள்ளது.

(ஓ-சி)

## யாழ். குடாநாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அங்கு உரையாற்றுகையில்:-

யாழ். குடாநாட்டில் தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி வங்கியின் 6 ஆவது திட்டமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி இடையிலான தண்ணீர் விநியோகிக்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்காக 20 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியுள்ளது. மேலும் குடாநாட்டில் 7 வீதிகளின் புனரமைப்புக்கும் இறங்குதுறை புனரமைப்புக்கும் நிதி உதவி வழங்கி வருகின்றது. மற்றும் அரச திணைக்கள புனரமைப்புக்கும் 226 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்துவதற்கான வேலைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன. அத்துடன் நெடுந்தீவு துறைமுகத்தையும் புனரமைத்துத் தருமாறும் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

சுகாதார சேவைகளுக்கு 160 மில்லியன் ரூபா, போதனா வைத்திய சாலைக்கு 1,395.50 மில்லியன் ரூபா, விவசாயத் துறைக்கு 543.50 மில்லியன் ரூபா, சுய தொழிலுக்கு 100 மில்லியன் ரூபா, மீன்பிடித்துறைக்கு 1,123 மில்லியன் ரூபா, நீர்ப்பாசனத்துறைக்கு 2,810.38 மில்லியன் ரூபா, வீதி அபிவிருத்திக்கு 700 மில்லியன் ரூபா இன்னும் தேவைப்படுவதாக அவர் எடுத்துரைத்தார்.

இதற்குப் பதிலளித்த உப தலைவர், முதலில் இங்கு இருக்கும் ஊழியர்களை தான் பாராட்டுவதாகவும் அவர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் தொடர தான் வாழ்த்துவதாகவும் தெரிவித்தார். அத்துடன் தேவைப்படும் நிதியை வழங்குவது தொடர்பாக நாம் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-319)

வேலை வாய்ப்பு
அச்சக வேலை தெரிந்தவர்/
பழகவிரும்புபவர் தேவை.
(பெண்கள் மட்டும்)
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்.
0718474325

e.com
Walk in Interview
எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான நேர்முகத் தேர்வானது எதிர்வரும் 21-08-2010 நடைபெற உள்ளது. விரும்புவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையுடன் பி.ப 3.00 மணிக்கு நேரில் சமூகம் தரவும்.
Position : Receptionist cum Instructor
Salary : Attractive & Negotiable
Date : 21-08-2010 (Saturday)
Time : 03.00 p.m.

E.Com Computer Learning Center
No.95A Temple Road,
Nallur, Jaffna
T.P. 021-7429885

புதிய பிரிவுகள் ஆரம்பம்
90% Scholorship
Diploma Courses...
*MS Office *Accounting *Graphics 3D *Printing & Typing,
*Web Designing * Video Editing *AutoCAD *VB.net, LINUX, ICT, GIT, Kids Programs
International Courses...
Computer Engineering-USA,CIMA-UK, IELTS / Toefl, Cisco-CCNA,CCNP,ICDL-CAD, BCS,
Sun Java programmer-SCJP, Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo
Free ICDL,Hardware,English,Internet & Email
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 25.08.2010
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : www.mcsitcampus.org
Call 772395895

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org